ஸ்ரீ

ஸ்ரீரங்கநாதாயநம.

சிவபெருமான்

நாரதமாமுனிவருக்கு

சொல்லிய

# ஸ்ரீரங்கமகத்துவம்.

இவை,

உரையூர்-வித்யாநந்தபிர்மத்தால்

தமிழ்வசனமாகவெழுதியதை

இஃது

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

பி. நா. சி. கடைகாரியம்.

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாங்கல்.

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

சென்னை குயப்பேட்டை படைவெட்டம்மன் கோயில்வீதி 64.

P. N.

# சுகந்த மூக்குத்தூள்.

இந்த பெயர்பெற்ற சுகந்த மூக்குத்தூளானது நூதனமாய் கண்டு பிடிக்கப்பட்டதை வெகு பெயர்களால் வாங்கி உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரம் பெற்றிருக்கின்றது. இந்த மேலான பெருமைதங்கிய தூளினால் தீரும் வியாதிகளாவன:— ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத்தலைநோய், மண்டைக்குத்தல் கண்ணிலுண்டாகும் எல்லா வியாதிகளையும், தீர்ப்பதுடன் கண்டத்திற்கு மேற்பட்ட 69-வியாதிகளையும் மூளையைச்சார்ந்த வியாதிகளையெல்லாம் சொஸ்தப்படுத்திவைக்கும் எந்த மூக்குத்தூளும் இத்தனை பிரபல்யமுடையதாயும் முற்கூறிய வியாதிகளை கண்டிக்கக்கூடியதாயும் எவ்விடத்திலும் கிடைக்காது கீழ்காணும் கம்பெனியாரால் செய்யப்படுகிறது இந்த தூளானது சாதாரண புகையிலைத்தூளை 10-15-தடவை உபயோகப் படுத்துபவர் இந்த சுகந்த மூக்குத்தூளை 2-தடவை உபயோகிப்பதனால் 15-தடவை உபயோகிதபதைவிடமேலாய் காணப்படும் மூன்றுபைசா சாதாரண புகையிலை தூளுடன் இந்த சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிக்கை எடுத்து கலந்தால் எல்லாம் ஷை சுகந்த முண்டாகிவிடும். இதை அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் குடும்ப அவுஷதமாய் வைத்து உபயோகித்து வருகிறார்கள். இந்தத்தூளானது சாதாரண தூளைப்போல் 2-1-இரண்டொரு தினங்களில் தன் சுபாவக் குணமாகிய வாசனை, காரம் முதலியவைகளை விட்டுவிடாது. எக்காலமும் அதன் காரமும் வாசனையும் குணமும் தன்னைவிட் டகலாதபடி கார்த்துக் கொண்டே இருக்கும். இதை உபயோகிப்பதில் யாதொரு கெடுதியும் சம்பவிக்காது. எந்த கம்பெனிகளிலாவது. மருந்து கடைகளிலாவது, பொடிகடைகளிலாவது, வாங்குபவர்கள் பி. நா. என்பவருடைய சுகந்த மூக்குத்தூளை கவனித்து வாங்கவேண்டும்

பி. நா. சுகந்த மூக்குத்தூளை எங்கள் கம்பெனியிலும். கீழ்க்காணும் அட்ரசுடைய இடங்களிலும் வி-பி-மூலமாகவும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிரயம் புட்டி 1-க்கு 0 4 2 டஜன் 1-க்கு விலை ரூ. 2 8 0

வி. பி. சார்ஜ புட்டி 1-க்கு 0 3 0 வி. பி. சார்ஜபுட்டி 12-க்கு 0 8 0

ஒரேதடவையில் 12-டப்பி அதாவது ஒரு டெஜன் வாங்குபவர்களுக்கு விலை ரூபா 0 8 0

எமதுவிலாசம்.

பி. நா. சிதம்பரமுதலியார் அண்டு கோ.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு மதராஸ்.

ஸ்ரீரங்கநாதாயநம:.

# ஸ்ரீ ரங் க ம க த் து வ ம்.

காப்பு.

வெண்பா.

திருவரங்கமென்று தியானிக்கில்நோய்போம்
கருவரங்கமெய்தாக் கருத்தும்-பெருவரங்கள்
எல்லாருஞ்சித்திக்கு மெனநான்மறையுணரும்
நல்லார்வகுப்பர் நடந்து.

நூல்வரலாறு.

விருத்தம்.

அந்திநிறத்தெம்பிரான்முன்னாளினாரதனுக்கனுக்கிரகித்த
சிந்தைபெறும்ஸ்ரீரங்கமகத்துவமாமிக்கதையைவிளம்பினோரும்
சிந்தையுறப்படிகற்றோருங்கேட்டோரும்வரைந்தோருந்திருமணாளன்
கந்தமலர்ப்பதநிழற்கீழ்வைகுந்தத்தெந்நாளுங்களித்துவாழ்வார்.

அதிகவி.

அருமறையைக்கவர்ந்துவரிமகரவாரிதியினிற்சென்றன்றொளிந்த
பெருவலிதோளசோமுகாசுரனுமத்தவுணனைமுன்பிளந்துமீனத் [மை
திருவுருக்கொண்டறமாய்த்தம்மறையையுலகிடைவிரித்துச்சியர்தம்
பொருவிலருளிற்புரந்திவ்வரங்கத்திலறிதுயில்செப்புக்கபோற்றி.

நூல்.

## முதலாம் அத்தியாயம்.

சகலபுவனசம்ரட்சகராகியும் சர்வசீவ தயாபரராகியும் காளகண்டமூர்த்தியாகியும், காமதகனராகியும், திரிபுராந்தகராகியும், திருநேத்திரதாரியாகியும் மான்மழுவைத்தரித்தவருகியும் மனோன்மணிசமேதருமாயும், சிருஷ்டிதிதிசம்மார திரோபவ அனுக்கிரகமென்னும் பஞ்சகிர்த்தியகர்த்தாவாகியும் பரப்பிரமசொரூபருகியும் விளங்கப்பட்ட ஸ்ரீசதாசிவமூர்த்தியானவர் ஸ்ரீகயிலசபர்வதத்தில முப்பத்துமுக்கோடிதேவகணங்களும் நாற்பதெண்ணுயிரம் ரிஷிகணங்களும் நந்திமுதலாகிய அளவில்லாதசிவகணங்களும பதினெண்சித்தகணங்களும புடைசூழந்தக்கதாக ரதனசிம்மாசனத்திலகொலுவீற்றிருக்கின்ற சமயத்தில்.

பராசர் புண்டரீகர் அம்பரீஷர் வீஷ்மர் தாலப்பியர் ருக்குமாங்கதர் பிரகலாதர் அர்ச்சுனர் வசிட்டர் மாபலி விபீஷணர் என்று சொல்லப்பட்ட நாரதமுனியானவர் ஒருநாள் யதிதீவரமாகநடந்து

கயிலாயத்திற்குப்போய் சாம்பசிவ மூர்த்தியைக்கண்டு பிரதட்சண நமஸ்காரஞ்செய்து பதஞ்சலிவஸ்தராய் நின்றுக்கொண்டு ஓய் சுவாமி தேவரீர்முன்னால் அனுக்கிரகஞ்செய்தருளிய புண்ணியசரித்திரங்களினால் சொர்க்கமத்திய பாதாளமென்னும் திரிலோக விர்த்தாந்தங்களுந்தெரிந்து பூலோகத்திலுள்ள புண்ணியஸ்தல மகத்துவங்களும் முப்பத்திரண்டுமூர்த்தி மகத்துவங்களும் கங்கைமுதலான தீர்த்தமகத்துவங்களும் முநீஸ்வரர்களுடைய புண்ணிய சரித்திரங்களும் அடியேனறிந்து கிருதகிருத்திய னாயினேன்.

ஆயினும்தேவரீர் சோழதேசத்தில் காவேரிமகத்துவத்தைத் திருவாய்மலர்ந்தருளியகாலத்தில் பூலோகத்திலுள்ள விஷ்ணுஸ்தலங்களுக்கு ஸ்ரீரங்கஸ்தலமென்று ஒருதிவ்வியஸ்தலமிருக்கின்றது அந்தஸ்தலமகத்துவம் சகஸ்த்ரபணாமுடிகளையும் இரண்டாயிரம் நாவையுமுடைய ஆதிசேஷனாலும் நம்மாலுஞ் சொல்லமுடியாதென்று தேவரீர்திருவுளம்பற்றியருளிய வசனாமிர்தத்தைச் செவிவழியாகவுண்டு திருப்தியடையவேண்டுமென்று அன்றுமுதலின்றையவரையில் அதிகதாகமாயிருக்கின்றது ஆதலால் அடியேனுக்கின்னமொருதரம் அந்தஸ்தலமகத்துவமும் மூர்த்திமகத்துவமும் தீர்த்தமகத்துவமும் விகசிதமாய்த்தெரியும்படி யனுக்கிரகஞ் செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டுப்பரமேஸ்வரரும் சந்தோஷசித்தராய் அந்தநாரதமுனிவரைப்பார்த்து ஓய்நாரதமுனிவரே அந்தத்திவ்வியஸ்தலமகத்துவத்தை நம்மால்சொல்லிமுடியாதென்று முன்னமேசொல்லியிருந்தோமே ஆயினும் நம்மாலறிந்த மாத்திரஞ் சொல்லுகின்றோம் விசேஷமாகச் சொல்லவேண்டுமாகில் பதினாயிரம் தேவவருஷங்கள் செல்லும் உம்மாலுங்கேட்டுமுடியாது எமமாலுஞ் சொல்லமுடியாது ஆதலால் சங்கிரமாகச்சுருக்கிச்சொல்லுகின்றோம், நீர்கேட்பீராகவென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார் ஓய் நாரதமுனிவரே சோழதேசத்தில் காவேரிமத்தியில் சந்திரபுட்கரணி தீர்த்தத்தில் மகாலட்சுமிகரமாயிருக்கப்பட்ட ரங்கஸ்தலமென்கிற ஒருபுண்ணியஸ்தலமுண்டு அந்தஸ்தலத்திற்குப்போனவர் நரகத்தைப்பார்க்கவேண்டியதில்லை எமலோகத்திற்குப்போகவேண்டுவதில்லை அவர்களை மரணவேதனை வருத்தமாட்டாது மறுபடியும் அவர்கட்கு பலவகைப்பட்ட பிரவித்துன்பங்கள்நேரிடாது.

ஆகையினால்பூமண்டலத்தில் புத்திசாலியா யிருக்கின்றவர்கள் ஸ்ரீரங்கத்துக்குப்போகாமலும், காவேரி தீர்த்தஸ்தானஞ் செய்யாமலும் ஸ்ரீரங்க விமானத்தைத் தரிசிக்காமலும், ஸ்ரீரங்கநாயகரைச்

சேர்வைசெய்யாமலும், தங்களாலியன்ற மாத்திரம் அதிதிகளாகிப் பெரியோர்களுக்குத் தானதர்மங்கள் செய்யாம லிருக்கமாட்டார்கள் அதுவுமல்லாமல் தும்முறபோதும் நடக்கும்போதும் இருமுகின்றபோதும் கொட்டாவி விடுகிறபோதும் எச்சில் உமிகிறபோதும் சரீரத்தில் ஒருவிபாதி நேரிட்டபோதும் பாவிகளோடு சாவகாசஞ் செய்யும்போதும் ஒருபொய்வார்த்தை சொல்லுகிறபோதும் பாவிகளையநுசரித்துப்பேசும்போதும் மனோவாக்கு காயமென்னும் மந்திரகரணசுத்தியாய் ஒருதரம்ரங்காவென்று தியானித்துவசனித்தால் அவர்களுக்கு ஒரு அபாயமுண்டாகாது அல்லாமல் இரண்டுதரம் ரங்காவென்று தியானித்தால் அவர்கள்முற்பிறவிகளிற் செய்துள்ளபாவவினைகளெல்லாம சூரியனைக்கண்ட பனிபோலநீங்கிப் புண்ணியசாலிகளாவார்கள், அல்லாமலும் அவர்களைச் சத்தசாகரஞ்சூழ்ந்தஉலகமெல்லாங்கொண்டாடும்.

பின்னரும்ஆயிரம்யோசனை தூரத்திலிருக்கிறவனானாலும் அந்தஸ்தலங்களைநினைப்பானாகில் அந்தமகாபுருஷனும் அவன்வமிசத்தில் இருபத்தொருதலைமுறையிலுள்ள பிதிர்க்களும் பூர்வசன்மத்தில் செய்துள்ள சகலபாவகர்மங்களும் நீங்கிப் புண்ணியவான்களாவார்கள் எந்த தேசாந்தரத்தி லிருக்கிறவனானாலும் எந்த தீவாந்திரத்திலிருக்கிறவனானாலு மந்த மகத்வமாகிய இரங்கத்தல மிருக்கின்றதிசையைநோக்கி இரண்டுகைகளையுஞ்சிரசின்மேல் அஞ்சலியாகவைத்துக்கும்பிட்டு இரங்காவென்றுதியானஞ்செய்வானாகில் அவன் ஒருகாலத்திலும் பாவத்தை யடையமாட்டான் அதுவுமல்லாமல் சந்திரபுஷ்கரணித்தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து செபதப வநுஷ்டானங்களைமுடித்துக்கொண்டுஏகமனதாய்நின்று இரண்டுகைகளையுங்கூப்பி இரங்காவென்று சொல்லிக் கும்பிட்டானானால் அவன்ஒருபோதும் பாபத்தை யடையமாட்டான்.

இதுவுமல்லாமல் ஏகாதசிவிரதம் நிச்சயமாயிருந்து துளசிதீர்த்தம் சாப்பிட்டு அன்று ராத்திரிமுழுதும் அந்தபகவானுடைய கீர்த்தனைகளைப் பாராயணஞ்செய்கின்ற பரமபாகவதர்களின்பெருமையை இவ்வளவென்றளவிட்டு எவர்களாலுஞ் சொல்லிமுடியாது அவர்களை ஸ்ரீமந்நாராயண மூர்த்தியென்றறிந்து அவர்களுக்குச்சிசுவிடைசெய்து எக்காலமும்வணங்கவேண்டும்.

பிதிர்த்தேவதைகளில் ஒவ்வொருவரும் தங்களுக்குப் புண்ணியலோகப்பிராப்தி யுண்டாக்குவிக்கும்படி தங்கள் வமிசத்தில் ஒருசர்ப்புத்திரன் பிறக்கமாட்டானா அவன் வித்தைபுத்தி யறிந்தவனாகி இரங்கஸ்தலத்திற்குப்போய் காவேரிஸ்தானஞ்செய்து இரங்க நாயகிபாசமேதராய் ஆழ்வார்கள்முதலிய தாஸகூட்டங்கள் புடைசூழ்ந்து சேவிக்கத்தக்கதாக ஆதிசேஷசயனத்தில் திருக்கண் வளர்ந்தருளுகின்ற இரங்கநாயகரைச்சேவித்து ஒருபிராமணனுக் காகிலும் அன்னங்கொடுக்க மாட்டானா, அதற்குச்சக்தி யில்லாவிட்டாலு

ம் ஒருகாசாகிலும் கொடுக்கமாட்டாறு அதுவும் நேரிடாவிட்டாலும் திலதர்ப்பணமாகிலும் பண்ணமாட்டாறு அதுவுங் கிடையாவிட்டாலும் ஒருபிடிபுல்லாகிலும் பிடுங்கி ஒருபசுவின்வாயிற் கொடுக்கமாட்டாறு என்று நினைத்துத் தபஞ்செய்வார்கள்.

ஓப்காரமதரே இதுவுமல்லாமல் எமபுரத்தில்வாசஞ்செய்கின்ற — மதர்மராஜனானவன் தன்னுடையதொழில் குறைவுபட்டு தன்னதிகாரம் அடங்கிப்போய் நகரம் பாழாய்க் கிடக்கின்றபடியால் ஒருநாள் அவன் ஏகாந்தமாயிருந்துக்கொண்டு ஆலோசித்ததாவது என்னவென்றால்.

பூலோகத்திற்பிறந்திருக்கப்பட்ட சகலமனிதர்களும் இரங்கத்துக்குப்போகவேண்டுமென்று நினைத்தமாத்திரத்திலேயே அவர்கள் செய்த பாவங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோய் நம்முடையலோகத்திற்குவாராமல் புண்ணியலோகத்தை யடைகிறபடியால் இன்னம் நம்முடைய ஆக்கினை எங்கேசெல்லப்போகின்றது நம்முடைய அதிகாரத்தை யாரிடத்தில் செலுத்தப் போகின்றோம் தேவர்களோவென்றால் பூலோகத்திற்குப்போய் இரங்கத்தலத்தில் மனிதராகப்பிறக்கவேண்டுமென்று சர்வதா பிரார்த்திக்கின்றார்கள்.

புரட்டாசிமாதம் கிருஷ்ண பட்சத்திரியோதசியில் அந்தஸ்தலத்திற்குப்போய்பிதிர்தர்ப்பணம்பண்ணின பலத்தினால் அவனும் அவன்வமிசத்திலுள்ளவர்களும் பாவவிமோசனர்களாய்ப்பரமபதத்தை யடைகின்றார்கள்.

மார்கழிமாதமுழுதும் அந்தக் காவேரியிலும் சந்திரபுட்கரணியிலும்ஸ்நானஞ்செய்து ஏகமனதாய்நின்று இரங்கநாயகரையும் பரமபாகவதர்களாகிய தாசக்கூட்டங்களையும் சேவித்தால் அவனும் அவன் குலத்திற் பிறந்தபேர்களும் கிருதகிருத்தியர்களாய் பிறவிக்கடலை நீந்தி மோட்சகரையிற் சேருகின்றார்கள்.

ஆடிமாதம், ஆவணிமாதம், புரட்டாசிமாதம், ஐப்பசிமாதம் ஆகியஇந்நான்குமாதங்களும் அந்தஸ்தலத்திலே வாசமாயிருந்து அந்த தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவார்களாகில் அவர்கள் மகத்துவத்தை இன்னபடியென்று எவர்களாலும் அளவுபடுத்திச் சொல்லமுடியாது இதற்குவேறாகிய அனேகதிவ்வியஸ்தலங்களில் சகஸ்திரவருஷஞ்சரியாய் வாசம்பண்ணிதவஞ்செய்தவனுக்கு எந்த புண்ணியபலமுண்டாகுமோ அந்தப்புண்ணியபலமெல்லாமிந்த திருவரங்கமென்னும் திவ்வியஸ்தலத்தில் ஒருராத்திரி வாசம் பண்ணினவனுக்கு அந்தட்சணமே பலிக்குமதுவுமல்லாமல் அந்தஸ்தலத்திலிருந்து ஆயிரங்கோடி மகாபாவங்களைச் செய்தபோதிலும் அவர்கள்நமது எமபுரத்துவாசற்படி மிதிக்கிறதில்லையென்று வெகுவாய் விசாரமடைந்தான்.

கேட்டீரோ நாரதமுனியே இன்னமொரு அதிசயமுண்டு அதுவுஞ்சொல்லுகின்றோம் அதெப்படியென்றால் எவனாகிலும் இரங்கயாத்திரை போவேனென்று சொல்வானாகில் அவனைக்கண்டு பிடித்து அவனுக்கு உபசாரமாய் ஒருவேளை அன்னங்கொடுத்தால் அப்படிக்கொடுத்த புண்ணியபுருஷன் பூலோகத்திலுள்ளவரையில் தனகனவைஸ்வரியமான சம்பத்திற் குறைவில்லாதவனாய் புத்திர மித்திர களத்திராதிகளோடு சகலபோகங்களையநுபவித்து முடிவில் பரமபாகவதனாய் திவ்வியசரீரத்தைப்பெற்று சூரியமண்டலத்தைபேதித்துக்கொண்டுபோய் விரஜாநதிக்கு அக்கரையாகிய ஸ்ரீவைகுந்தத்தில் நித்தியாயிசுவர்களோடு சதாகாலமு மழிவில்லாத சுகத்தையடைந்திருப்பான் இன்னமும் அந்தத்தலத்தைச் சேவித்தபேர்களுக்கு ஒருநாள் தப்பாமல் நாளொன்றுக்கு மூன்றுதரம்பெரியோர்களுக்குப் பாத்திரதானம் பண்ணினவனுக்கு எந்தப்புண்ணியபலன் சித்திக்குமோ அந்தப்புண்ணியபலன் சித்திக்கும்.

அந்தஸ்தலத்திற் சொர்ணதானங் கொடுப்பதே விசேஷம் இல்லாவிட்டால் அதைப்பார்க்கிலும் பூதானம் கோதானம் வஸ்திரதானமுதலிய மகா தானங்களைப் பிராமணர்களுக்கு கொடுக்கின்றது மிகவும் உத்தமம் அதுவுமல்லாமல் அந்தமகாதலத்தில் வாசமாயிருந்து பெருமாளுக்கும் பக்தனாயிருக்கிறவர்கள் கையில் ஒருசெம்பு ஜலம்காவேரிதீர்த்தத்தில் மொண்டு கொடுப்பார்களாகில் மேற்சொல்லிய தானங்களைப்பார்க்கிலும மகாவிசேஷம் எந்த தீர்த்தங்களில் எந்நதிகளில் முழுகினபோதிலும் காவேரியையும் சந்திர புட்கரணியையும் மனதில்தியானித்து முழுகவேண்டும் மற்றநதிகளைத்தியானஞ்செய்காலும் தியானஞ் செய்யாவிட்டாலும் குற்றமில்லை அந்தக்காவேரியையும் சந்திரபுட்கரணியையுந் தியானிக்கிறபுருஷன் எந்தக்குலத்திற் பிறந்தவனாயிருந்தபோதிலும் அவனிடத்தில் பெருமாள் பரமப்பிரீதியாகவிருப்பார்.

இதுவுமல்லாமல் பெருமாள் ஒருகாலத்தில் இந்த மாயா பிரபஞ்சசஞ்சாரவாழ்க்கையிலகப்பட்டமாய்போலகப்பட்டுநின்று போகத்தினால்தடுமாறுகின்ற சீவராசிகளைப்பார்த்து சிலவசனங்கள் சொல்லியிருக்கின்றார் அஃதென்னவெனில் நீங்கள் இந்த மாயசம்பந்தமான சம்சாரபந்தத்தைவிட்டுப் பிரவிக்கடலைநீக்கி மோட்சத்தைச் சேரவேண்டுமானால் நமது துவாதசநாமங்களையுந்தியானித்து அஷ்டாக்ஷரமந்திரத்தைச்செபித்து இரங்கஸ்தலத்திற் காவேரிஸ்நானம்பண்ணுங்கோள் இல்லாவிட்டால்வெறுஞ்சலத்தையாகிலுமொண்டுபிராமணர்களுக்குக கொடுங்கோள் அதனால் புண்ணியசாலிகளாவீர்கள் அதுவுமல்லாமல் எவனாகிலும் இரங்கஸ்தலவாசியாகிய நம்மையும் சந்திரபுட்கரணியையும் காவேரிதீர்த்தத்தையும் பெற்றதாயையும்தகப்பனையும் குருவையும் நிந்திப்பானாகில் அவன் பிராமணனாயிருந்தபோதிலும் நீச்சனாய்ப்பிறந்து ரவுரவாதி நரகத்தையடை

வான் நீசனுயிருந்தபோதிலு மவன்நம்மிடத்தில் பத்திவிசுவாசமுள்
ளவனுயிருந்து அஷ்டாட்சரத்தைத் தியானஞ் செய்வானுகில் அவ
னேநமக்கு அறிபத்தனுய் விளங்குவான் மகாராசனுகப்பிறந்து தரு
மநீதிகள்தவறி பக்திவிசுவாசமில்லாமல் எந்நேரமும் இடைவிடாம
ல்அஷ்டாட்சரதியானம் செய்தபோதிலும் அவன் நமக்குத்தாசனு
மொட்டான் அவனுக்குப் பரமபதம்கிட்டாது, அவனுக்கு நரகமே
பிராப்தியாகுமென்று திருவுளம்பற்றியருளினுர்கேட்டீரோநாரதமு
னிவரேபின்னையும்நதிக்குள்மேன்மையுடையது காவேரிநதியும்விஷ்
ணுபத்தருக்குள் சிரேஷ்டமானவர் நீரும் தேவதைகளுக்குள் மே
லானவர்விஷ்ணுவும்வேதங்களுக்குள் விசிஷ்டமானது பிரணவமும்
எப்படியோ அப்படிபோல பூலோகத்திலுள்ள புண்ணியக்ஷேத்திரங்
களில்மகிமைபொருந்தியது இரங்கஸ்தலம்ஆகலால்அந்தஸ்தலத்தி
ல்விவேகிகளாயிருந்து வாசஞ்செய்தபேர்களுக்குக்கோஹத்திசிசுவ
த்திபிர்மத்தி ஸ்திரீ அத்திமுதலான சகல தோஷங்களும் நிவாரண
மாகும் அல்லாமலும் கள்ளுண்டல் இருடுதல் அசத்தியங்கூறுதல்,
கொலைசெய்தல்பாதாசனம்பண்ணுதல் என்றுசொல்லப்பட்ட குரு
ரமாகியபஞ்சமகாபாதகங்களும்பறந்துபோகும் அவர்கள்வமிசத்தில
மூவேழுதலைமுறையிலுள்ளபிதிர்க்களும்நரகத்தைவிட்டுநீங்கிப்புண்
ணியலோகத்தைப்பெறுவார்கள்.

ஆகையால்சார்வதா பாவக்கிருத்தியங்களையேசெய்து அருந்த
ல்பொருந்தலேபரமாகநினைத்துத் தருகின்ற பரமாசனங்களைப்பார்
த்து ஓப்பாபிஷ்டர்களேநீங்கள்ரங்காவென்றுசொல்லுங்கோள் இர
ங்கயாத்திரைசெய்யுங்கோள் காவேரியில் தினமானம்போய் முழுகி
ப்போகுங்கோள் உங்கள் பாபகர்மங்களெல்லாம்விடுதலையாகுமென்
றுபுத்திசாலியானவன்காருண்ணியமாகச்சொல்லவேண்டும் அப்படி
ச்சொல்லுகின்றவார்த்தையைச் செவிகொடுத்துமந்திரம்போல்நினை
த்துப்பயபக்திவிசுவாசத்துடனே கேட்டபேர்களுக்கு அவர்கள்ம
னமறிந்து செய்தபாவங்களும் அந்தக்ஷணமே நீங்கி பரமபாகவத
ராவார்கள்.

அல்லாமலும்நாம்இப்போதுஉமக்குச்சொன்ன புண்ணியகதை
யாகிய இரங்கமகத்துவத்தை கிரமமாகஎழுதிவிஷ்ணுபக்தர்களுக்கு
க்கொடுத்தவன் அயிஸ்வரியவானுவதுமன்றிதேகாந்தத்தில்புண்ணி
ய லோகத்தையும்பெறுவான்பிறகுஅவன் அந்தஸ்தலத்தில்புண்ணி
யவானுடைய வயிற்றில் பிள்ளையாகப்பிறந்து புத்திசாலியாய்இரங்
கநாயகரைசேவித்துக்கொண்டு புண்ணியபுருஷனுயிருப்பான்.

இந்தசரித்திரத்தைப்பயபக்திவிசுவாசத்துடன் படித்தபேருக்
கும்கேட்டபேருக்கும்வித்தையும்பத்தியும்கீர்த்தியும் அயிஸ்வரியமு
ம சந்தானசம்பத்தும் தீர்க்காயுசும் உண்டாகும் இதுவுமல்லாமல்
அமாவாசை-நவமி-திதி-துவாதசி-அஷ்டமி-ஏகாதசி இப்படிப் பட்

டபுண்ணியதினங்களில் இந்தபுண்ணியகதையைப் படித்தபேர்களுக்கும் விசுவாசமாகக்கேட்டபேர்களுக்கும் பூலோகத்திலுள்ள சகலபோகங்களையும் சுகசீவிகளாயனுபவித்துப் பின்பு தேவர்களாகப்பிறந்து தேவபோகங்களை யனுபவித்து வெறுத்து முடிவில் ஸ்ரீவைகுந்தத்தில் நித்தியாயிசுவரிகளாய் பிரகாசிப்பார்களென்று பரமசிவன் திருவுளம்பற்றியருள அதுகேட்டு நாரதபகவானும் அப்படியாவென்று ஆச்சரியமடைந்துமவுனமாயிருந்தார்

ஸ்ரீரங்கநாதாயநம.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாதாயநம.

## இரண்டாம் அத்தியாயம்

---

அறுசீர்-விருத்தம்.

அலைவெறியும்பாற்கடலினமத் தாகப்பொன்மலையையமைத்துவான
நிலைமலையைத்தாக்கிவாசுகிநாகமதைக்கயிறாப்பூட்டி
கலவர்குழாங்கடைபொழுதம் மலைகடலிலழுந்தாமற்புகழுமாமை
பலவுருக்கொண்டருள்புரிந்திவ்வரங்கத்தின்கண்வளரு நெடியோய்
போற்றி.

பிறகுநாரதபகவானவர் எழுந்து ஸ்ரீகயிலாச பதியாகிய பரமேஸ்வரருக்குச் சாஷ்டாங்கதெண்டன் சமர்ப்பித்துஇரண்டுகைகளையுஞ் சிரசின்மேல்வைத்துக் கும்பிட்டுநின்று ஓய்சுவாமிதிரிபுராந்தகா தீனரட்சகா பார்வதிசமேதா பரமதயாளாவென்று பலவாறுகத்தோத்திரஞ்செய்து தேவரீர் இப்போது அனுக்கிரகஞ் செய்தருளிய புண்ணிய சரித்திரத்தைக்கேட்டுச்சந்தோஷித்தனாகினேன் அதிற்சம்சயமில்லை ஆனாலும் இன்னமும்அந்தச்சரித்திரத்தைக்கேட்கும்படி ஆசையாயிருக்கின்றது ஆகையால் அந்தஸ்தலத்தில் ஸ்ரீரங்கவிமானமும் ஸ்ரீரங்கவிக்கிரகமும் சந்திரபுட்கரணியும் எப்படியுண்டாச்சுதோ அந்தவிர்த்தாந்தத்தை அடியேனுக்கு விவரமாகதிருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய பரமசிவன் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

எப்படியென்றால் கேட்டீரோ நாரதரே அந்தத் தலத்தினுடைய பெரும்பிரதாபமும் அளவிட்டுச்சொல்லுவோமாகில் பதினாயிரந் தேவவருஷஞ் செல்லுமென்று முன்னமேசொல்லியிருந்தோமே ஆனபோதிலும் நீரேகேட்கவேண்டுமென்கிற ஆசையாயிருக்கிறதென்றுசொல்லுகின்ற முறைமையினால் இன்னம் எடுத்துக் கூறுகின்றோம் நீர் சாவதானமாய்க் கேளும பூர்வத்தில் நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நாலுலட்சஞ் சீவபேதங்களாயுள்

ன சகல சராசர உயிர்களும் பிரகிருதியி லிருந் துண்டாகி மறுப
டியும் இந்தப்பிரகிருதி யிற்றானே லயமாகி ஒருரூபமுந்தோற்றாமல்
காடாந்தகாரமாயிருந்தது அப்போது மகாவிஷ்ணுவாகியபெருமா
ள் ஒருவர்மாத்திரம்பிரளயகாலசமுத்திரத்தில் ஒரு சிறுகுழந்தை
போல்வடபத்திரசயனத்திலிருந்து நெடுங்காலம் பரமயோக நித்தி
ரைசெய்து அதற்குமேல திருக்கண்விழித்துப் பார்த்தருளினர்.

அப்போது எங்கவிடத்திலுங்காடாந்தகரமாய்ஒன்றுந்தோன்
றாமலிருந்தது அதுகண்டுஒருஜீவராசிகளையுங்காணோம்ஒ
ருதேவதைகளையுங் காணோமென்று சற்றுநேரம் திருவுளஞ்செய்
பிறகுசகல புவனசராசரங்களும் தம்முடைய வயிற்றிலதான அட
ங்கியிருக்கின்றதென்று யோகத்திருஷ்டியினலறிந்து சந்தோஷமா
யிருந்தார் அந்தச்சமயத்தில் தேவனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியி
னுடைய நாபிஸ்தானத்திலிருந்து ஒரு தாமரைப்புட்பம் பிரகாசித்
து நின்றது அந்தத்தாமரைபுட்பத்தின இதழ் ஆயிரத்தெட்டுமாற்
று தங்கம்போலும் அதனகொடி நவரத்தின கசிதம்போலும அத
ன் முள்ளுகள் பவளத்துண்டம் போலும் விகசிதமாயிருந்தது அ
ந்தக்கமலத்தி லிருந்து சகல லோகங்களையும் சிருஷ்டிக்கப் பட்ட
பிரம்மதேவனுண்டாகி வெளியிலவந்தான அப்படிவந்தபிரம்மாவா
னவன் நாலு திக்கும் ஏறெடுத்துப் பார்த் திவ் டத்தில் வேறொரு
பிராணிகளு மில்லாமல் தானமாத்திரம் ஒண்டியா யிருப்பதால் பய
ப்பிராப்தியடைந்து பிரமித்துக்கொண்டிருந்தான் அந்தவேளையில்
மகாவிஷ்ணுவானவர் குருடன்கைக்கோல்போலவும் தரித்திரன்கை
யில் அகப்பட்ட திரவியம்போலவும் தீராப்பிணியாளன் எதிர்ப்பட்
டசஞ்சீவி பர்வதம்போலவும் ஆகாசமார்க்கமாய் சீறலென்றுபுறப்
பட்டு ஒரு அம்சபட்சியாக ஆதித்தமண்டலம் போலும் மகாமேரு
பர்வதமபோலும் பிரகாசித்துக்கொண்டு அந்தப்பிரமதேவனுக்குமு
ன்னே வந்து நின்றார்.

அதுகண்டு பிரம்மதேவனும் ஆச்சரியமடைந்து அந்தஅம்சசொ
ரூபியைப்பார்த்து நீயாரென்றுகேட்க அந்தவார்த்தைக்குப் பதில்
அம்சசொரூபியும் தோம்தாவென்றுசொல்லியருள அன்றுமுதல் தக
ப்பனானவன் பிள்ளைக்குபேரிட்டதுபோல் பிரமனுக்குத் தோம்தா
வென்று பேருண்டாச்சுதபிறகு அந்தஅம்சரூபியான பெருமாள்பி
ரமதேவனைப்பார்த்து நாம் ஹரியென்று திருவுளம்பற்றியருளினர் அ
துகேட்டவுடன் பிரமதேவன சகலபயங்களுமுநீங்கிச் சந்தோஷித
தனாய் அந்தமூர்த்திக்கு சாஷ்டாங்க தெண்டம்சமர்ப்பித்து சுவாமி
தேவரீர்எனக்குஎன்னபுத்திகட்டளை யிடுகிறீர்இனிநான்செய்யவே
ண்டியகாரிய மென்ன அதைத்திருவுளமபற்றி யருளவேண்டுமென்
றுவிண்ணப்பஞ் செய்ய அதுகேட்டு விஷ்ணுவாகிய அம்ச ரூபியும்
சந்தோஷமாய் அந்தப்பிரமதேவனைசமீபத்திலழைத்து மகா அன்
புடன் பிரணவமந்திர மெங்கிறஏகாட்சரத்தை மாத்திரம் உபதேச
ம்பண்ணி நீஇந்தமந்திரத்தைமாத்திரம் ஜெபம்செய்துகொண்டிரு
வென்றுகட்டளையிட்டு அந்தரமார்க்கமாகிமறைந்துபோய்விட்டார்

அப்பால் பிரமதேவனும் அந்தப்பிரணவ மந்திராட் சரத்தை அரியென்னும் அட்சரத்தோடுசேர்த்து மூன்றட்சரமாக்கி இடைவிடாமல் ஜெபஞ்செய்யத்தொடங்கினான் இப்போதும் வேதப்பிரானஞ்செய்கின்றவர்கள் பிரமத்தி அந்தமூன்றட்சரத்தையும் உச்சரித்து அப்பால் சாங்கமாகவே வேதப்பிரானஞ் செய்கின்றார்கள் அப்படி பிரமத்திலுச்சரித்து பிறகுவேதப்பிரானஞ் செய்தால் அதில் என்ன அபசாரம் நேரிட்டபோதிலுந் தோஷமில்லை மேலும் இப்போது ஒருவன் கிழக்குமுகமாய் நின்று அரிஅரி என்றுசொன்னால் அவன்செய்தசகலதோஷங்களும் நிர்தோஷமாகும் அவனை எந்தப்பாவங்களுமணுகாது.

கேட்டீரோ நாரதரே அப்பால்பிரமதேவனும் தாமரைபுட்பத்தின் மேலிருந்து தாரகமாகிய மூன்றட்சரத்தையும் செபித்துக்கொண்டு ஆயிரம்வருஷகாலந்தவசுபண்ணி அந்தபேர் மகிமையினால் காயத்திரி மந்திரங்களையுண்டாக்கினான் அதன்மகிமையினால் முதல்பாகத்தில் அவன்முகத்திலிருந்து பூலோகமும் அக்கினிக்ஷேத்திரகாமமும் ராசத்துக்குவேண்டிய ஒன்பதுமந்திரங்களும் தேவதைகளில் அக்கினிதேவனும் காயத்திரிசெபங்களும் மனிதர்களில் பிராமணர்களும் நாலுகால் மிருகங்களில் வெள்ளாடுகளு முண்டாயின அப்பால இரண்டாவதுபாகத்தில அவன்கையிலிருந்து தேவலோகமும் சாமவேதமும் அசுரர்களும் எக்கியத்துக்குச் சாதகமான பஞ்சாட்சரங்களும் தேவதைகளில இந்திரனும் மனிதர்களில் க்ஷத்திரியர்குலம் நாலுகால்மிருகங்களிற் குறும்பாடுகளு முண்டாயின அதபால்மூன்றாவதுபாகத்தில் அவன் அடைகளிலிருந்து அவருக்குப்பேதசோமயாகமும் தேவதைகளில் அசுவனிதேவதையும் எக்கியங்கள செய்யவேண்டிய பதினெண்பிரீதிகளும் சப்தமந்திரங்களும் மனிதர்களில் வைசியர்களும் நாலுகால்மிருகங்களும் பசுக்களு முண்டாயின அப்பால் நாலாவதுயாகத்தில் அவன்பாதங்களிலிருந்து அதர்வணவேதமும் எக்கியத்திற்குவேண்டிய இருபத்தொரு மந்திரங்களும் முப்பத்திரண்டு அட்சரங்களும் மனிதர்களில் சூத்திரர்களும் நாலுகால்மிருகங்களிற் குதிரைகளுண்டாயின.

இப்படிசகல புவனசராசரங்களையுந் தபோபலத்தினால் சிருஷ்டிபண்ணின அந்தப்பிரமாவினுடைய காதுகுறும்பிகளிலிருந்து ராஜசகுணசம்பந்தமான கயிடவனென்னும் ராட்சதனபிறந்து சகலலோகங்களிலும்புகுந்து நிர்த்தூளியாக்கிவிட்டு மறுபடியும் பிரமாவிடத்திற்குவந்து நாலுவேதங்களையுந் திருடிக்கொண்டுபோய் சமுத்திரத்தில்முழுகப்போனார்கள் கேட்டீரோ நாரதரே அப்பால்இந்தப்பிர்மதேவன் வேதங்களைப்பறிகொடுத்தபடியினால் ஒன்றுந்தெரியாத மூடனைப்போல நாலுதிக்குந்திசைத்துப்பார்த்து ஒன்றுந்தோற்றாமல் பிரமைகொண்டவனாய் திரும்பவும் தான்வாசமாயிருக்கப்பட்ட தாமரைப்புட்பத்தின் கொடிவழியேயிறங்கி அந்தக்கொடியின்வேரைக்கண்டு பிடிக்கமாட்டாமல் மயங்கி அந்தக் கொடியிலுள்ள கூர்மையான முட்களினால் கிழிபட்டுத் திரும்பிமறுபடியுந் தன்

னுடைய யதாஸ்தானமாகிய தாமரை புட்பத்தின்மேல் வைத்து உட்கார்ந்துக்கொண்டு இனியென்னசெய்கிறதென்று வாய்விட்டழுது புலம்பி தான் இந்தச்சமுத்திரத்திலாகிலும் விழுந்து செத்துப்போகின்றேன் செத்துப்போகின்றேனென்று கூச்சலிட்டான்.

அப்போது திருப்பாற்கடலில வடபத்திர சயனத்தில் அறிதுயில்செய்துக்கொண்டிருக்கிற விஷ்ணுவுக்குத்தெரிந்து ஓஓ இதேது மோசம்வந்ததென்று திடுக்கிட்டெழுந்திருந்து ஒருமச்சரூபமாய்ஓடிவந்து ஓய்! பிரமாவே நாம்வருகிறோம் நீபயப்படாதே பயப்படாதேயென்று அபயஸ்தங்கொடுத்து சமீபத்தில்வந்து அவன் சரீரத்தைத்தடவிக்கண்ணீரைத்துடைத்து அவனுக்குபலவிதமான தேறுதல்சொல்லி அப்பா நானுனக்குத்தகப்பன நீயெனக்குப் பிள்ளையாகையால் நீபறிகொடுத்துவிட்ட வேதங்களை நானேபோய் தேடிக்கண்டுபிடித்து வருகிறேன் இவ்விடத்திற்றானே நீபயப்படாமலிருவென்று அவனை அங்கேநிறுத்திவிட்டுமச்சசொரூபமாய்வந்த விஷ்ணுவானவர்குதிரைமுசமும் மனிதசரீரமுமான திவ்வியரூப மெடுத்து மதுகைடவாகள் எனனும் ராட்சதர்களிருக்கு மிடத்திற்குப் போய் அவர்களைக்கண்டு அவர்களோடு சற்றுநேரம் சண்டைசெய்து போராடி அவர்களைக் கொன்றுவிட்டார்

பிறகு அந்த நாலுவேதங்களையும் எடுத்துக்கொண்டு யதாரூபமாய் மகாசந்தோஷ சல்லாபவினோதமாகவே தவவடிவமாயிருக்கிற கருடாழ்வார்பேரில் எழுந்தருளச்சதுர்ப்புஜங்களிலும் சங்கு சக்கரம் கோதண்டம் தண்டமவாள் என்னப்பட்ட பஞ்சாயுதங்களைத்தாங்கிக்கொண்டு கவுஸ்துவாபரணமும் வனமாலிகையும் பீதாம்பரமும் பிரகாசிக்கக் கோடிசூரியர்உதயமானதுபோல லட்சுமிசமேதாய் வேதங்களைப்பறிகொடுத்து விட்டோமேயென்று பிரலாபித்துக்கொண்டிருக்கிற பிர்மாவும் பெதிரேவந்து அந்தவேதங்களைக் கொடுத்து அப்பாமகனே நான் உபதேசம்பண்ணாமல் வேதங்களை உன்கையிற் கொடுத்தபடியினாலே நீபறிகொடுத்துவிட்டாய் மறுபடியும் நான்போய் அந்தராட்சதர்களைக்கொன்று வேதங்களைக்கொண்டுவந்தபடியினால் உனக்குக்கிடைத்தது இல்லாவிட்டால் உனக்குக் கிடைக்கமாட்டாது ஆகையினால் இனியாகிலும் நான் முன்னமே உபதேசித்திருக்கின்ற பிரணவமந்திரத்தையும் பயபக்தி விசுவாசத்தோடு தியானித்துக்கொண்டு பத்திரமாயிரு.

இந்தவேதங்கள் குருவுபதேசமில்லாதவர்களுக்குப் பலிக்கமாட்டாது குருபத்தியாயிருந்து குருகடாட்சம் பெற்றிருப்பார்களாகில் அவர்களுக்குப் பலிக்கும் குருபக்தி செய்கிறவன் நீச்சனாயிருந்தாலும் அவன் பிராமண வம்சத்திற்பிறந்து வேதத்தியானஞ்செய்து பரமபாகவதனாவான் பிராமணகுலத்திலேபிறந்தும் வேதாத்தியானஞ்செய்யாமலிருந்தால் அவன் பிரமஹத்திதோஷத்தையும் சுராபானஞ்செய்த பாதகத்தையும் அடைவான்வேதங்களைசிலநாள் அப்பியாசித்து பிற விட்டுவிட்டால் அவன் கெர்ப்பத்திலிருக்கிற சிசுவைக்கொன்ற தோஷத்திற்போவான்.

வேதங்களைப்படித்தும் அநேக யாகாதிகிருத்தியங்கள் செய்தும் என்னிடத்திலும் குருவினிடத்திலும் பக்திவிசுவாசமில்லாமலிருப்பானாகில் அவன் நண்டாமிருகமாய்ப்பிறந்து பிரதிஷ்டனாகிப் போவான் அவன் ஒருக்காலும் கரையேறுகிறதில்லை அவன் வெகு பிறவிகளிற் பிறக்கவேண்டும் அப்படிப் பிறந்தாலும் மகாயிழிவான பிறவிகளிற்பிறந்து பாபகிருத்தியங்களையேசெய்து சகலமானபேர்களாலும் நிந்தனைசெய்யப்பட்ட பாபிஷ்டனாய்ப்பிறந்து கல்லாய்ப் புழுவாய்ப்பிறந்து நெடுங்காலங்குயவன் திகிரியைப்போலப் பலபிறவிகளிலுஞ்சுழன்று கிஞ்சித்தமிலும் ஒப்பில்லாமல் திரியவேண்டும் என்னிடத்திற்பக்தியில்லாமல் சகலவேதாந்த சாஸ்திரபுராணயிதிகாசங்களை விடைவிடாமற்படித்து அவற்றினர்த்தங்களை கசடறவாராய்ந்தறிந்தவனையும் அவ்வளவினால் பயனென்றுமதியாமல் என்னிடத்தில்மாத்திரம் பக்திவிசுவாசமாயிருக்க ஒருபுருஷனையும் சீர்தூக்கிப் பார்க்குமளவில் என்னுடைய பக்தனே அதிகமேன்மையுடையனாவான்.

என்னிடத்தில்பக்தியில்லாமல் சகலசாஸ்திரநிபுணனாயிருந்தாலும் அவன் சண்டாளனாய்க்கிராதகனாய்ப்பிறப்பான் என்னிடத்திற் பக்தியுள்ளவன் கீழ்மையான பஞ்சமகுலத்திற்பிறந்தவனாய் இருந்தபோதிலும் அவனேபிராமணன் அவனேபரமபுருஷன் அவனேபாக்கியவான் அவனேபுண்ணியவான் அவனேயோக்கியமானபரமமுத்தன் அவனேபரமஞானி அப்படியில்லாமல்பிராமண குலத்திற்பிறந்து நான்குவேதங்களுமுணர்ந்து தானதருமம் யாகாதி கிருத்தியங்கள் முதலான சத்கர்மங்களைக்குறைவில்லாமல் நடத்துகின்றவனானாலும் என்னிடத்தில் பக்தியில்லாதவனானால் அவனே நீசனாவான்.

ஓய்பிரமாவே நீஎன்னிடத்தில் சதுர்வேதம்உபநிடதங்கள் அர்த்தசாஸ்திரங்கள் சிற்பசாஸ்திரங்கள் சோதிடசாஸ்திரங்கள் இது முதலானசகலசாஸ்திரங்களுந் தெரிந்துகொண்டால் ஆகையால்இனி கின்னரர்கிம்புருடர்கந்தர்வசாத்திய வித்தியாதரர்களானசகலதேவதைகளையும் மனிதர்களையும் சீவராசிகளையும் சொர்க்க நரகங்களையும் அவரவர்களுக்குத் தகுந்தலோகங்களையும்போகங்களையும்உண்டாக்கி அவரவர்கள் தாரதம்மியத்திற்குத்தகுந்த வர்ணாச்சிரம தர்மங்களையும் நடப்பித்தருளென்று பிரமதேவனுக்கு கட்டளையிட்டருளி ஸ்ரீமந்நாராயணமூர்த்தி கருடவாகனரூடராய் வைகுந்தத்திற்கெழுந்தருளினாரென்று பரமசிவன் திருவாய்மலர்ந்தருள அது கேட்டு நாரதபகவானும் பாக்கியம்பாக்கியமென்று பரமசிவனுக்கு நமஸ்காரஞ்செய்து ஆனந்தபரவசப்பட்டிருந்தார்.

இரண்டாம் அத்தியாய முற்றிற்று.

ஸ்ரீரங்கநாதாயநம.

## மூன்றும் அத்தியாயம்.

---

### துதிகவி விருத்தம்.

புவியதனைப்பாயதாய்ச்சுருட்டிப்போய்ப் பாதாளத்திற் புகுந்தபெக்கண், அவுணனுயிர்குடித்திடுமைப்பி னப்புவியைமுன்போ லுண்டாக்குமாறு, நவமுறமொண்பிறைக் கோட்டுப் பன்றியுருக்கொண்டருளிய நாதாபோற்றிப் பவகற்றுமரங்கத்திற் பாம்பினை மேற்றுயில்கூறும்பரம்போற்றி

அப்பால்நாரதபகவான்எழுந்துநின்று ஸ்ரீகயிலாசபதியாகியபரமதேவன் சிருஷ்டிபண்ணின கிரமங்களையும் அவனுக்கு ஸ்ரீமகாவிஷ்ணுசெய்த அநுகூலங்களையும் விவரமாய்த் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டு பரமசிவமூர்த்தியுஞ்சந்தோஷமடைந்து நாரதரைப்பார்த்து நீரே இவ்வளவு அபேட்சையாய்க்கேட்கின்றபடியால் அந்தப்பிரமதேவன்போய் பெருமாள் கட்டளை யிட்டபடியே அனேககாலம் தவசுசெய்துக்கொண்டிருந்தார் பிறகு சகலபுவனங்களையும் சிருஷ்டிசெய்து சோதிட நூலைப் பார்த்தவிடத்தில் தேவேந்திரனுடைய ஆயுசும் அதிகாரமும் போகபாக்கியங்களும்சிறிதுநாளில் நசித்துப்போகுமென்றுதெரிந்து இன்னுமற்றுமுள்ள யட்சகின்னர கிம்புருட சித்த வித்தியாதரகணங்களுடைய ஆயுசும் ஐசுவரியமும் மனுஷர்களுடைய அர்ப்பஆயுசும் போகபாக்கியமும் தம்முடைய காலவளமும் இம்மட்டென்றறிந்து கொண்டுநாம் இதுகளையெல்லாம் பகவானுக்கிரமமாகதெரிந்துகொள்ளவேண்டுமென்றும் உறுதிகொண்டு அதிககாலமாய் திருப்பார்கடலுக்குச் சமீபத்தில் போய்நின்று வெகுகாலந் தவசுசெய்தான் கேட்டீரோநாரதமுனியே அப்படிநெடுங்காலந் தவசுபண்ணின பிர்மதேவனுடைய தவசுக்குத்திருவுளமிரங்கி மகாவிஷ்ணுவானவர் கூர்மாவதாரங்கொண்டெழுந்தருளிவந்து பிரமதேவனுக்குத் தரிசனங்கொடுத்தருளினார் அப்படிகூர்மரூபியாய்வந்த பகவானுக்குப்பிரமதேவன் அநேகவந்தனைவழிபாடுகள்செய்து சுவாமிதேவரீர் அடியேனிமித்தமாய் எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத் தருளியது உண்மையாகுமானால் உம்முடைய எதார்த்தசொரூபத்தைப் பிரதியட்சமாகக்காண்பித்தருளவேண்டும் அடியேன் இதுவரையிலுந் தேவரீருடைய நிசசொரூபத்தைக்கண்டு தரிசனஞ்செய்ததில்லை இப்போதாகிலும் உமது நிச சொரூபத்தைக் காண்பித்தருள வேண்டும் துவாதச நாமங்களையும் கொண்டாடி துதித்தா னதுகண்டு கூர்மரூபி யாகிய ஸ்ரீமந் நாராயணரும் தேவனைப்பார்த்து வாரும்பிள்ளா

ய்பிரமாவே உன்னைப்போலொத்த பிர்மாக்கள் அநேகம்பேர் வந்தாலும் என்னுடைய நிசரூபத்தைக் கண்டுபிடிக்கமாட்டார்கள் நான் நினைத்தமாத்திரத்தில் அநந்தமாயிரம் பிர்மாண்டங்களையும் அநந்தமாயிரம்பிர்மாக்களையும்பிறக்கவும் இறப்பிக்கவுங்கூடும்

ஆனபோதிலும் என்னுடைய பக்தஜனங்களாய் இருக்கிறபேர்கள் என்னுடைய நிசச்சொரூபத்தைக் காணவேண்டுமென்றுநினைத்த அந்தக்கணமே அவர்கள்நிசச் சொரூபத்தைக் கண்டு தரிசிப்பார்கள் மற்றபேர்கள் எப்படிப்பட்ட வல்லவர்களாலும் அவர்களால் என்னைக்கண்டு தரிசிக்கமுடியாது பக்தசனங்களைரட்சிக்குநிமித்தம் அநேகம் அவதாரங்கள் எடுப்பேன அல்லாமலும்மச்சமானது பார்வையினால்கூர்மமானது தியானத்தினாலும் சமமானது ஆலிங்கனத்தினாலும் அதனதன் சிசுக்களை அதனதனுருப்படுத்திவர்த்திக்கச் செய்கிறது போலநானுன்னையுருப்படுத்திவர்த்திக்கச்செய்கிறதுபோல நாமுன்னையுருப்படுத்தி வர்த்திக்கச்செய்யுநிமித்தம்மேற்சொல்லியமூன்றுவங்குளிலும் உனக்குத்தரிசனங்கொடுத்து பிரணவ மந்திராட்சரங்களையும்உபதேசஞ்செய்து நீசெய்தடாகங்களிற்றுனே ருக்கு எசர்சாம அதர்வணமென்னுஞ்சதுர்வேதங்களையும் உண்டாக்கிக்கொடுத்து உனக்குப்பிரமஞானம்ஐயந்திரிபில்லாமல பிரகாசிக்கும்படி அசுவமுகமும்மனுஷசரீரமாய்வந்துபிரத்தியட்சமானேன் இப்படிப்பட்ட மகிமையெல்லாங் காண்பித்தும் உனக்கு என்னுடைய நிசசொரூபம் கரதலாமலகமாய் பிரகாசிக்காதபடியினால் முன்னமே நான் உனக்குபதேசித்து வைத்த பிரணவ மந்திரத்தை அஷ்டாக்ஷரத்துடன் கூட்டிச் செபஞ்செய்துக்கொண்டிரு அப்படிச்செய்வாயாகில் உனக்குச் சகல வல்லபங்களு முண்டாகும் சகல வேதாந்த ரகசியங்களும் வெளிப்படும் இந்தமந்திரத்தைச் சதாகாலமும் பிரீதியுடன் செபித்துக் கொண்டிரு பரமபாகவதர்கள் எப்போதும் என்னைவிட்டுப்பிரியாமல் சகலசம்பிரமத்துடனே வைகுந்தத்தில்நித்திய திருப்புடையவர்களாய்வாழ்ந்திருந்தார்கள் பூலோகத்தில் இருக்கின்றபோதும் அவர்கள் சகலபோகபாக்கியங்களிலும் குறைவில்லாதவர்களாகவேயிருப்பார்கள் ஆகையினால்நீயும் அஷ்டாச்சரத்தை இடையுறாமல் உச்சரித்துக்கொண்டிருவென்று கட்டளையிட்டு பகவானுடைய ஸ்ரீவைகுந்தத்திற் போய்விட்டார்.

கேட்டீரோநாரதரே அப்பால் பிரமதேவனும் பகவானுடைய வாக்கியத்தைச்சிரசாகவகித்து அஷ்டாட்சரஜெபம் பண்ணிக்கொண்டு மறுபடியும் ஆயிரம்வருஷந்தபம்பண்ணினான் அப்படித்தவஞ்செய்த பிரமாவினுடையதபசுக்குத்திருவுளமிரங்கி ஆதிசேஷசயனராகியஸ்ரீ

மந்நாராயணமூர்த்திகடாட்சித்தபடியால்திருப்பாற்கடல் மத்தியிலிருந்து ஒருதிவ்வியவிமானம் தகத்தகாயமாய் சகஸ்திரகோடி சூரியப்பிரகாசம்போல் பிரகாசித்துக் கொண்டு அந்தர மார்க்கமாய் அதுதெரிந்துபிர்மதேவனும் தபசுநிலைவிட்டெழுந்துநின்று இந்தவிமானம்வருகிற வைபவத்தைக்கண்டு அதிசயமடைந்துமகாபக்தியுடனேதோத்திர நமஸ்காரஞ்செய்து அந்தவிமானத்தை உற்றுப்பார்க்குமளவில் ஸ்ரீவைகுண்டவாசிகளாயிருக்கிற அனந்தரும் ஜனகாதியோகீஸ்வரர்களும் இன்னும் சத்தியலோகவாசிகளாயிருக்கிற சகல தேவகூட்டங்களும் யட்சகின்னரர்கிம்புருடகாந்தர்வசித்தவித்தியாதர கூட்டங்களும்சகல ரிஷிகூட்டங்களும் பிரகாசித்திருந்தார்கள் ஓய்நாரதமூனிவரே அதில்நீருமிருந்தீர்.

அப்படிப்பட்ட ஸ்ரீரங்கவிமானத்தை வேதசொரூபியாகிய கருடாழ்வார்முதுகில் தாங்கிக்கொண்டு ஆதிசேஷன் முத்துசரங்களால் அலங்கரித்த வெண்பட்டுக் குடைகவித்துக் கொண்டுவர விஷச்கசேனர் பொற்பிரம்பினால் சந்தடிவிலக்கிக் கட்டியங்கூறிவர சந்திரசூரியர்கள் இருவரும்வெண்சாமரை வீசிவர ஓய்நாரதரே நீரும்கிம்புருவரும் கந்தர்வர்களும் கீர்த்தனைகள்பாடிவர இன்னுமற்றுமுண்டான தேவரிஷிகள் அனைவரும் அஞ்சலிபஸ்தர்களாய் நின்றுசகஸ்திரநாமங்களையும் புகழ்ந்துவர தேவேந்திரனும் தேவர்களும்புஷ்பமாரிபொழிந்துவர ஸ்ரீ அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகியும் விளங்கப்பட்ட ஸ்ரீரங்கநாதர்வந்தாரென்று திருசின்னங்களூதிவர பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தேவதுந்துமியும் அண்டகடாகங்களெல்லாஞ் செவிடுபடும்படி தாம்தாமென்று முழங்கிவர இவ்வகைப்பட்ட சம்பிரமங்களுடனே ஜெயம் ஜெயமென்று பூமியிற் கொண்டுவந்து இறங்கினர்.

அதுகண்டுபிர்ம்மதேவனும் அடியற்றமரம்போற் பூமியில்விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவனுடைய நாலுமுகங்களாலும் நாலுவேதங்களையும் பாராயணஞ்செய்துகொண்டு ஆனந்தப்பரவசனாய் நின்றான் அப்போது அந்தவிமானத்துடனே வந்த கட்டியக்காரர்களாகிய பொற்பிரம்புக்காரர்களில்சிரேஷ்டரான சுனந்தரானவர் பிர்மதேவனைப்பார்த்து வாரும் பிர்மதேவரே நீர்செய்த தபோமகிமையினால் அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகிய ஸ்ரீமன்னாராயணருடைய கடாட்சத்தினால் வேதசாரமாகிய மூன்றெழுத்து மோருருவமாகப்பிரகாசிக்கின்ற பிரணவமந்திரமே இந்தவிமா

த்திரார்த்தமாய் விளங்குகின்ற பராபரவஸ்துவே ஸ்ரீரங்கநாயகராகவும்தோற்றப்பட்டன உம்முடையதபஸினால் பூலோகத்திலுள்ள அசிபத்தர்களனைவரும் இந்தவிமானத்தைச்சேவித்துக் கரையேறுவார்கள் அதற்குச் சந்தேகமில்லை இதோ அந்தவிமானத்து மத்தியில் பிரணவசொரூபியாயிருக்கின்ற அரிசர்ப்பசயனத்தில்மகாவைபவத்துடன் பக்தசனங்களை ரட்சிக்கும்பொருட்டு யோகநித்திரைசாதிக்கின்றார் ஆதலால் உம்மைப்போல பக்தியுடையபேர்கள் இந்தவிமானத்தையேசேவிக்கவேண்டும் ஏனென்றால் பூர்வத்தில்உம்மைப்போலொத்தசதுர்முகபிர்மாக்கள் அநேகங்கோடிபேர் அநேகம்ஆயிரவருஷகாலந்தவசுபண்ணி இந்தவிமானத்தையும் இந்தவிமானபதியாகியஸ்ரீரங்கநாயகரையும் சேவித்து பூசித்து அந்தபூசாபலத்தினால் அநேககாலம்பிரமபட்டம் அநுபவித்தார்கள் இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயுவு குபேரன் ஈசானியனென்று சொல்லப்பட்ட அஷ்டதிக்குப்பாலகர்களும் இப்படியே சேவித்து திசாநாதராகினார்கள் ஆதலால்நீரும் இந்தவிமானத்தைச்சேவித்துப் பூசிப்பீராகில் உமக்குச்சர்வாதிகாரமும் உண்டாகுமென்றுசொன்னார் அந்தவசனமிர்தங்களைக்கேட்டு பிர்மதேவனும் அப்படியாவென்றுபயபக்திவிசுவாசத்துடன் அந்தவிமானத்தினுட் புகுந்து தரிசிக்குமளவில் முன்னர் இந்தப் பிர்மதேவனால் சிருஷ்டிபண்ணப்பட்ட சகலபுவனங்களும் சராசரங்களும் காணப்பட்டான் அல்லாமலும்,

கவி.

எண்ணூறுகோடி யுகம்பார்த்திருக்கினும்
கண்ணபிரானைக் கண்டறிவாரில்லை
உண்ணாடிச்சற்றே யொளிபெறநோக்கிடில்
கண்ணபிரானைக் கண்டுய்யலாகுமே.

என்று முன்னோர்கூறியிருக்கின்ற நியாயம்போல் அந்தவிமானத்தின்மேலேஆகாசமும் கீழேபூமியும் மத்தியில் மகாலட்சுமிசமேதராய் ஆதிசேஷசயனத்தில் பகவான் பள்ளிகொண்டிருக்குர் தானமும் அந்தவாசற்படியி னிருபுறத்திலும் ஜெயவிஜையனென்கிறதுவாரபாலர்களும் பெருமாள்கிரீடபாரிசத்தில் கணபதியும் பாதபாரிசத்தில் துர்க்கையும் சிரசுக்கும்பாதத்துக்குமத்தியில் சரஸ்வதியும் காயத்திரியுமாய்த்தோற்றப்பட்டன அல்லாமலும் அந்தவிமானத்துச்சியில் நாலுவேதங்களேநாலுகலசமாகவும் பிரணவமுதலியமகாமந்திரங்களே சிகரமாகவும் விளங்கின அதுவுமல்லாமல் பாதத்தில்ளக்கியங்களும் நெற்றியில் ஐக்கியமந்திரங்களும் வயற்றில் அசுவனிக

ளும் அந்தராளத்தில் மருத்துக்களும் அஷ்டவசுக்களும் ஏகாதசருத்திரர்களும் துவாதசாதித்தர்களும் நவக்கிரகங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களும் சப்தரிஷிகளும் அஷ்டதிக்குப் பாலகர்களும் சகலதேவர்களும்காணப்பட்டன இப்படிகாணப்பட்ட சகலவைபவங்களையும்பார்த்து ஆச்சரியப்பட்டபிரமதேவனானவன் அந்தபகவானுக்குச் சர்வோபசாரபூசைகளும் நடப்பித்து பிரதட்சணநமஸ்காரஞ்செய்து மகாபயபக்தியுடனே அந்தப் பெருமானுடைய திருவுருவத்தைத் தியானித்துப்பார்க்குமளவில்.

இந்திரலோகம்போற் பிரகாசிக்கின்ற மேகவானமும் பூரணச்சந்திரபிம்பம்போற் பிரகாசிக்கின்றதிருமுகத்தாமரையும் மூன்றும்பிறைபோல்விளங்கப்பெற்றநெற்றியும் பஞ்சாயுதங்கள் தாங்கப்பட்ட கைத்தாமரைகளும் விரலட்சுமிவசிக்கின்றதோள்களும் கிருபையே வடிவமாய்விளங்குகின்ற திருக்கண்தாமரைகளும் அவற்றினுள் மதுபானஞ்குடித்து மயங்கிகிடக்கின்ற வண்டுகள்போன்ற கருவிழிகளும் கோதண்டத்திற்குச்சமானமாய் வளைந்திருக்கின்ற புருவங்களும் கொவ்வைக்கனிபோலும் சிவந்தவாய்த்தாமரையும் எள்ளின்புட்பத்தையொத்தநாசிகளும் திரிலோகங்களும் பிரமைகொள்ளத்தக்க புரிச்சங்குபோன்றகழுத்தும் மகாலட்சுமிவாசமாயிருக்கின்ற மார்பும் சகலசராசரங்களையும் அடக்கிவைத்திருக்கின்ற திருவயிறும் கங்காவர்த்தனஞ்சுமித்திருக்கின்ற கழல்போன்ற நாபித்தாமரையும் வாழைத்தண்டையொத்த தொடைகளு மன்மதபாணம்போன்ற ஆசனமும், செங்கரும்புபோன்ற கணைக்கால்களும் சந்திரரேகை வச்சிரரேகை பதுமரேகை அங்குசரேகைகளுடன் சிவந்திருக்கப்பட்ட பாததாமரைகளும் நவரத்தினகசிதமாய் கோடிசூரிய ரொளிபோற் பிரகாசிக்கின்றகிரீடமும் மகரகுண்டலங்களும் வனமாலைமுதலியநானாவிசிததிரபாணங்களும் விநோதவிதமும் பீதாம்பரமும் பிரகாசிக்கும்படி மகாவைபவத்துடன் ஒருகையைச்சிரசின்கீழ்வைத்துக்கொண்டு மற்றொருகையைத் திருமேனிமேல் நீட்டிக்கொண்டு ஆயிரம்பணமுடிகளையுடைய ஆதிசேஷனபேரில் யோகநித்திரை செய்துக்கொண்டிருந்தார்.

அப்படிவிளங்குகின்ற ஸ்ரீரங்கநாதருடைய திருவழகைத்தோத்திரஞ்செய்து சுவாமி சதாயென்னை ரட்சித்தருளவேண்டும் ரட்சித்தருளவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்து ஸ்ரீரங்கநாதாயநமஹா ரங்கநாதாயநமஹ வென்று பலவாராசத் தவுத்தியஞ்செய்தான கேட்டீரோநாரதரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார்.

அதுகேட்டு நாரதமுனிவரும் ஆச்சரியப்பட்டு மகாசந்தோஷத்தையடைந்திருந்தார்.

ஸ்ரீரங்கநாதாயநம:.

மூன்றாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

○ இரண்டாம் அத்தியாயத்தில் கூர்மாவதாரத்துதிகவியால் கலைமதியைமத்தாக்கி என்பதனை கலைமதியைத்தூணாக்கி என்றுகூட்டிக் கொள்க.

ஸ்ரீரங்கநாதாயநம:.

## நான்காம் அத்தியாயம்.

—()—

### துதிகவி-விருத்தம்.

சுரர்முதலோரேத்தெடுப்பக் கற்றாணிணாசிங்கச் சொரூபமாகி, இரணியன்வல்லுயிர்குடித்து ஹரிநமோநமோவென்றுள்ளிரங்கிநிற்கும், ஒருமலைபிரகலாதனைப்பணித்தருள்வாயுலகமூய்பத், திருவரங்கத்தரவணைமேற்றிருக்கண்வளர்ந்தமையருளுந் தேவேபோற்றி.

அப்பால் நாரதமுனியானவர் ஸ்ரீகைலாசபதியாகிய சாம்பசிவமூர்த்திக்குதெண்டனிட்டு சுவாமி அதற்குமேல் பிரமதேவர் நடந்த வர்த்தமானமும் அடியேனுக்குச் சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பம்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றி அருளுகின்றார், கேட்டீரோ நாரதரே நீர் இவ்வளவு ஆசையாய்க் கேட்கிறபடியால் அந்த ரகசியத்தையுஞ் சொல்லுகிறோம அதெப்படி யென்றால் பிரமதேவர் அந்தவிமானத்திற் பள்ளிகொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதரைப்பார்த்து ஸ்ரீநாதா ஸ்ரீநிவாசா தாமோதரா சர்ப்பசயனா லட்சுமீவாசா ரங்கநாயகாசுவாமி ஆயிரஞ் சிரசுகளும் ஆயிரங்கண்களும ஆயிரங்கைகளும் ஆயிரந்திருநாமங்களுமுடைய பாதங்களையே நானசதாகாலமும பூசைசெய்யவேண்டும் தேவரீரைக்குறித்தே ஆயிரம்யாகங்கள்பண்ணவேண்டும் பக்தசனங்களைரட்சிக்கின்றதிருப்பாதங்களுக்கு நமோநமோவென்று ஆயிரந்தரம் சாஷ்டாங்கமாய் விழுந்து சேவிக்கத் தொடங்கினான்.

கேட்டீரோநாரதரே ஒருதரஞ்சேவித்தால்வந்தனம் இரண்டுதரஞ்சேவித்தால்பிரணாமம், மூன்றுதரஞ்சேவித்தால் தண்டம் நாலுதரஞ்சேவித்தால்நமஸ்காரம், அஞ்சுதரம்சேவித்தால் ஆதிகயம், ப

த்துதாஞ்சேவித்தால் சாஷ்டாங்கம், அப்படியிருக்கப் பிரமதேவன் ஸ்ரீரங்கநாதரைப்பார்த்து சுவாமி தேவரீருடைய திருப்பாதகமலங்களுக்கு இதோ நூறுதாஞ்சேவித்தேன் இதோ கோடிதாஞ்சேவித்தேன் இதோபத்துகோடிதாஞ் சேவித்தேன் நான் இப்படியே உம்முடைய திவ்வியசொரூபத்தை சதாகாலமும்சேவிக்கவேண்டும் ஓய் லோகநாதா தேவரீர் எனக்குப் பிதாவாகையால் என்னிடத்தில் கிருபைசெய்யவேண்டும் ஓய் ஆதிதேவ, தேவரீர் எனக்கும் பிரசன்னமாயெழுந்திருந்து காட்சிகொடுத்தருளவேண்டும், ஸ்ரீமந்நாராயண முகுந்தா, பத்மநாபா, ஹரிவாசுதேவா, வைகுண்டவாசா, ஜெகந்நாதா, கோவிந்தா, ஸ்ரீரங்கநாதா, ஸ்ரீரங்கேசா, ஜயம்ஜயம்என்று ஸ்தவுத்தியம்பண்ணியின்னும் அந்தப்பகவானைப் பார்த்து சுவாமி தேவப்பிராமணர்கள் உமதுதிருமுகத்திற்பிறந்தவர்கள் க்ஷத்திரியர்கள் உம்முடையதுடையிற்பிறந்தவர்கள் ஆகையால் அவரவர் வர்ணாசிரமதர்மகர்மங்களும் நீரே அதுவுமல்லாமல் இந்திரனும் அக்கினியும், உம்முடையதிருமுகம் சந்திரனும் சூரியனும் உம்முடைய கண்கள் இந்தப்பிரசண்டவாய்வு உம்முடைய பூர்ணவாய்வு இந்தப்பூமி உம்முடையசிரசு அஷ்டதிக்குப்பாலகர்களும் உமதுஏவலாளர் பூமிதேவியும் சீதேவியும் உமதுஸ்திரீகள் மன்மதன் உமக்குத்திருமகன் இரவும்பகலும் உமதுதிருமேனியொளிவாளும்.

இப்படி சர்வபூதங்களின்மேலயும் சர்வேந்திரியாமியாய் வியாபித்துச் சகலசிவராசிகளையும் பிறக்கும் நாலுவேதங்களும் உமக்கு அங்கமாயிருக்கும் அதெப்படியென்றால் சாங்கியயோகம் பாதசாஸ்திரம் யாகசாஸ்திரம் வயித்தியசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் சோதிடசாஸ்திரமுதலானவைகளெல்லாம் உம்முடைய வசனங்களால் வேதமூர்த்தியாயிருக்கிற தேவரீரே புருஷோத்தமர் உம்முடைய சாதகுணத்தினால் ஆதிசேஷனும் தாமதகுணத்தினால் ஏகாதசருத்திரர்களும்பிறந்தார்கள் ஓ ஜெகத்காரணா ஸ்ரீமந்நாரணா, உம்மைப்பார்க்கிலும் அதிகமானதெய்வமுமில்லை உமக்குச் சமானமான தெய்வமுமில்லை அக்கினியும்வாய்வும் உம்முடைய ஆக்கினைப்பிரகாரமேநடக்கின்றார்கள் சந்திரனும்சூரியனும் உம்முடைய கட்டளையின்படியே நடக்கின்றார்கள் பிருதிவியும்தேவதையும் உமதுகட்டளையின்படியே நடந்துவருகின்றது ஆகையால் உமக்கு இன்னமும் அநேகநமஸ்காரம்பண்ணுகிறேன் ஸ்ரீரங்கதாமாமோட்சத்திற்காரியும்நீரே மாயாப்பிரபஞ்சசம்சாரமானதும்நீரே ஸ்தூலசூட்சம காரணமும்நீரே இந்தப்பிரபஞ்சமெல்லாம் உமதுலீலாவினோதமாகப்பிரகாசிக்கின்றது ஆதி

புருஷனும் அட்சயபுருஷனும்நீரே வளரப்பட்டதும் குறையப்பட்டநீரே, அச்சுதனாயிருக்கிற உமக்கு நமஸ்காரம்.

கர்மபந்தங்களினால் சென்மபந்தப்பட்டுச் சேதனமாய்ச்சஞ்சரிக்கிற சகலவுயிர்களும்நீரே, அசேதனமாய்ச் சஞ்சரியாம லிருக்கிற தாமரசங்களும் நீரே, அவைகளுக்குத்தகுந்த போகபோகங்களை யூட்டிவைக்கிறவரும்நீரே, ஸ்ரீநிவாசா உமக்கு வந்தனம், சங்கருஷ்ணா பிரத்தியும்னா அனிருத்திரா பரவாசுதேவா மதுசூதனா திரிவிக்கிரமா வனா ஸ்ரீரிஷிகேசவா தாமோதரா ஸ்ரீரங்கசாயி கேசவா மாதவா கோவிந்தராசா கோபாலா ஸ்ரீவெங்கடேசா வேணுநாதப்பிரியா உமக்கு நமஸ்காரங் காளிங்கமர்த்தனா கம்சஹாபரனா மாபவாமச்சாவதாரா கூர்மரூபா வராகசொரூபா நரசிம்மமூர்த்தி பரசுராமா பலராமா அயக்ரீவா உமக்குநமஸ்காரம் புராணபுருஷா பங்கசயனா பக்தவச்சலா பரந்தாமா நமோநமோவென்று ஆனந்தத்தில் ஸ்தவுத்தியம் பண்ணிக்கொண்டு நிற்கின்றபிரமதேவனை அந்தபகவான் கிருபாகடாட்சத்தினாலே எடுத்துப்பார்த்து வாரும்பிள்ளாய் பிரமதேவா நாம் நீசெய் தபசுக்களாலும் நீசெய்தஸ்தவுத்தியங்களினாலும் சந்தோஷமடைந்தோம் நீமுன்னமே நாம்கட்டளையிட்டபடி சகல லோகங்களையும் கிரமமாகச் சிருஷ்டிபண்ணினதற்கு மெச்சினோம்.

ஆகையால் இந்தமண்டலத்தில் எவனாகிலும் நீஇப்போது நம்மைஸ்தவுத்தியம்பண்ணின திருநாமங்களைப் பரிசுத்தனாயிருந்து இடைவிடாமல் பாராயணஞ்செய்வானாகில் நாம்அவனுக்குப்பிரசன்னமாகி அவன்கேட்டவரங்களெல்லாங் கொடுப்போம், நீசெய்தபசுக்கும் ஸ்தோத்திரங்களுக்கும்பிரியப்பட்டு நம்முடைய நிசசொரூபத்தை உனக்குத்தரிசனங்கொடுத்தருளினோம் அல்லாமலும் இனிமேல் உனக்குவேண்டிய வரத்தையுங்கேட்பாயாகில் அதுவுந்தருகிறோமென்று பரிபூரண கடாட்சத்தினால் அயிர்தவருஷம் வருஷித்ததுபோல திருவாய்மலர்ந்தருளினார் கேட்டீரோநாரதமுனிவரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார்.

அதுகேட்டு நாரதரும்பரமசிவனைப்பார்த்து சுவாமிகாளகண்ட மூர்த்தி அந்தப்பிரமதேவன் ஸ்ரீரங்கநாதரை ஸ்தவித்தியம்பண்ணின திருநாமங்களைக்கேட்டு அடியேன் கிருதார்த்தனாயினேன், இனிமேல் எந்தக்காலத்திலும் நானும் உபயகாவேரிசூழ்ந்திருக்கப்பட்ட திருவரங்கமென்னுந் திவ்வியஸ்தலத்திற்குப்போய் காவேரிதீர்த்தத்திலும் சந்திரபுட்கரணிதீர்த்தத்திலு மகாபத்திவினயத்துடனே ஸ்நானம்பண்ணிஜெபதப அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அப்பா

ல் அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகியும் ஆதிமத்தியாந்தரகிதராயும் ஆபத்பாந்தவா அநாதரட்சகனாகியும் அகிலபுவனசம்ரட்சகனாகியும் கரிராஜவரதனாயும் விளங்கப்பட்ட ஸ்ரீரங்க நாயகரைச் சேவித்துப்பூஜித்து சேவிக்கப்பெறுகிறேனென்று பலவாறாகத் தோத்திரம்பண்ணினார்.

ஸ்ரீரங்கநாதாயநம.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாதாயநம.

## ஐந்தாம் அத்தியாயம்.

---

### அறிகவி-விருத்தம்

அகம்கைகொண்டொருமூன் றுலகினையுமொருகுடைநீ லரசு செய்து, சீழுமாவலிபாலோர்வாமனமாய்ச்சென்றிரப் புற்றூர்போல, விசும்பொருமூவடிமண்கொண்டவனைச்சகமடக்கி யிமையோர் போற்றச், சகமானிற்பொன்னரங்கர் தன்னிலறிதுயில்வளருந்தாளு போற்றி.

அப்பால்நாரதபகவான் எழுந்திருந்து சாம்பவமூர்த்திக்கு நமஸ்காரஞ்செய்து ஓய்சுவாமி, காமதகனா, அந்தப் பிரமதேவனுக்குப்பெருமாள் சாதித்தருளியவரப்பிரசாதங்களையும் பிற்பாடு நடந்த சகலவர்த்தமானங்களையுந் தெரியச்சொல்லவேணுமென்று விண்ணப்பஞ்செய்யப்பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேட்டிரோ நாரதரே பெருமாள் அப்படி திருவுளம்செய்தருளியவசனமிர்தங்களைக்கேட்டுப் பிரமதேவனும் சந்தோஷத்தையடைந்து சுவாமிகருணாகடாட்சா கஜேந்திரவரதா தேவரீர் அடியேனிமித்தம் இந்தத்திருவுருவத்துடன் பிரசன்னமாக எழுந்தருளிவந்து பிரத்தியக்ஷதரிசனங்கொடுத்தருளியது உண்மையாகில் எப்போதும் இந்தத்திருவுருவத்துடன இந்தத்திவ்யவிமானத்தில் எழுந்தருளியிருந்தே தெரிசனங்கொடுத்தருளவேண்டும் இந்தத் திவ்வியஸ்தலத்திலேயே இடைவிடாமலிருந்து திரிகாலமும் பூசைமுதலிய சாங்கோபசாரங்களுஞ் செய்யவேண்டும் இப்படிப்பட்ட மகத்துவமுள்ள திவ்யாலங்கார விமானதரிசனஞ்செய்த பக்தஜனங்களுக்கு நா

ளுக்குநாள் அஷ்டயிசுவரியமும் ஆயாரோக்கியமும் தெய்வபத்தி யும் குருபத்தியும்விர்த்திக்கச்செய்து சரீரத்தில் மரணவேதனையின் றி அனுதிசமரணமாய் உம்முடையதிருவடிநிழலில்வந்து சேவையுரு ம்படி கடாட்சித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதை கேட்டுபெருமாள் திருவுளமகிழ்ந்து ஓப்பிர்மாவே நாம் எப்போதும் இந்த விமானத்திருந்தே உனக்கும் மற்றுமுண்டான பக்தஜனங்க ளுக்கும் காட்சிகொடுத்தருளுகின்றோம்.

நமக்கு உன்னுடைய கைகளினாலேயே தினமானம் அஞ்சுகால மும் பூசைமுதலான சகலோகோபகாரங்களும் பண்ணவேண்டும் இ ப்படி நூறுவருஷகாலந்தப்பாமல் மகாபயபக்திவிசுவாசத்துடனே பூ சைபண்ணுவாயாகில் ஸ்ரீவைகுந்தத்தில்நம்முடையபக்தஜனங்களா ய்விளங்கப்பட்ட நித்தியாயிசுவரியர்களுடனசுகித்திருப்பாய் அதற் கு சந்தேகமில்லை அந்தவைகுந்தத்தின்பெருமை எப்படிப்பட்டதெ ன்றால்பிர்மாண்டங்களுக்கு அப்புறமதிசயமாயிருக்கு மதற்கப்புரம் விரஜந்தியிருக்கும் அதற்குஅப்புறம் ஸ்ரீவைகுந்தமிருக் ம் அந்த வைகுந்தத்தில் நாம் பிரஹிருத திவ்வியமங்களசரீரத்துடனே பிராட் டிசமேதராயிருந்து தரிசனங்கொடுப்போம் நாம் அங்கேயிருக்கப்ப ட்ட திவ்வியரூபத்துடன் இங்கேவந்து உனக்கு பிரத்தியட்சதரிச னங்கொடுத்தருளினோம் நாம்லீலாவிபூதியாய் சேதனங்களாயிருக்க ப்பட்ட மாயாபிரபஞ்சங்களையுண்டுபண்ணி அந்தப்பிரபஞ்சசம்ப ந்தரான சகலசீவராசிகளுக்குள் நாமேபிரவேசித்து சகலவினோதங் களையும் நடத்திவருகின்றோம் சகலபிரபஞ்சங்களையும் நாமே உண் டுபண்ணுவோம் நாமேரட்சிப்போம்நாமேநாசமாக்குவோம் நம்மால் சகலபிரபஞ்சங்களையுஞ் சகலசீவராசிகளையும் ஆக்கவும் அழிக்கவும் இதுகளால் உண்டாகும்பாவபுண்ணியங்கள் நம்மைச் சேரமாட்டா து நாம்கிருபையினாலே சகலசீவராசிகளுடைய இருதயம் பரங்களி ல் எள்ளுக்குளெண்ணெய்போல் வியாபித்து நின்று அவரவர்களு டைய உள்ளத்தில் ஞானவிளக்கைப் பிரகாசிக்கப்பண்ணி அஞ்ஞா னவிருளைத் தூத்திவிடுவோம்.

இதுவுமல்லாமல் நாம் சகலபிராணிகளிடத்திலும் பரிபூரணமா யிருந்து அவரவர்கள் வினைக்குத்தகுதியாய் பாரபட்சமில்லாமல் த னுகரண புவனபோகங்களைக்கொடுத்துத் தாயானவள் பிள்ளையைக் காப்பாற்றுகிறதுபோல காப்பாற்றிவருகின்றோம் இப்படிப்பட்ட ந ம்மை மாயாவிசித்திரத்தினால் தேவர்கள்முதலான சர்வசீவராசிகளு ம்மோகத்தையடைந்து கண்டறியமாட்டார்களாகையால் நம்மைசக

லபிராணிகளுங்கண்டு தரிசிக்கும்படி மூன்றிடத்தில்நம்முடைய நிஜ ரூபத்தைக் காண்பித்தருளினோம் இந்த இடங்கள் எங்கேயென்றால் திருப்பாற்கடலிலும் சூரியமண்டலமும் சொர்க்கமுமாம் அதனால் தான்நமக்குத் திருச்சாமமென்னுமொரு திருநாமமுண்டாயிற்று மேலும் ராசதர்ம குணங்களினால் நம்மைக் கண்டறிய மாட்டார்கள் இப்படி கண்டுகொள்ளாமல் மாயாசம்சார வாழ்க்கையில் மூழ்கிக்கிடந்த சீவர்களையெடுத்துக் கரையேற்றும்பொருட்டு நாம் கற்பத்துகற்பம் ஆயிரம் அவதாரங்களெடுப்போம் அப்படி எடுக்கின்ற காலத்திலும் பக்தியினாலாகிலும் சிநேகிதத்தினாலாகிலும் பிராணபயத்தினாலாகிலும் புத்திரசோகத்தினாலாகிலும் தாசானுதாசர்களிடத்திலிருக்கிற பிரீதியினாலாகிலும் நம்மைநினைக்கபேர்கள் நமதுகல்யாண குணானுபவங்களைக் கண்டறிந்து காம குரோத லோப மோக மத மாச்சரிய வாச்சிதர்களாயிருந்து இடைவிடாமல் நம்முடைய திருநாமங்களை ஸ்தவுத்தியம்பண்ணிக் கொண்டாடுவார்கள்.

இன்னமும் நாம் பலவிதமான லீலாவதாரங்க ளெடுத்து சகல சீவராசிகளையும் நாட்டியஞ் செய்விப்போம் மேலும் நாம் சர்வ பூதங்க ளிடத்திலும் வியாபகமாயிருந்து பக்தஜனங்களை ரட்சிப்போம் நாம் நானாரூபமான சரீரங்களிலும் புகுந்து இச்சாசம்பந்தமாய் ஞானரூபமும் அஞ்ஞானரூப மெடுப்போம் அம்சாவதாரங்களாகவும் மனுஷாவ தாரங்களாகவும் மிருகாவதாரங்க ளாகவும் பிறப்போம் அதுவுமல்லாமல் அர்ச்சாவதார மென்கிற விக்கிரக சொரூபமாகவும் விளங்கு வோம் மரங்களிலும் பஞ்ச லோகங்களிலும் கல்லு களிலும் மிருத்துக் களிலும் பிரகாசித் திருப்போம் பரமாத்துமாவாகிய நாமே சேதனாசேதனங்களாய்ப் பூமியில் சஞ்சரிக்கப்பட்ட சராசர வஸ்துக்களாய் விளங்கு வோம் ஆகையால் இப்படி அர்ச்சாவதாரமாய்ப் பிரகாசிக்கப்பட்ட விக்கிர சொரூபங்களை எவனாவது கல்லென்றும் செம்பென்றும் மரமென்றும் பொன்னென்றும் மண்ணென்றும் சித்திரப் படமென்றும் நிந்தை செய்து பரியாசம்பண்ணுவானாகில் அவனையும் அவன் வம்கிஷக்காரரையும் நரகத்தி லழுத்திப் போடுவோம் நம்மை பூசை பண்ணுகிறவனையும் நம்முடைய திருநாமங்களை ஸ்துதிபண்ணுகிறவனையும் நம்மை நமஸ்காரம் பண்ணுகிறவனையும் நம்முடைய கீர்த்தனைகளை நாள்தோறும் பாராயணஞ் செய்கிறவனையும் நம்மை அரியென்று மனதில் தியானம் பண்ணி வாக்கினால் ஸ்தவுத்தியம் பண்ணு கிறவனையும்

க்ஷேத்ரரையும்காப்பாற்றி முடிவில் சகலசம்பிரமத்தோடு வைகு
ந்தத்தில் பரமபாகவதக்கூட்டத்திலிருந்து சேர்வை செய்யும்படி
பிரகாசித்தாளுவோம் அப்பால் அவர்கள்நமது திவ்யரூபத்தையு
ம் பெறுவார்கள் மோட்சத்தை யடைவார்கள்.

ஆகையால் நீர்நம்மையும் நம்முடைய விமானத்தையுமே பூஜா
யோக்கியனாயிருந்து சார்வகாபூசைபண்ணவேண்டும சுயமாயுண்டா
னமூர்த்திகாந்தவிர மற்றதெல்லாம் ஒருவரால் நிருமிக்கப்பட்டதாம்
அதெப்படியென்றால் மரங்கல்லுகள் மிருத்துகள் இதுகளால் நிரு
மிக்கப்பட்டதுகளுக்கு வஸ்துத்திரயமென்றுசொல்லப்படும் இது
வல்லாமல் சிறிதுஞ்சங்கல்பொன்வெள்ளி செம்புகளாலும் நிருமிக்க
ப்படும் நாம் அந்த விக்கிரகங்களில் அர்ச்சாவதாரஞ்செய்து பூரண
வியாபகமாயிருப்போமதுகள் சிற்பசாஸ்திரக்கிரமப்படி நிருமித்து
வைக்கவேண்டும் எப்படிநிருமிக்கவேண்டுமென்றால் அதிக அங்கமு
மாகாது குறைந்த அங்கமுமாகாது சமமாயிருக்கவேண்டும் ஆகாசத்
தைப்பார்த்த பார்வையாகவும் இருக்கக்கூடாது உக்கிர பார்வையா
வுமிருக்கக்கூடாது சமதிருஷ்டியான பார்வையாயிருக்கவேண்டும் மகா
சவுந்தரிய ரூபலாவண்ணியமாய் குளிர்ந்த பார்வையோடு புன்சிரிப்
பும் சேவகளையுமாய் சிற்பசாஸ்திரவிதிப்படி செய்வித்து கிரமப்படி
பிராமணபிரதிஷ்டைபண்ணுவித்த விக்கிரகத்தைவைத்து பரிசுத்த
திரவியங்களால் பூஜாயோக்கியன் தவறுமலிருந்து பூசைபண்ணவே
ண்டும் நாம் இப்போது சொன்னவிதிமார்க்கமெல்லாம் இந்தலோக
முண்டானஸ்தலங்களிலுள்ள கோயில்களும் விக்கிரகங்களுக்குமெ
ன்று தெரிந்துகொள்வாயாக இந்தரங்கஸ்தலம் ரங்கவிமானம்சுயம்
பாகவுண்டானதேயல்லாமல் ஒருவரால்நிருமிக்கப்பட்டதல்ல இது
போலவேயேகமாய் சுயம்பாயுண்டாகி விளங்கப்பட்ட ஸ்தலங்கள்
ஏழுண்டு அவையெவையெனில் திருமுட்டம் திருவெங்கிடாசலம்
சாளக்கிராமபர்வதம் நைமிசாரணியம் தட்சணசமுத்திரத்தில் வா
னமாமலை உத்திரதிசையில் புட்கரக்ஷேத்திரம் நாராயணாசிரமம்என்
றுசொல்லப்பட்டதுகளாம் இந்த ஏழுதலங்களுடன் திருவரங்க
மென்று ஆக எட்டுஸ்தலங்களும் சுயம்பாக வுண்டானதுகளென்று
சொல்லப்படும்.

இனிதேவதைகளால் நிருமிக்கப்பட்டஸ்தலங்களையும் விவரமா
கச்சொல்லுகிறோம் எப்படியென்றால் ஒப்பிரமாவே சிறிதுநாளைக்கு
ப்பிறகு நீகாஞ்சிபுரத்தில் அசுவமேதயாகம்பண்ணப்போகிறாய் அப்
போது நாம் நீசெய்யப்பட்ட எக்கியகுண்டத்தில் எக்கிய வரதராஜ
பெருமாளென்னும்பெயருடன் அவதாரஞ்செய்வோம் அப்போது
நம்மை நீ அத்திகிரியென்னும்மலைமேல்வைத்துப்பூசைபண்ணுவாய்
சமுத்திரத்தில் அனந்தபத்மநாபனென்னும்பெயருடன் பள்ளிகொ

ண்ட திருக்கோலமாயவதாரஞ் செய்யப்போகிறோம் அங்கேநம்மை
அனந்தனென்னும் ஆதிசேஷன் பூசைபண்ணப்போகிறான் கர்விகா
புரத்தில் நம்மைஈசானியன் பூசைபண்ணப்போகிறான் திருநந்திபுர
விண்ணகரத்தில் நம்மைவிசுவகர்மா பூசைபண்ணப்போகிறான் அசு
வதீர்த்தத்தில் நம்மை அசுவனிதேவதைகள் பூசிக்கப்போகிறார்கள்
சக்கரதீர்க்கமென்னுந் திருப்பல்லாணியில் நம்மை இந்திரன்பூசிக்க
ப்போகிறான் உற்பலாசவத்தில் பூமிதேவி பூசிக்கப்போகிறாள் துவா
ரகாபுரியில் அக்கினிதேவன்பூசிக்கப்போகிறான் அடித்திருப்பதியில்
வாயுதேவன் பூசிக்கப்போகிறான் விஷ்ணுதீர்த்தத்தில் ஆகாசவாணி
யும் கும்பகோணத்தில் தேவர்களும் ராட்சதர்களும் சாரட்சேத்திர
மாகிய திருக்கேறையும் காவேரியும் அன்னதீர்த்தத்தில் அன்னதே
வதையும் சொர்க்கவாசலி லதிதிகளும் திருக்குற்றாலததில் ஏகாதச
ருத்திரர்களும் திருநாராயண புரததில் வேதபுருஷனுமாக நம்மைப்
பூசிக்கப்போகிறார்கள் மேற்சொல்லியஸ்தலங்கள்தோறும் மேற்சொ
ல்லியதேவதைகளே பிரதிஷ்டைபண்ணி நம்மைப் பூசிக்கப்போகிற
படியால் அந்தஸ்தலங்களையும் திவ்வியஸ்தலங்களென்று சொல்லப்
படும் இதுவுமல்லாமல் ரிஷிகளால் நம்மைப்பூசிக்கப்படும் ஸ்தலங்க
ளுண்டு அதுவுஞ்சொல்லுகிறோம் அவை யெவையெனில் திருநெல்
வேலியில் சுக்கிரபகவானும் மார்க்கண்டேயனும் பூசிக்கப் போகிறார்
கள் மந்தரட்சேத்திரத்தில் மரீசிமுனிவரும் சிததிரக்கூடமெனும்
சிதம்பரத்தில் பதஞ்சலிமுனிவரும் தாமரவர்ணியில் அகத்தியமுனி
வரும் சத்தியகிரியென்னுந் திருமயத்தில் இந்திர தூய்மனென்னும்
ராசரிஷிகளும் கொங்கில் பாண்டுமுனிவரும் சீரகமென்னுந் தலத்தி
ற்குபேரனும் நந்திபுரத்திற் பிதுர்ச்சக்கரவர்த்தியும் கும்பத்துவார
த்தில்மகோதரனும் வியாசதீர்த்தத்தில் வியாசமுனிவரும் பெண்ணை
க்காரத்தில் மயித்திரேயமுனிவரும் சவுனகாசிரமத்தில் சவுனகமு
னிவருமாக நம்மைப்பூசைபண்ணி அவர்களிஷ்டசித்தியைநம்முடை
யகிருபாவிட்சண்ணியத்திலே யடையப்போகிறார்கள் இந்தஸ்தலங்
கள்முழுதும் முனீஸ்வரர்களால் பிரதிஷ்டைபண்ணுவித்து நம்மை
ப்பூசைசெய்யப்போகிறபடியால் இத்தலங்களையும் திவ்வியக்ஷேத்தி
ரங்களென்றேசொல்லப்படும் இதுவுமல்லாமல் இன்னம் பலக்ஷேத்
திரங்கள் மனுஷர்களால்நிருமிக்கப்பட்ட அந்தக்ஷேத்திரங்கள்தோ
றும்வேதசாஸ்திரக்கிரமப்படி நம்மை பிரதிஷ்டை பண்ணுவித்துச்
சகலரும்பூசிக்கப்போகிறார்கள் இப்படிமூன்றுவிதபிரதிஷ்டைகளா
லுண்டாக்கிவிளங்கப்பட்டஸ்தலங்களையே நூற்றெட்டுத்திருப்பதிக
ளென்றுசொல்லுவார்இந்நூற்றெட்டுத்திருப்பதிகள்தோறும் அந்த
ந்தவிக்கிரங்களில்வியாபித்திருந்து அந்தந்த விக்கிரகசவுந்தரியத்துக்
குத்தகுந்தசேவைசாதித்தருளி நம்மைபயபக்திவிசுவாசத்துடன்சே

விக்கிறபரமபாகவதர்களுக்கு இஷ்டசித்திகளைபிரகாசித்தருளுவோம் அதுகளில்சுயம்பாகவுண்டான எட்டுஸ்தலங்களிலும்சேவிக்கின்றவர்களுக்கு அதிகமானவிசேஷபலபிராதிகளைக் கொடுத்தருளுவோம்இந்தசுயம்பாகிய எட்டுஸ்தலங்களுக்கும்சுற்றிலும் நூறுயோசனைதூரமட்டும் புண்ணிய க்ஷேத்திரங்களென்றே சொல்லப்படும் அந்தக்ஷேத்திரங்களில இறக்கப்பட்ட சிவராசிகளுக்கு மரணவேதனையில்லை மோட்ச சம்பத்துண்டு அப்பால்தேவகைகளால்பிரதிஷ்டைப்பண்ணப்பட்ட ஸ்தலங்களுக்கோவென்றால்சுற்றிலும் எ-யோசனைதூரமட்டு புண்ணியஸ்தானங்களென்றே சொல்லலாம் முனிவர்களால் பிரதிஷ்டைபண்ணப்பட்டஸ்தலங்களுக்கோவென்றால் சுற்றிலும் ஒருயோசனை தூரமட்டும் புண்ணிய ஸ்தலங்களென்று கூறப்படும மனுஷர்களால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஸ்தலங்களுக்கோவென்றால் அந்தஸ்தலங்களையே புண்ணியக்ஷேத்ரமென்று சொல்லப்படும இப்படிப்பட்ட க்ஷேத்திரங்களில் ஜெனனமெடுத்த பேர்களுக்கும் சார்வதா வாசஞ்செய்தவர்களுக்கும் இறந்த பேர்களுக்கும மோட்சமே யல்லாமல நரகமில்லை ஒப்பிரமதேவனே மேலும அவரவர்கள்வாசம்பண்ணப்பட்ட கிரகங்களில் நம்முடைய அர்ச்சாவதாரமான விக்கிரகங்களை வைத்து தினம்தினம திருவவதாரஞ்செய்துவருவார்கள் அந்தவீடுகளை புண்ணியக்ஷேத்திரமென்றே சொல்லப்படும் அந்தவீட்டில்முன்சம்பத்து தானியசம்பத்தும் புத்திரசம்பத்தும் பந்துசனவிர்த்தியும் பசுவிர்த்தியும் கஞ்சுக முதலானபயிர்விர்த்தியுமுண்டு அந்தவீட்டில் அஷ்டலட்சுமிகளுந் தாண்டவஞ்செய்வார்கள் அவர்கள் தலைமுறையிலுள்ள பிதிர்களுக்குநரகமேயில்லை இதுவுமல்லாமல் சாளக்கிராமம்வைத்துப் பூசை பண்ணுவார்களாகில் அந்தகிரகத்தைசுயம்பாகியபுண்ணியஸ்தலத்துக்குச் சமானமாகச்சொல்லப்படும் அப்படி பூசிக்கப்பட்டபாகவதர்களைசாட்சாத் ஹரிசொரூபமென்று தோத்திரஞ்செய்யாமல் மனிதராகப்பாவித்தவர்களுக்குநரகமேகதியாகும் அல்லாமலும் நம்முடைய ஆலயத்தின் கோபுரங்கள் சிகரங்கள்விமானங்கள் தோற்றப்படாதநாடுகளும் நகரங்களும் பறைச்சேரிகளாகும்இந்ததிருவரங்கத்தைச்சுற்றி இரண்டுயோசனை தூரத்திற்குள்ளிருக்கின்றபேர்கள் சண்டாளர்களானாலும்குருதுரோகிகளானாலும் திருடர்களானாலும் அவர்களிந்தப்புண்ணியசேத்ரபலத்தினால் நம்முடையலோகத்தைப் பெறுவார்கள் இந்த க்ஷேத்திரங்களுண்டான பசுபட்சி மிருகங்களும் நாய்நரிகளும் கழுதைகளும்பசாசுகணங்களும் க்ஷேத்திரமகிமையினால் நம்முடையகிருபாகடாட்சமுண்டாகிப்புண்ணியசென்மங்களையுடைய அதில் பெண்சென்மமாகப்பிறந்து புத்தியில்லாதவளாய் கடுமையானசொல்லையுடையவளாய்ப்பத்தாவின்சொல்லை கடந்து நடக்கின்றவள் மா

யியாற்கிதஞ்செய்யாதவளாய் பத்தாவுக் குபசரித்து உண்டியுதவா தவளாய்ப் பாத்திர பாத்திர மறிந்து பிச்சை யிடாதவளாய் விப சாரிகளுடனே சாவகாசம்பண்ணுகிறவளாய் வாக்கினால் இடைவி டாமல் ஈனமானதுர்ப்பாஷைகளையே வசனிக்கிறவளாய் பொருளா சையினால் விபசாரம் பண்ணுகிறவளுமா யிருந்தாலும் அவள்பிறந் திருந்தஸ்தலமகத்துவத்தினால்நம்முடையபரிபூரண கடாட்சம்பெற் று நல்லபிறவியைப் பெறுவாள் இப்படிப்பட்ட மாயாசம்பந்தமான ஜென்மங்களெடுத்து கர்மபந்தங்களில் அகப்பட்டுத் திரியுமபடி வி னோதம்பண்ணி நடத்துவிக்கிறதெல்லாம் நாமேயொழியவேறொருவ ரில்லை பெண்சென்மமெடுத்தபோதிலும் (கற்பெனப்படுவது சொற்தி ரம்பாமை) என்னும்பழமொழிப்படி பத்தா சொற்படி நடப்பவளா ய் தனதுபணிவிடைகளைத்தவறும லூழியக்காரிபோல் நடத்துகிறவ ளாய்காலமறிந்துதாயைப்போல்உபசரித்து உண்டி யுதவுகின்றவளா ய் புண்யபாவமறிந்து அதிதிகளுக்கும்பிட்சையிடுகின்றவளாய் குடு ம்பவிர்த்திசெய்கின்றவளாய் சாந்தகுணமுடையவளாய் இனியசொ ல்லையுடையவளாய் விரதநோன்புகளை செய்கின்றவளாய்ப்பிதுர்த்தி னங்களில் மகாசுசிகரமாயிருந்து சமையல்செய்கின்றவளாய் சொற் பனத்திலும் பரபுருஷகமனம்பண்ணாதவளாய் சத்தியவசனத்தையு டையவளாயிருந்தால் அவள் எந்தச்சாதியா யிருந்தபோதிலும் அ வளெந்தவிடத்திற்பிறந்தவளானாலும் அவளையேகற்புள்ளஸ்திரீகள் தெய்வமென்று சதாகாலமும் கைகுவித்து நமஸ்காரம் பண்ணுவார் கள் அந்தப் பதிவிரதையினுடையபெருமை யிவ்வளவென்று ஒருவ ராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது அவளிருக்கப்பட்ட யிடமே ஸ்ரீவைகுந்தமென்றும் கைலாசமென்றும் சொர்க்கமென்றும் சொ ல்லலாம்.

மேலும்பூலோகத்தில் ஞானவான்களாயிருக்கப்பட்ட பக்தஜ னபஞ்சராத்திரிகிரமத்தோடுநம்மைத்தினம் ஒருகாலமானாலும் இர ண்டுகாலமானாலும் மூன்றுகாலமானாலும் ஐந்துகாலமானாலும் திரு வவதாரஞ்செய்வார்களானால் அவர்களுடைய பூசாபலத்தை இவ் வளவென்றுமட்டிட்டு இந்திராதி தேவர்களாலுஞ் சொல்லி முடி யாது அவர்களிருக்கப்பட்ட ஸ்தானமே பரமபத மென்றும் அவ ர்களே பகவானென்றுஞ் சொல்லலாம் பஞ்சு ராத்திரி கிரமமாவ தெப்படி யென்றால் பிராதக்காலத்தி லெழுந்திருந்து ஸ்நான மு தலிய சகல கர்மங்களையு முடித்துக் கொண்டு நந்த வனத்திற் பு குந்து திருந்துழாய் முதலிய சுகந்தபுட்பங்கள் வகையாய்ச் ச ம்பாதித்துக் கொண்டு ஓமத் திரவியங்கள் சம்பாதிக்க வேண்டு ம் பிற்பாடு உபாதானம்வாங்கிப் பஞ்சயெக்கியம் பண்ணவேண்டும் தத்துவிக்கிரகதியானம் அறியவேண்டும் அஷ்டாட்சரஜெபஞ்செய் யவேண்டுந் திரிகாலமுந் தப்பாமல் சந்தியா வந்தனம் பண்ணவே

ண்டும் இப்படிசெய்யப்பட்டபரமபுருஷர்களைப்பஞ்சகாலபாராயண
ரென்று சொல்லப்படும் இப்படி நம்மை அஞ்சுகாலமும் ஆராதிக்கி
ன்றவனே மோட்சவதிகாரியாவான் அதிற்சந்தேகமில்லை அவன்வே
ண்டுமானால் ஆருக்குமோட்சங்கொடுத்தாலும் அவனுக்கு சாமானுக்
கிரகசாமார்த்தியமுண்டு ஆகையால்ஓப்பிரமதேவனே நீமகாஉத்தம
புருஷனாகையால் நமதுதுவாதசநாமங்களை இடைவிடாமல் தியானி
த்து அஷ்டாட்சரங்களைச் செபனுசெய்வாயாசில நூறுவருஷகாலம்
பிரமபட்டணத்தையாண்டு அப்பால்நம்முடையபாதத்தில்வந்துசே
ருவாய்சப்தகோடிமகாமந்திரங்கள் ஜபம்பண்ணினவனகாயத்ரிஜபம்
பண்ணுகிறதற்கதிகாரியாவான் ஏழுஜன்மம் காயத்ரிஜபம்பண்ணின
வன் வேதத்திற்றியானஞ்செய்துஎக்கியத்துக்கதிகாரியாவான் அப்ப
டிஅனேகஜென்மமெடுத்து எக்கியங்கள்பண்ணினவனுக்கு நம்மிடத்
தில்பக்தியுண்டாகும்நம்மிடத்திற்பக்தியில்லாதவனுக்குதுவாதசநா
மங்களும்அஷ்டாக்ஷரத்தைசெபம்பண்ணினவனுக்குப் பாவகிர்த்தி
யங்கள்அணுகமாட்டாதுசர்வகாசதோஷகுணப்ஒருவேளைநேரிட்ட
போதிலும அவனுக்குநரகம்வராது வாசுதேவனாகிய நம்மிடத்தில்ப
க்தியுள்ளவன் எவனுயிருந்தாலும அவன்செய்த பாவங்களை நாமே
தண்டித்துப்பரிகாரம்பண்ணுவோம்எமனுலதண்டிக்கப்படாதுநம்மி
டத்திற் பக்தியுள்ளவனுக்கு ஒருபாவமுமில்லை ஒருபயங்கரமுமில்லை
இவனுக்குச்சராசாந்தத்தில அனுபாசமரணத்தைக்கொடுத்துவைகு
ந்தத்திற்சேர்த்துக்கொள்ளுவோம் அநக்கதையாகிய நிந்தைகள்செய்
துகெர்வத்தினுல்மகாபாதகத்துக்காளாகி நம்மிடத்திற் பக்தியில்லா
தவனுயிருப்பானுகில் அவன்எமதண்டனைக்குள்ளாகி இந்தஜென்மத்
தைவிட்டுப்பிறவாதஜெனனங்களிற்பிறந்து துக்கத்தையனுபவிப்பா
ன்இதுவுமல்லாமல் எவனுகிலும்மகாபயபக்திவிசுவாசத்துடனே மா
தாபிதாகுருஇவர்களைத்தெய்வமாகப்பாவித்துபூசைபாகும் இப்படி
சன்மாற்கமான விஷயங்களைச்செய்யாமல் துன்மார்க்கவிஷயங்களை
நடத்துகின்றமகாபாபிஷ்டனுய் இகபரசாதனங்களில்லாதவனுபாவ
ராலும்பாவியென்றுசொல்லப்பட்டு ரவுரவாதிநரகத்துக்காளாவான்
நம்மிடத்தில்பயபக்தியாய் கிரமப்படி நடக்கின்றவர்களுக்கு ஒருபய
ங்கரமுமில்லை எமதண்டனையுமில்லை.

ஓப்பிரமதேவனே தேவர்மனிதர் பட்சிமிருகம் நிலத்திலூர்வன
சலத்திலூர்வன ஸ்தாவரம்என்றுசொல்லப்பட்ட எழுவகைப் பிறவி
களிலும்மானிடப்பிறவி எடுப்பதரிது அதிலும் பெண்ணும் அலியும
ன்று ஆண்சன்மமாகப்பிறப்பதறிது அதிலும் கூன்குருடுசெவிடுமுட
ம்நீங்கிப்பிறப்பதரிது அதிலும்உயர்ந்தகுலத்திற்பிறப்பதரிது அதிலு
ம்உயர்ந்தகுடியிற்பிறப்பதரிதுஅதிலும் அவிவேகமின்றிவிவேகியாக
பிறப்பதரிது அதிலும்வைஷ்ணவனுகப்பிறப்பதரிது அதிலும்பஞ்சரா

த்திரகிரமங்கெசிந்த ஆசாரியனைபடுத்து அஷ்டாட்சரமந்திரோபதே சம்பெற்றுக்கொண்டு நம்மை இடைவிடாமல் திரிகாலமும் பூசைபண்ணுவதுமன்றி அதிலும் வேதசாஸ்திர புராணயிதிகாசங்களை விசாரித்து சித்து அசித்து ஈஸ்வரனென்னும் மூன்றுபதார்த்தங்களையும் ஆசாரியின்முன்னிலையில்சந்தேகமிடாமற்கேட்டறிந்து விசிஷ்டாத்துவிதநிலையைப்பொருந்திநிற்பதறிந்து இப்படிதெளிந்தவனையே பரமபாகவதனென்றும ஸ்ரீவைஷ்ணவனென்றும் புண்ணிய புருஷனென்றும் மகாபுருஷனென்றும் யோகவானென்றும் ஞானவானென்றும் பிரமாணுபவியென்றும் பிரபந்நனென்றும் கிருத்தியனென்றுஞ் சொல்லப்படும் மேலும் அகண்டபரிபூரண சச்சிதானந்த பரப்பிர்மசொரூபமாய்விளங்கப்பட்ட நானேபிர்மா விஷ்ணு ருத்திரனென்றுசொல்லப்பட்ட திரிமூர்த்திவடிவங்களையும் நடத்துவோம் பஞ்சமூர்த்திவடிவாகவும் விளங்குவோம் இன்னம் அனேக மூர்த்திகரங்களாகவும் பிரகாசிப்போம் பூலோகத்தில் நரஜென்மமாகப் பிறந்தவர்கள் நம்மிடத்திற் பத்தியாய் நல்லவழிபட்டு நடக்கவேண்டுமென்று திருவுளம்பற்றியருளினர் கேட்டீரா நாரதரேயென்று பரமசிவன திருவாய்மலர்ந்தருளினர் அதுகேட்டு நாரதமுனிவரும ஆச்சரியமடைந்து இருந்தவிடத்திலே ஸ்ரீரங்கமிருக்குந திசைநோக்கி ரங்கநாதாவென்றுதியானித்துச் சுமமாயிருந்தார்.

ஐந்தாம் அத்தியாயம்-முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாதாயநம.

## ஆறாம் அத்தியாயம்.

துதிகவி-விருத்தம்.

மந்திரஞ்சேர்சமதக்கி ரேணுகையாற் பரசிராமப்பேர்பெற்ற, மைந்தனுய்த்தோன்றி மறையோர்க்கிடர்செய்தாநெறியை மாயாவேந்தன், தொந்தமுறுங்குலமுழு மறசெகுத்தம்மறையோராகுந்துணையாய்நின்று, சிந்தைமகிழ்ந்தரங்கத்தி லரவணைமேற்கண்வைத்தசிதரனேபோற்றி

அப்பால் நாரதபகவானெழுந்திருந்து கயிலாசபதியாகிய சாம்பசிவமூர்த்திக்குதெண்டனிட்டு சுவாமிநீனதயாளா திரிபுரசுந்தரிமனோகரா தேவரீர்திருவாய்மலர்ந்தருளிய வரங்கத்தின் பிரதாபத்தைக்கேட்க விநோதமாயிருக்கின்றது ஆகையினால் பிரமதேவருக்குப் பெருமாள்கடாட்சித்தவரப்பிரசாதங்களையும் அதற்குமேல் அந்தப்

ரமதேவர் நடந்தருளிய கிரமத்தையும் சவிஸ்தாரமாகச் சொல்லிய ருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற் றியருளுகின்றார் கேளுமையா நாரதமுனிவரே அதற்குமேல் பிரம தேவனையெழுந்திருந்து அந்தப்பெருமாளுக்கு அனேகமாயிரநமஸ்கா ரவந்தனைவழிபாடுகள்செய்து சுவாமிவைகுண்டவாசாவரதராசாதே வதேவா தீனரட்சகா தேவரீரை அடியேன் நாள்தோறும் பூசைபண் ணுகிறதற்குமந்திரமும் சங்கற்பமுமப்படி நீதிதவறாமல்செய்யப்பட் டபூசையினாலுண்டாகும் பிரயோசனமும் இன்னதென்று பிரகாசி த்தருளவேண்டுமென்று விநயமாகக்கேட்க அந்தப்பெருமாள் மன மிரங்கி பிரமதேவனைப் பார்த்து வாரும்பிரமாவே நீ கேட்டபடியே சொல்லுகிறோம்.

எப்படியென்றால் இந்தப் பாஞ்சராத்திரத்துக்குள் சத்துவமெ ன்றும் புஷ்கரமென்றும் இரண்டுசங்கற்பமுண்டு அவ்விரண்டுசங்க ற்பமுமறிந்த ஆசாரியரிடத்தில் தீட்சைபண்ணிக்கொண்டு சிற்பசாத் திரக்கிரமப்படி பஞ்சலோகங்களினாற் செய்திருக்கப்பட்ட விக்கிரக த்தைதவைத்து பாஞ்சராத்திரிக்கிரமந்தெரிந்த அஞ்சுபேர் உருத்திர ர்களோடிருந்து திருவாராதனஞ்செய்யவேண்டும் முன்னே துவாதச நாமங்களையுந் தியானிக்கவேண்டும் பிற்பாடு அஷ்டாட்சர மந்திரத் தைச் செபம்பண்ணவேண்டும் மற்றொரு பதார்த்தங்களிலும் ஆசை வையாமல் நிராசையுள்ளவனாயிருந்து உம்மிடத்தில்மாத்திரம்ஆசை வைத்துப்பூசிப்பானாகில் அவன் நமது சொரூபமாவான் அப்படிப் பூசித்தபேர்கள் உனக்குமுன்பாகயிருந்த ஒன்பதுபிரமாக்கள் அது வல்லாமல் தேவேந்திரன் முதலான சகலதேவர்களும் சப்தரிஷிகள் முதலான முநிகூட்டங்களும் சுயம்புமனுமாதி சக்கரவர்த்திகள்முதலா னசகலமனிதர்களும் ஒவ்வொரு பிரயோசனத்திலாசைவைதது நம் மைப்பூசித்து நானாவிதமான கர்மமாயங்களிற்பந்தப்பட்டு அவரவர் கள்செய்த காமியதபோபலத்திற்குத்தகுந்த அதிகாரசம்பத்துகளை யனுபவித்துத் தொலைத்து திரும்பத்திரும்ப அனேக செனமங்களை யெடுத்தெடுத்து அந்தசென்மங்கள்தோறும் நம்மையிடைவிடாமற் பூசித்த நஷ்டகாமியதபோபலத்தினால் தேவதத்துவத்தையடைந்து பிறகு மோட்சத்தைப்பெறுவார்கள்.

எவனாகிலும் ஒருபொருளிலும் ஆசையின்றிநிராசையாயிருந்து நம்மைப்பூசிப்பானாகில் அவன் எப்பொழுதும்ஸ்ரீ வைகுந்தத்தில்நம்மு டையதிருவடியைவிட்டுநீங்காமலிருப்பான்நம்மைப்பூசிப்பவர்கள் ம னுஷர்களாயிருந்தாலும் தேவர்களாயிருந்தாலும் முனிவர்களாயிரு

ந்தாலும் ஒருபலபிரதிமைநாடிப்பூசைபண்ணுவாராகில் அவர்கள்திரும்பத்திரும்ப அநேகசென்ம மெடுக்கவேண்டும் உலகத்தில் இதமாயிருக்கப்பட்ட அநேகதானதர்மங்களைச்செய்து அஸ்வமேதயாகமுதலானநானாவிதயாகங்களைச்செய்து இந்திரபட்டணத்தைப்பெற்றபோதிலும் அவன் ஆசாரியபக்தியில்லாதவனானாலும் அவனை ஒருவரும் புகழ்ந்துகொண்டாடமாட்டார்கள் அவனொருக்காலு மீடேரமாட்டான் நம்முடைய பத்தனாயிருக்கிறவன் ஒருவேளை அறிந்துமறியாமல் ஏதாவது ஒருபாபகர்மங்களைச்செய்வானாகில் நாம் அவன்பேரில் கடாட்சம்வைத்து அந்தச்சென்மத்தி லில்லாவிட்டாலும் மறுசென்மத்திலாகிலும் அவனுக்கு மோட்சங் கொடுத்தருளுவோம் இந்தப்பிரபஞ்சமெல்லாம் விஷ்ணுமயமென்னவேண்டும் அப்படி எண்ணுகிறவனை கோடியிலொருமகாபுருஷனும்சந்திரசூரியர்களும்பலவிதமான பிறவிகளிற்பிறக்கவேண்டும்.

நம்முடைய துவாதசநாமங்களையும் அஷ்டாட்சரத்தையுந்தியானம்பண்ணுகிறவன் வேறொருபிறவியிற்பிறக்கமாட்டான் நம்முடையபக்திசெய்கின்றவனே உத்தமபுருஷன் இழிவானசண்டாளவமிசத்திற்பிறந்தவனாயிருந்தாலும் நம்மிடத்திற் பக்திசெய்வானாகில் அவனேபரமபுருஷன் எத்தனையுயர்வானகுலத்திற்பிறந்தவனாயிருந்தாலும் நமதுபக்தவசனங்களை நிந்தனைபண்ணுவானாகில் அவனே சர்வசண்டாளன் நம்முடைய பக்தனானவன் கோஹத்தி பிரமஹத்தி சிசுவத்தி ஸ்ரீ அத்திமுதலான மகாபாவங்களைச் செய்தாலும் ஆசாரவினனாயிருந்தாலும் அவன் நம்மை யெப்போதும் பஜனைபண்ணுகிறபடியால் அவனேபுருஷசிரேஷ்டன் ஸ்ரீரங்கமகத்துவத்தை யறியாமல் நிந்தனைபண்ணினால் அவனே பரமசண்டாளனாவான் மனுஷராகப்பிறந்தபேர்கள் திருவரங்கத்தை ஒருதரம் மனதில் நினைந்தபோதிலும் அவர்களுக்குச் சொர்க்கமுண்டாகும் நரகமெல்லாம் பாழாய்ப்போகும் ஸ்ரீரங்கமென்று வசனிக்கததெரியாத ஒருமூடனுக்குப்போகிறதே உத்தமம் பூலோகம் சொர்க்க லோகங்கள் முதலான எந்தலோகங்களி லிருக்கிறவனானாலும் ஸ்ரீரங்கமிருக்குந் திசையைநோக்கி அஞ்சலியஸ்தனாய் நின்று தெண்டனிட்டு நமது துவாதசநாமங்களையும் ஸ்தவுத்தியம் பண்ணுவானாகில் அவனே புருஷார்த்தமாகையால் ஓய் பிரமாவே நீயும் பரிசுத்தனா யிருந்து பயபக்தி விசுவாசத்துடனே அர்க்கிய பாத்தியம் ஆசமனஸ் நானம் வஸ்திரம் அலங்காரம் எக்கியம் கந்தம் தூபதீபம் நைவேத் தியம் மந்திரம் புஷ்பம் பிரதட் சணம் நமஸ் காரம் குடை வெண் சாமரை

டிமுதலான சர்வோபசாரங்களும் செய்து நம்மைப் பூசைபண்ணென்று ஆக்கியாபித்துப் பெருமாளும் ஸ்ரீரங்கவிக்கிரகரூபமாய் திருவாய்மலரை மூழ்கித்தருளினார்.

திருவரங்கமென்று சொல்லத்தெரியாத மூடனுக்குப் போடுகிற அன்னத்தை நாய்க்குப்போடுவதே உத்தமமென்ற பகவான் கட்டளையிட்டருளியதற்கு காரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் கவி.

வண்டினமுரலுஞ்சோலை மயிலினமருவுஞ்சோலை
கொண்டனதிதனவுஞ்சோலைக் குயிலினங்கூவுஞ்சோலை
அண்டர்கோன்மருவுஞ்சோலை யணிதிருவரங்கமென்னா
மிண்டர்பாய்ந்துண்ணுஞ்சோற்றை விலக்கிநாய்க்கிடுமீனே.

என்பதனாற்காண்க.

அப்பால் பிரமதேவனும் ஸ்ரீரங்கநாயகர் கட்டளையிட்டபடியே மகாபபபத்தி வினயத்துடன் அவ்விடத்தில் அந்த விமானத்திற்குச்சகலோபகாரங்களும் குறையாமல்நடப்பித்து சிறிதுகாலம் பூசைபண்ணி அதன்பிறகு அந்தவிமானத்தைச் சிரசின்மேல்தாங்கிக்கொண்டு ஹரிஹரிநமோவென்று ஸ்தோத்திர ஸ்தவுத்தியங்களுடனே நடந்து சத்தியலோகத்தில் விரதாநதிதீரத்திற் கொண்டுபோய் வைத்து தான் அந்தநதியில் ஸ்நானம்பண்ணி ஐப்பசிமாதம் கிருஷ்ணபட்சம் துதிகை திரேவணிநட்சத்திரம் இப்படி கூடின புண்ணிய தினத்தில் பெருமாள் திருவாக்கருளியபடி சாஸ்திரயுத்தமாய் பரஞ்சாரத்திர எக்கியங்களறிந்த பஞ்சருத்திரர்களுடனிருந்து அர்க்கிய பாத்திய ஆசமனமுதலான சர்வோபசாரங்களுந் தவறாமல் பூசைபண்ணி, அப்பால் திருவோணநட்சத்திர புண்ணியகாலத்தில் அந்த விமானத்திற்கு மங்களஸ்நானம் பண்ணுவித்து பிற்பாடு பிரமதேவன் மகாசந்தோஷகரமாய் சுயம்புவாதிமனுவான மருமங்களையும் தட்சப்பிரஜாபதி முதலான பிரஜாபதிகளையும் மற்றுமுண்டான தேவதைகளும் இன்னமுந்தனக்கு ஆசாரிடத்திற் பிரீதியிருக்கின்றதோ அவர்களெல்லாரையும் அழைப்பித்து அவர்களையெல்லாம் அந்தநதியில் ஸ்நானம்பண்ணுவித்து பிற்பாடு அவர்களுக்கு துவாதசநாமங்களையும் அஷ்டாக்ஷரமந்திரத்தையும் உபதேசம்பண்ணிபிறகு அந்த விமானமுண்டான தெய்விகத்தையும் காண்பித்து தனக்குப் பெருமாள் பிரத்தியட்சம் தரிசனமாயிருந்து பிரகாசித்தருளிய பூஜாகிரமங்களையும் விதிதவறாமல் அவர்களுக்குப்போதித்து அவர்களெல்லாரையும் பரிசுத்தர்களாக்கி அந்த விமானத்தை இடைவிடாமலிருந்து திருவாராதனஞ் செய்விக்கும்படி செய்தான் பிற்பாடு பிரமதேவன் சூரியதேவனையழைப்பித் தவனுக்கு அந்தபஞ்சாட்சர மந்திரத்தைச் சாங்கமா யுபதேசப்பண்ணி அந்தவிமானத்தைப் பூசைபண்ணும்படி செய்வித்து தான் பிரமபட்டத்திலிருந்தான்.

அப்படியே அந்தச்சூரியதேவனும் பிரமதேவனுடைய கட்டளைப்படி அந்தத்திவ்வியதேசோமயமா விளங்கப்பட்டவிமானத்தை சிறிதுநாள் பயபக்தி விசுவாசத்துடன் பூசைபண்ணிக் கொண்டுவந்தார் அப்பால் அந்தசூரியதேவன் வைவசுவதமனுவை அழைப்பித்து அவனுக்கு அந்தவிமானமுண்டாயின தெய்வீகத்தையுஞ் சொல்லிப்பிரமதேவன் தனக்கு உபதேசஞ்செய்த சகல மந்திரியைகளையும் உபதேசம்பண்ணும்படிகட்டளையிட்டு அவன் தன்னுடையஸ்தானத்திற்குப்போய்விட்டான் அந்தவைவசுதமனுவும் சூரியதேவன்சொல் தவறாமல்பத்திவிநயமாய் வெகுகாலம்பூசைபண்ணி பிறகு தன்குமாரனை இட்சுவாகுமகாராசனையழைத்து அப்பாமகனே இந்தவிமானந் தெய்வீகமாயுண்டானது இதன்பெருமை ஆயிரஞ் சிரசும் இரண்டாயிரம் நாவுமுள்ள ஆதிசேஷனாலும் சொல்லிமுடியாது இதை ஆதியில்பிரமதேவர் பூசைபண்ணினார் பிறகுசூரியபகவான் பூசைபண்ணினார் பிறகு அவருடைய உபதேசம்பெற்றுக்கொண்டு நான் பூசைபண்ணினேன் ஆகையினால் நீயிப்போது பூசைபண்ணென்று சொல்லி அவனுக்குச் சகல மந்திரக்கிரியைகளையும் போதனை செய்வித்து அந்தவிமானத்தை அவனிடத்தில் ஒப்பித்துப்போட்டு தானபரமபதஞ்சேர்ந்தான், அதின்பிறகு அந்த இட்சுவாகு மகாராசனும் தன் பிதாவினுடைய சொல்தவறாமல் பிதாவைப்பார்க்கிலும் மகாபத்திமானயிருந்து அனேககாலம்பூசைபண்ணி பிற்பாடு அந்தவிமானத்தை பூமியிற் கொண்டுவந்து சேர்த்துச் சிறிதுநாள் பூசைபண்ணி பிறகு பெருமாளுடைய திருவடியிற்சேர்ந்தான்.

பிற்பாடு அந்த இட்சுவாகுமகாராசன் வமிசத்திற் பிறந்த ராசாக்களனைவரும் கிரமந்தப்பாமல் பூசை நடத்திக்கொண்டுவந்தார்கள் அப்பால் பெருமாள் ராவண சம்மார நிமித்தம் ஸ்ரீராமாவதாரமாய் எழுந்தருளினகாலத்தில்விபீஷணரிடத்திலொப்புவித்தார் அந்தவிபீஷணாழ்வாரும் உபயகாவேரி மத்தியில் வைத்துப் பூசைபண்ணிக் கொண்டுவந்தார், அதுமுதல் இதுவரையில் அந்தக்காவேரி மத்தியிலேயேயிருந்து இந்தக்கலியுகத்தில் மனுஷர்கையில் பூசிக்கப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கின்றது, கட்டீரோ நாரதரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார் அதுகேட்டு நாரதரும் சந்தோஷப்பட்டு ஸ்ரீரங்கவிமானத்தை மனதில் தியானித்துக்கொண்டு மவுனமாயிருந்தார்.

ஆறாவது-அத்தியாயம்-முற்றிற்று.

ஸ்ரீரங்கநாதாயநமஹா

## ஏழாம் அத்தியாயம்.

துதிகவி-விருத்தம்.

மணிவயல்சூழயோத்தியினிற் றசரதன்றன் மகவாகமதத்திற்
றோன்றி, துணிவெழுஞ்சீதையைமணந்து காருணிநிசாசரர்களறக்க

டித்து, இணியபுயராவணன் முதலோர்தமைச் செருத்தேவன் பயந்தீர்த்தளித்துப், பணிபமனைமேலரங்கத்திற்கண்வளரும் ஸ்ரீராமபத்திராபோற்றி

அப்பால்நாரதமுனிவர்எழுந்திருந்து கயிலாசபதியாகிய பரமசிவனுக்கு நமஸ்காரஞ்செய்து சுவாமிகளாண்டமூர்த்தி அந்தச்சத்தியலோகத்திற் கொண்டுபோய்வைத்துப் பிரமதேவரால் பூசிக்கப்பட்டிருந்த ரங்கவிமானம் மறுபடியும் பூலோகத்திற்கு வந்தகாரணமென்ன அதின்பிறகு சூரியவமிசத்தில் ராவணசம்மாரநிமித்தம் அவதாரஞ்செய்தருளிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அந்தவிமானத்தைவிபீஷணருக்குக் கொடுத்தகாரணமென்ன அந்தவிபீஷணர்அவ்விமானத்தைச் சோழதேசத்தில் காவேரிநதிக் கரையில கொண்டுவந்து வைத்துப் பூசைபண்ணினகாரணமென்ன இந்தவர்த்தமானங்களெல்லாம் சவிஸ்தாரமாகத் திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டு பரமசிவனும் திருவுளமகிழ்ந்து அங்ஙனம் விநயமாகக்கேட்ட நாரதமுனியைப்பார்த்து கேளுமையா நாரதரே இப்போது நடந்துவருகின்ற பிரமகற்பத்திற்குச் சேதுவராகக் கற்பமென்றுபெயர் இந்தச் சேதுவராக கற்பத்தில் வைவசுத மனுவாந்திரத்தில் முதலாவதுகிரேதாயுகத்தில் அந்த வைவசுதமனுக்கு இச்சுவாகு மகாராசனென்கிறபுத்திரன் பிறந்தான் அந்த இட்சுவாகு பூலோகத்தில் அயோத்தியாபுரியென்னும் பட்டணத்துக்கு ராசாவாய் பரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தான் அவன்பரமபாகவதருக்குள் சிரேஷ்டனானவன் மேலும் மகாவிஷ்ணுவுக்கு அஞ்சுகாலமுந் தப்பாமல் பஞ்சாத்திரக்கிரமப்பிரகாரம் பூசைசெய்யப்பட்டவன் அவனுக்கு பாட்டனான சூரியதேவன் நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும்பதினெண் புராணங்களும் அப்பியாசம்பண்ணுவித்திருந்தான், அதின்பிறகு இட்சுவாகுமகாராசனும்வசிட்டமுனிவரைக்குருவாக்கிக்கொண்டு அவரிடத்தில் மகாபயபக்தி விசுவாசத்துடன் சிஷனாயிருந்து சகலசாஸ்திரநிபுணனுமிருந்து அநேகயாகாதி கிருத்தியங்களைச்செய்து பூலோகத்தில் துஷ்டர்களாயிருக்கப்பட்ட அநேக ராட்சதர்களைகொன்று ஜெயத்தைப்பொருந்தி ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களும்புகழும்படியான சௌரியபராக்கிரமத்தைப்பெற்று சகல தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிரியமுள்ளவனாயிருந்து அவர்களுக்கெல்லாஞ் சதாகாலமும உபகாரமேறிக்கொண்டு மகாநீதிபரனாயிருந்து பூலோகமுழுதும் ஒருகுடைநிழலின்கீழ் அரசாட்சிசெய்து வருங்காலத்தில்.

ஒருநாள் அந்தயிட்சுவாகுமகாராசனும் ஏகாந்தமாயிருந்து பூர்வத்தில் தன்னுடைய பிதாக்களால் நடத்தப்பட்டிருந்த சத்தகருமானுஷ்டானங்களை மனதில்நினைத்துக்கொண்டு ஓகோ நாம்கிஞ்சிற்றாகிலும்விஷ்ணுபக்திசெய்யாமல் ஐயிஸ்வரிய மதத்தையடைந்து இதுவரையில் விருதாகாலக்ஷேபமாய் நம்முடைய வாணாட்களெல்லாம் வீணாட்களாய் கழித்துவிட்டோம் நம்முடைய பிதாவாகியவைவசுதமனுவும் பாட்டனாகிய சூரியபகவானும் சத்திய லோகத்திற்குப் போய் சதுர்முகப்பிர்மாவைக்கண்டு அவரை ஆசிரியராகக்கொண்டு அவருக்குவந்தனை வழிபாடுகள்செய்து அவருடையகடாட்சவீட்சண்ணியத்தினால்பாஞ்சராத்ரக்கிரமத்தையறிந்து அவரிடத்தில்தானே அஷ்டாட்சரமந்திரோபதேசத்தையும்பெற்றுக்கொண்டு அவருடைய அனுமதியின்பேரில் ஸ்ரீரங்கவிமானத்தை நெடுங்காலம் பூசைபண்ணினபடியால் அவர்கள் சகலமகிமையும் மோட்சத்தையும் பெற்றார்கள் அதுவுமல்லாமல் தேவேந்திரன்முதலாகிய சகல தேவர்களும்முநீஸ்வரர்களும் சத்தியலோகத்திற்குப்போய் அந்தவிமானத்தைப்பூசைபண்ணிஸ்ரீவைகுந்தத்தை அடைந்தார்கள்நாம் இந்தப்பூலோகத்தைவிட்டுச் சத்தியலோகத்திற்குப்போய் பூசைபண்ணக்கூடாது நம்முடையபிற்காலத்தில் நமதுவமிசத்திற் பிறக்கப்பட்டபிள்ளைகளும் சத்தியலோகத்திற்குப்போய்ஸ்ரீரங்கவிமானத்தைக் கண்டு பூசைபண்ணி கிருதார்த்தர்களாகமாட்டார்கள் சத்தியலோகத்திற்குப்போவது எவர்களுக்கும் அசாத்தியமாகவேயிருக்கும் ஆகையால் இவர்களெல்லாரும் எந்தக்காலத்தில் ஸ்ரீரங்கவிமானத்தை பூசை பண்ணிக்கரையேறப்போகிறார்கள்.

ஆதலால் நாமேதபசுபண்ணி நம்முடையதபோபலத்தினாலந்த திவ்வியவிமானத்தை பூலோகத்திற்கொண்டுவந்துசேர்த்து பஞ்சரா பாதாரவிந்தங்களைச் சேரவும் நம்முடைய சந்ததியிற் பிறக்கின்றவர்களுமப்படியே அந்த விமானத்தைப் பூசை பண்ணி பரமபாகவதர்களாவார்களென்றாலோசனை பண்ணி தீர்த்த வைராக்கியத் துடனே யெழுந்திருந்து முனிவர்களுக் கெல்லாம் வசிஷ்டனாகிய வசிஷ்ட முனிவர்களுக் கெல்லாம் வசிஷ்டனாகிய வசிஷ்டமுனிவனிடத்திற்குப் போய் அவரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவனிடத்தில் தானாலோசித்து வந்த காரியத்தை மகா விநயத் துடனே விண்ணப்பஞ் செய்தா னந்த விண்ணப்பத்தைக் கேட்டு வசிஷ்டரும் சந்தோஷ மடைந்து சிஷனாகிய இட்சுவாகு மகா ராசனைப் பார்த்து வாருமையா ராசாவே அந்தப் பிரம லோகமாகிய சத்திய லோகத்தி லிருக் கின்ற ஸ்ரீரங்கவிமானம் நீர் செய்யப்பட்ட தபோ பலத்தினால் பூலோகத்தில் வரப்போகிற தென்று மந்த விமானத்தைப் பூசை பண்ணி உம்முடைய வமிசத்திற் பிறக்கின் றவர்க ளெல்லாம் பர

மபதத்தை அடையப்போகிறார்களென்றும் இன்னம் சிறிதுகாள் கழித்தபிறகு உங்கள் சூரியவமிசத்தில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே ஸ்ரீராமாவதாரம்பண்ணி ராவணசம்மாரஞ்செய்தபிற்பாடு அந்த ராவணேஸ்வரனுடைய தம்பியாகிய விபீஷணருக்கு இலங்காபுரி பட்டணத்தைப் பட்டங்கட்டுவித்து அந்த விபீஷணர் பூசை பண்ணும்படி ரங்கவிமானத்தை கொடுக்கப் போகிறாரென்றும் அப்பால் அந்த விபீஷணாழ்வார் விமானத்தை மகா பயபக்தியுடனே கொண்டுபோய் சோழதேசத்தில் காவேரிநடுவில் சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் எழுந்தருளச்செய்து பூசைபண்ணப் போகிறாரென்றும் பிற்பாடு பிரமப்பிரளய பரியந்தமும காமதேவர் பூலோகத்தில் சந்திரபுஷ்கரணி தீர்த்தத்துக்குவந்து திவம்தினம் அந்தவிமானத்திற்குத்திருவாராதனஞ்செய்துமுடித்து மறுபடியும் தம்முடைய சத்தியலோகத்திற்குப்போவாரென்றும் ஞான திருஷ்டியினாலே நாம்முன்னமே அறிந்திருக்கிறோம்.

ஆகையினால் நீர்செய்த ஆலோசனை நல்லதாச்சு மேலும் இந்தப் பூலோகத்திலுள்ள சகலசீவராசிகளும் பாபத்தினின்றுநீங்கி மோட்சத்தைப்பெறும்படி நீர் தபசுசெய்வதற்குப் பிரயத்தனஞ் செய்தபடியால் அத்தபசு ஒருவிக்கினமுமில்லாமல் நிர்விக்கினமாய்நிறைவேறக்கடவது மேலும் அந்த தபோவிலக்குத் தேவர்கள மிகவும் விகர்தம்பண்ணுவார் அந்த விகர்தங்களெல்லாம் உம்மை அணுகாமலிருக்கக்கடவதென்று ஆசீர்வாதம்பண்ணி அஷ்டாட்சர மந்திரத்தையும் உபதேசித்தருளினார் பிறகு இட்சுவாகு மகாராசனும தனது ஆசிரியராகிய வசிஷ்டமகாமுனிவருக்கு நமஸ்காரம்பண்ணி சுவாமி நானெவ்விடத்திலிருந்து தபசுபண்ணலாமென்றுகேட்க அதற்கு வசிஷ்டரும் அந்தராசனைப்பார்த்து ஓய் ராசதிலகா நீ நம்முடைய ஆசிரமசமீபத்தில் தானேயிருந்து தபசுபண்ணலாமென்று கட்டளையிட்டருளினார் அதுகேட்டு இட்சுவாகுமகாராசனும் தனது ஆசிரியராகிய வசிஷ்டபகவான்சொற்படியே அவரது ஆசிரமசமீபத்திற்றானே தபசுக்குவேண்டிய சகல உபகரணங்களையுஞ் சேகரித்துக்கொண்டு பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணிவிட்டு ஏகமனதாயிருந்துக்கொண்டு தபசுபண்ணத் தொடங்கினான் அதெப்படியென்றால் வெயிற்காலமெல்லாம் பஞ்சாக்கினி மத்தியில்நின்றும் வருஷகாலமெல்லாம் ஈரவஸ்திரத்தை தரித்துக்கொண்டு வெட்டவெளியினின்றும் குளிர்காலமாகிய பனிக்காலமெல்லாம் கழுத்தளவுதண்ணீரில்நின்றும் பசிதாகமுதலிய சவுக்கியங்களை நீக்கியு மதன்மனைவியானவள் சிசுவிடைசெய்யும்படியாகவும் வயிருக்கிய சித்தனாயிருந்து தபசுபண்ணினான் அதையறிந்து தேவேந்திரன் முதலான சகலமானதேவர்களும் ஒன்றாய்க்கூடி ஓ ஓ என்னகாரணம் பூலோகத்தில்

சூரிய வம்சத்திற்பிறந்த இட்சுவாகுமகாராச னென்கப்பதவியை அடையவேண்டுமென்று நினைத்து இப்படிப்பட்ட அகோரமான தபசபண்ணுகிறானே தெரியவில்லை இதையறிந்து நாம் கொடுத்துப் போடவேண்டுமென்று ஒருமுகமாய் ஆலோசனை பண்ணி பிறகு மன்மதனிடத்திற்குப்போய் மன்மதனைக்கண்டு தேவேந்திரன் முதலானதேவர்களும் வெகுவாய்ப்பிரார்த்தித்தார்கள் அதற்கு மன்மதன் சந்தோஷப்பட்டு ஐயா தேவேந்திரன்முதலானவர்களே இப்போது நான் உங்கள் கருத்தின்பிரகாரமே பூலோகத்திற்குப்போய் இட்சுவாகு மகாராசனைக்கண்டு அவன்மனதில் மோகவிகாரமுண்டாகும்படிச்செய்து அவன் செய்யப்பட்டதவத்தை விக்கினம்பண்ணி ஒரு நிமிஷத்தில்வந்து உங்களுக்கு தெரிவிக்கிறேனென்று உறுதியாகச் சபதம்பண்ணிவிட்டு தென்றலாகிய ரதத்தின்மேலே மகாவுல்லாசத்துடனேறிக்கொண்டு மீனக்கொடியானது பிரகாசிக்கவும் சந்திரனும் வசந்தனும் சகாயமாய்வரவும் யக்ஷஸ்திரீகளெல்லாம்சேனைகளாச்சேர்ந்துவரவும் குயிற்காளமும் சமுத்திரபேரிகையும் ஒலிக்கவும் தாம்தாமென்று மகாங்வடாலத்துடனே இட்சுவாகுமகாராசன் தபசுபண்ணுகிறவசிஷ்டமுனி ஆசிரமத்திற் சமீபத்திற்வந்துசேர்ந்தான் அப்போதுநந்தவனத்திற் பிரகாசிக்கப்பட்ட முல்லை, அசோகு, நீலப்சூதப்பூமுளரி இருவாட்சி சண்பகம் புன்னை பாரிஜாதம் முதலான புஷ்பவகைகளெல்லாம் மகாசுகந்தபரிமளங்கள்வீசும்படி மலர்ந்தனகள் அந்தவனத்தில் மன்மதனுடனே வந்த யக்ஷஸ்திரீகளெல்லா மகாவினோதமாகப் பாடிக்கொண்டும் பரதசாஸ்திர முறைமைப்படி யாடிக்கொண்டும் விசித்திரமானபுஷ்பங்களைப்பறித்து ஒருவர்பேரில்ஒருவரெறிந்தும் விகடமான பரியாசவார்த்தைகளை வசனித்துக்கொண்டிருந்தார்கள் அந்தச்சமயத்தில் மன்மதனானவன்மகாபாகவதசிரேஷ்டனாய் விளங்கப்பட்ட இட்சுவாகு மகாராசனுக்கெதிரே போய்நின்று தன்னுடையகையிற் பிடித்திருந்த கரும்பாகிய வில்லைவளைத்து சுரும்பாகியநாணியேற்றிட்டு மோகனாஸ்திரத்தைத்தொடுத்து குயில்கள்கிளிகள் தாளம்பிடிக்கவும் வண்டுகள்ரீங்காரம்பண்ணவும் இவ்வகையாக சம்பிரமத்துடனே இட்சுவாகுமகாராசன்பேரில் பிரயோகம்பண்ணினானப்போது இட்சுவாகுமகாராசன் தபோநிலையைவிட்டு நீங்காதவனாய் கண்களைவிழித்து இதென்னகாரணமென்றுபார்க்குமளவில் மகாசமுத்திரத்தில் அநேகமகாபிரமான மகாமச்சங்கள்கூடி ஏககாலத்தில் சண்டைசெய்து கலக்கினாலெப்படியோ அப்படிபோல அந்தத்தபோவனத்தில் மன்மதனும் வசந்தனும் சந்திரனும் தென்றலும் மயில்களும் கிளிகளும் யக்ஷஸ்திரீகளுமாய்க்கூடி அல்லோலங்கள் செய்வதைப்பார்த்து அணுமாத்ரமும் தவநிலை பிசகாமல் நிவாத்தீபம்போற் பிரகாசித் திருந்தவர்களையெல்

லாம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொரூபமாகவேகண்டு அவர்களுக்கெல்லாம் நமஸ்காரபண்ணி அர்க்கியபாத்திர ஆசமனமுதலான சர்வோபசார பூஜைகளும் ஆனந்தமாகச்செய்தான்.

எப்படியென்றால் அதிதிகளாகிய பெரியோர்களை எப்படிபாவித்துப் பூஜைபண்ணுவார்களோ அப்படியே இவர்களைப் பாவித்துப் பூஜைபண்ணினான் அதுகண்டு மன்மதனுடைய சேனைகளெல்லாரும் பயந்து நடுநடுங்கினவர்களாய் தைரியத்தையும் ஆச்சரியத்தையுமடைந்து மிகவும் வெட்கத்துடனேநின்று இந்த தபோசிரேஷ்டருக்கெதிரேநின்று நாமெதாகிலும் சேஷ்டைபண்ணினால் நம்மைஅதோகெதியாய்சபித்துவிடுவாரென்று ஆலோசித்துக்கொண்டு சுவரிலெழுதிய சித்திரப்பதுமைகள்போல் அசையாமல் நின்றுவிட்டார்கள் அந்தச்சமயமறிந்து வசந்தனும் மெள்ளமெள்ளநழுவிப்போய்விட்டான் சந்திரனும்மறைந்துவிட்டான் ரம்பையும் திலோத்தமையும் தலைசாய்ந்தார்கள் இவன் மற்றஸ்திரீகளெல்லாரும் நாம் இவ்விடத்திலிருக்கப் போகாதென்றெண்ணி மறைந்துபோய்விட்டார்கள் ஊர்வசி மற்றுமுண்டான யக்ஷஸ்திரீகள் முகஞ்சோம்பி தலைசாய்ந்துக்கொண்டு தங்களுக்குள் தாங்களே விசனப்பட்டு ஓஓ எப்படிப்பட்ட மனோதைரியமும் சாந்தகுணமும் வைராக்கியமும் சிறந்தபத்தியும் புண்ணியசிந்தனையுமுடைய ருசனென்றுதெரியாமல் இவரைசெயிக்கும்படியாய்நினைத்துவந்து மோசம்போனோம் நாமினிமேல் இவிடத்திலிருந்தால் நம்மைஎல்லாரையுமிந்தராசசாதபாக்கினியினால் தகித்துப்போடுவார் இவர் எந்தகாரியத்தைக்குறித்து தவம்பண்ணுகிறாரோ அந்தக்காரியமெல்லாமிவருக்கு உடனேசித்தியாகுமென்றுசொல்லிக்கொண்டிவர்களெல்லாரும் தேவலோகத்திற்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

அந்தமன்மதனும் மகாபயத்தையடைந்து தன்கையிற் பிடித்திருந்த கரும்புவில்லையும் புட்பபாணங்களையுங் கீழேஎறிந்துவிட்டு இராசா நான்உம்முடைய குணநுபவங்களைத்தெரியாமல் நீர்செய்யும்படியான தவசை விக்கினப்செயவதாக நினைத்துவந்தேன் அந்தக்குற்றத்தை நீரேபொறுத்தருளவேண்டும் நீரிப்படி பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம்பண்ணி திடசித்தனையிருந்து மகத்தாகிய தபசுபண்ணுகிறபடியால் இந்ததபசு ஒருவிக்கினமுமில்லாமல் நிர்விக்கினமாய் உமக்குசித்தியாகவேண்டு மிந்தபூலோகத்தில் மகாரிஷிகளாயிருக்கப்பட்டவர்களும் அங்கசனாகியவென்னைச்செயித்ததில்லை சாம்பவமூர்த்தியும் மகாகோபங்கொண்டு என்னைச்செயிக்கிறோமென்று நெற்றிக்கண்ணினால் என்னைச்சாம்பலாய் எரித்துப்போட்டு தானபசெ

யத்தைப்பொருந்தினர் நாளும் வசந்தவனுமாய்ப்புறப்பட்டுப்போய் பிர்மாதிதேவர்களையும் சகலலோகத்திலுள்ளமனிதர்களையுந் தபோதனர்களையுமொருநிமிஷமாத்திரத்தில் ஜெயித்துவருவோம் எப்படிப்பட்ட சக்கியானவர்களானவர்களா யிருந்தபோதிலு மெங்களை ஜெயிக்கமாட்டார்கள் நாங்களிரண்டுபேரும் தேவேந்திரனுக்கு இரண்டுகண்களாகவு மிரண்டு ஆயுதமாகவுமிருப்போம் நீரோவென்றால் ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்குச் சமானமான புண்ணியபுருஷரும் நீர்காமக்குரோதமுதலான ஆறுபகைகளையுங் கடிந்தவரும் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனைஞ்செய்யத்தக்கவரும் நீர் ஆகையால் எங்களையெல்லாம் ஏககாலத்தில் ஏகாக்கிரகசித்தமாயிருந்து ஒருக்ஷணமாத்திரத்தில் ஜெயித்துவிட்டீர் இனிமேல்நாங்கள் இவ்விடத்திலிருக்கமாட்டோம் நாங்கள்போய்வருகிறோம் உனக்கு அனேகநமஸ்காரஞ் செய்தோம் நீர் இவ்வளவுஉறுதியாயிருந்து செய்யப்பட்டதவநிலை சித்தியாக்கடவதென்று ஆசிர்வாதம்பண்ணிவிட்டு தெய்வலோகத்துக்குப்போனான்.

கேட்டீரோ நாரதரே அப்பால்மன்மதனானவன் தேவலோகத்திற்குப்போய் தேவேந்திரனைக்கண்டு மகாபயங்கரத்துடனேநின்று ஓய தேவதேவா பூலோகத்தில் தபசுபண்ணின மகாமுனீஸ்வரர்களை வென்றேன் அந்தபரம பாகவதோத்தமனாகிய இட்சுவாகுமகாராசனுடையதபசைவெல்ல என்னால்முடியாது ஹரிஹரியென்றுசொல்லிவிட்டுத்தனனுடைய ஸ்தானத்திற்குப்போனா னந்தவார்த்தையைத் தேவேந்திரனகேட்டு மகாகோபங்கொண்டு ஐராவதத்தின்பேரில் ஏறிக்கொண்டுசகலதேவர்களும் புடைசூழும்படி பூலோகத்தில்வசிஷ்டமுனிவராசிரமத்திற்குப்போய் அந்த ஆசிரமத்தின் சமீபத்தில்தபசுபண்ணுகிற இட்சுவாகுமகாராசனுக் கெதிராகநின்றா னதுகண்டு இச்சுவாகுமகாராசனும் தன்னிலையைவிட்டுஎழுந்திருந்துவந்து மகாபயபக்திவிசுவாசத்துடனே தேவராசனையும் தேவர்களையுங் கண்டு தெண்டனிட்டு சுவாமிகளே நான்செய்ததபோபலத்தினால் உங்களையெல்லாங்கண்டு தரிசனஞ்செய்து கிருதார்த்த னாகினேனென்று பலவாறாக தௌத்தியம்பண்ணி அந்ததேவராசனுக்கு அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சர்வோபசாரத்துடன் பூசைபண்ணினான்.

தேவேந்திரனும் அப்படிசெய்யப்பட்ட பூசையை அங்கீகரித்துக்கொள்ளாமல மகா உக்கிர பராக்கிரமத் துடனே தன்கையிலிருக்கப்பட்ட வச்சிராயுதத்தை எடுத்து வீசின ஓசையானது அனேக மாயிரம் நீரிடிகள் நெருப்பிடிகள் இடித்தாற்போலாகி அதனால் அண்டகடாகங்களெல்லாம் ஒருசாம நேரமட்டும் அதிர்சிலர் நடுங்கினது அஷ்டதிசையிலுள்ளவர்களு மிதென்ன விபரீதகாலமோவென்று பயந்து திடுக்கிட்டார்களப்படி யிருக்க இந்தஇ

ட்சுவாகுமகாராசனுடையசரீரமும் நடுக்கமில்லை யவனுடைய பரிசு
த்தமனமும் எவ்வளவுங் கலங்காமலிருந்தது அப்பொழுது இட்சு
வாகுமகாராசனும் அரிநமோநாராயணா ஆதிமத்தியாந்தரகிதா ஆப
த்பாந்த அனாதரட்சகா பக்தவச்சலா பரமபுருஷா பரந்தாமா பத்ம
நாபாவென்று ஸ்தோத்திரபாராயணங்களைச்செய்தான் அதுதெரிந்
து ஸ்ரீவைகுந்தத்தில் பரமபாகவதர்களுடன் மகாலட்சுமிசமேதரா
யெழுந்தருளியிருக்கப்பட்ட சக்கராயுதத்தை யனுப்பிவைத்தார் அ
ந்தச்சக்கராயுதமானது கோடிசூரியப்பிரகாசம்போலதகதகாயமா
ய்பிரகாசித்துக்கொண்டு வாயுவேகத்திலும் அதிவேகமாய்ப் புறப்ப
ட்டுச் சரேலென்றுவந்து தேவேந்திரன் வீசின வச்சிராயுதத்திற்கு
எதிரேவந்து மறித்துநின்றது அப்போது தேவேந்திரனுடைய வச்சி
ராயுதமானது சூரியப்பிரகாசத்திற்கு எதிர்பட்ட மின்மினிப் புழுப்
போல ஒளிமழுங்கிநின்றது தேவேந்திரனும் சகலதேவர்களும் பயந்
து நடுநடுங்கி சக்ராயுதத்திற்கு மகாவிநயத்துடனே பிரதக்ஷண நம
ஸ்காரங்கள்செய்து ஹரிநமோநமாவென்று ஸ்தவுத்தியம் செய்துக்
கொண்டு மகாவிசனத்துடனே தங்களுடைய லோகத்துக்குப் போ
ய்விட்டார்கள்.

அப்பால் இட்சுவாகு மகாராசனும் ஸ்ரீரங்கதாமா ரங்கதாமா
வென்றுதியானித்துப் பழையபடியே தன்னுடைய தவநிலையிற்போ
ய்ச்சேர்ந்து முன்னிலும் அதிகமான சித்தவயிராக்கியத்துடனிருந்
துதபசுபண்ணினார் பிற்பாடு தேவேந்திரனும் அதனால் வெட்கமடை
ந்து மிகுந்தமனோவியாகூலத்துடன் சத்தியலோகத்துக்குப்போய் பி
ரமதேவனைக்கண்டு நமஸ்காரஞ்செய்து ஓய் சதுர்முகப்பிரமாவே பூ
லோகத்தில இட்சுவாகுமகாராசன நம்முடையபதவிகளை யடையும்
படிநினைத்து மகத்தாகிய தபசுசெய்கிறான் அந்ததபசு நிறைவேறாம
ல் விக்கினமாகும்படி மன்மதனையும் அவனுடையசேனைகளையும் அ
னுப்பினேன் நானுஞ்சகலதேவர்களுடனேபுறப்பட்டுப்போய் அவனு
டையதபாக்கினிக்கு யான் சகித்துநிற்கமாட்டாமல் மகாலச்சையுட
னேவந்துவிட்டேன் இனியென்னசெய்யலாம் நீயே ஆலோசனைசெ
ய்துச் சொல்லவேண்டுமென்று சொன்னான் அந்தச் சொல்லானது
நாராசங்காய்ச்சிவிட்டதுபோல் செவியில்நுழைந்தமாத்திரத்தில்பி
ரமதேவனும்திடுக்கிட்டு ஹரிஹரியென்ன அவனுடைய எட்டுக்காது
களிலும் கைகளைவைத்து எட்டுக்கண்களையும் மூடிக்கொண்டு தியா
னித்தபொழுது இட்சுவாகுமகாராசன் ஸ்ரீரங்கவிமானத்தை நோக்
கித்தபசுசெய்கிறானென்றுதெரிந்து பிரமதேவன் மூர்ச்சையாகப்பூ
மியில்விழுந்துகிடந்து வெகுநேரத்துக்குப்பின் மூர்ச்சைதெளிந்து
தனக்குத்தானே மனோதைரியமாக எழுந்திருந்து தேவேந்திரனை

லாகுகொடுத்துவர மெள்ளமெள்ளநடந்து ஸ்ரீரங்கவிமானத்திற்போ
ய் ஸ்ரீரங்கநாயகரைக்கண்டுசேவைசெய்துமனோவியாகூலமாய் அழு
துக்கொண்டுநின்றார் அதுகண்டு ஸ்ரீரங்கநாயகரும் பிரமதேவனைப்
பார்த்து வாருமப்பாபிர்மாவே நீயேன் இப்படி விசாரப்படுகிறாய் நீ
ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் எப்போதும் உதயகாலபூசையை உ
ம்முடையகைகளினாலே பெற்றுக்கொள்ளுகிறோம் இப்போது நாம்
இட்சுவாகுமகாராசன்செய்கிற தவத்துக்குப் பிரியமாய் அயோத்தி
யாபுரிபட்டணத்துக்குப்போய் அவ்விடத்தில் நாலுயுகமளவு மிரு
ந்து அதற்குமேல் காவேரிதீர்த்தமான சந்திரபுஷ்கரணியில் ஏழும
னுக்களுடைய காலமட்டுமிருப்போம்.

நீசெய்யப்பட்ட மத்தியானபூசைவேளைக்கு இவ்விடத்தில் நா
ன்தப்பாமல்வந்து உன்னுடையபூசையையும் அங்கீகரிப்போம் உன்
னுடையபூசைமுடிந்தபிறகு மறுபடியும் பூலோகத்திற்குப் போவோ
ம் இந்தப்பிரகாரம் உன்னுடைய ஆயுசுபரியந்தம் நம்மைவிசுவாசமா
கப்பூசைபண்ணுமற்போனால் மறுபடியும் ரட்சணைபண்ணவேண்டும்
ஆறுமாதமட்டும் பூசைபண்ணுமற்போனால் மறுபடியும் பிரதிஷ்டை
பண்ணவேண்டும் அப்படிக்கில்லாமல் நாம் உன்னிடத்தில்வந்து திரி
காலபூசையும் ஏற்றுக்கொள்ளுகிற படியினால் உனக்கொரு விக்கின
முமில்லை மற்றதேவஸ்தானங்களெல்லாம் ஒருநாள் அடைத்துவைத்
திருந்தபோதிலும் பிராயசித்தமுண்டு பூர்வத்தில் உனக்குச்சொல்லி
யிருக்கப்பட்ட சுயம்புவாகிய அஷ்டதலங்களும் பிராயச்சித்தமில்
லை ஆகையால்நீயொன்றுக்கும்விசனப்படாமல் நம்மை இந்தவிமான
த்தோடுகொண்டுபோய் பூலோகத்தில் இட்சுவாகுமகாராசன்கையி
ல் ஒப்புவிக்கக்கடவாய் அதனால் உனக்கொருதாழ்ச்சியும் வாராதெ
ன்று சொல்லியருளினர்.

அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பிரமதேவன் மகிழ்
ச்சியடைந்து செயமென்று கொண்டாடி தேவேந்திரனுக்கு விடை
கொடுத்தனுப்பிவிட்டு பிற்பாடு கருடாழ்வாரை அனுப்பிவைத்து அ
வருடையசிரசின்பேரில் அந்தஸ்ரீரங்கவிமானத்தைஎடுப்பித்துக்கொ
ண்டு தானும் அன்னவாகனத்தின்மே லேறிக்கொண்டு பூலோகத்தி
லே அயோத்தியாபுரி பட்டணத்தில் இட்சுவாகுமகாராசன் தபசுப
ண்ணுகிற வசிஷ்டமுனிவராசிரமத்திற்குவந்த தபோநிதியாயிருக்கி
றமகாராசனுக்குமுன் இந்தவிமானத்தைக் கொண்டுபோய்வைத்து
ஓய் இட்சுவாகுமகாராசாவே நீசெய்கிற தபசுக்குத் திருவுளமகிழ்ந்
து பெருமாள்விமானதரிசனங்கொடுத்து உம்மைரட்சிக்கும்படி இ
தோஎழுந்தருளி இருக்கிறார் இனிநீர் தபோநிலையைவிட்டு எழுந்தி
ருந்து சேவித்துக்கொள்ளுமென்று சொன்னார்.

அந்தவசனங்களானது இட்சுவாகு மகாராசனுடைய செவிக
ளில் அமுதவருஷம் வருஷித்ததுபோ லிருந்தமாத்திரத்தில் திடுக்

இட்டு அரிஅரியென்று கண்கள்திறந்து எதிரேயிருக்கிற விமானத்
தையும் சதுர்முகப்பிர்மாவையுங்கண்டு மகா சந்தோஷமாய் திடீ
லென்றெழுந்து நின்று திவ்வியதேஜோமய வுல்லாசமாய்ப் பிரகாசி
க்கப்பட்டரங்கவிமானத்துக்கும் அன்னவாகனத்தின்மேலேறிவந்
த சதுர்முகப்பிர்மாவுக்கும் அனேகம் பிரதட்சண நமஸ்காரங்கள்
செய்து அர்க்கியபாத்திய ஆசமனமுதலிய சர்வோபசாரங்களுஞ்செ
ய்து மகாபயபக்தி விநயத்துடனே கைகட்டி வாய்பொத்திக்கொண்
டு நின்றான் அப்படிநின்ற மகாராசனைப்பார்த்து ஓ இட்சுவாகுமகா
ராசாவே நீர்செய்த தபோபலத்தினால் உமக்கு இந்தத்திவ்வியவிமா
னங்கிடைத்தது இதைநீர்ஐந்துகாலமும் தவறாமல் பாஞ்சராத்திரக்
கிரமங்கள்தெரிந்த ஐந்தும்பேர்உருத்திரர்களுடனிருந்து பூசைபண்
ணுமென்று முன்பெருமாள்தனக்குபதேசஞ்செய்திருந்தசகலமந்தி
ரங்களையும் சங்கற்பக்கிரியைகளையும உபதேசஞ்செய்து ஆசீர்வாத
ஞ்செய்தந்தராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கெருடாழ்வா
ருந்தானுமாய்ப்புறப்பட்டு பிரமதேவன சத்தியலோகத்திற்குப் போ
னான்.

அப்பால் இட்சுவாகுமகாராசனும் பிரமதேவனும் கட்டளையி
ட்டபடி விமானத்தைவைத்து ஐந்துகாலமும் வேதபாராயணங்கள
றிந்தபிராம்மணர் கூட்டத்துடனிருந்து மகா பயபக்தி வயிராக்கியத்
துடன் பூசைசெய்துக்கொண்டு இருந்தான் கேட்டீரோ நாரதமுனி
வரேயென்று பரமசிவன் திருவுளம்போற்றியருளினார் அதுகேட்டு
நாரதரும் மகாசந்தோஷமடைந்து ரங்காரங்காவென்றுமனதில்தியா
னித்துக்கொண்டு சற்றுநேரம் சும்மாவிருந்தார்.

ஏழாவது அத்தியாயம்-முற்றிற்று.

நல்லான்சக்கிரவர்த்தித்திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீரங்கநாதாய நமஹா.

# எட்டாம் அத்தியாயம்.

திரவுதிரைக்கடற்புவியில் வசுதேவன்தேவகியாள்மைந்தனாகத்
திருவவதாரம்புரிந்து பலராமப்பெயர்புனைந்து தீயோரான
பிரலம்பன்முதலோரைக் கொன்றுலகையாளவித்துப் பிரமனாதி
சுரர்முனிவர்தொழுதேத்தவரங்கத்திற்கண்வளரச் சுதனேபோற்றி.

அப்பால் நாரதமுனிவரெழுந்து ஸ்ரீகைலாசபதியாகிய பரமசி
வனுக்கு நமஸ்காரம்பண்ணி சுவாமிதிரிபுராந்தகா தீனரக்ஷகாதேவரீ
ர்சொல்லுகின்ற சரித்திரத்தைக்கேட்க இன்னும் கேட்கவேண்டுமெ
ன்று ஆசைமேலிடுகின்றதேயல்லாமல் அந்தமட்டும் கேட்டதுபோ

துமின்றுதோற்றமில்லையாதலால் அதற்குமேல்இட்சவாகுமகாராஜ
ன அந்தவிமானத்தைவைத்துப்பூசைபண்ணி மோட்சத்தையடைந்
தசரித்திரத்தையும்சவிஸ்தாரஞ்செய்யபரமசிவன் திருவுளம் வேண்
டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்போற்றி யரு
ளுகின்றார்

வேளுதனமயா பரவசனாகி அயோத்தியாபுரிபட்டணத்துக்குவடத்
தசபாரிசத்தில் ஒருநாழிகைவழிக்கப்பால் சரையுநதிக்கும் விராசந
திக்குமத்தியில் கோயிலுண்டாக்கி அந்தக்கோயிலுக்குகோபுரங்கள்
பிராகாரங்கள் மண்டபங்கள் மதில்கள் திருக்குளங்கள் நந்தவனங்க
ள்முதலானதுகளும் சிற்பசாஸ்திரக் கிரமப்பிரகாரம் தேவதச்சனு
ல் நிர்மிக்கப்பட்டு அதைச்சுற்றிலும் யேழு பிரகாரங்க ளுண்டாக்கி
அந்தப்பிரகாரங்கள்தோறும் வசிஷ்டர்வாமதேவர் காசிபர்முதலான
மகாமுனீஸ்வரர்களுக்கு யோக்கியமான ஆசிரமங்கள் உண்டுபண்ணி
பங்குனிமாதம்சுக்கிலபட்சம் ஆகியசுபதினத்தில்அந்ததிவ்வியமான
த்தை மகாசம்பிரமத்துடனே எடுப்பித்துக்கொண்டுபோய்சந்நிதியி
லெழுந்தருளச்செய்து பாஞ்சராத்திரிகக்கிரமத்தின்படி வசிஷ்டர்மு
தலான ரிஷிகளுடனிருந்து பூசைபண்ணி அதற்குமேல் பிரமோச்ச
வம்பண்ணும்படி நியமித்துக்கொண்டு மகாவைபோக உல்லாசமாய்
அந்தப்பட்டணத்திலுள்ள சீயராசிகள்முழுதும் பெருமாள் சேவை
செய்து பரமபதத்தை அடைவதற்கு எதுவாய்ஜாரோகணஞ்செய்
து அன்றுமுதல்கடைசிநாள்மட்டும் மகாவைபவஅலங்காரத்துடன்
தினந்தினம் வீதிகள்தோறும பெருமாளை எழுந்தருளச்செய்து சக
லரும் சேவைசாதிக்கும்படி செய்வித்து அந்தஸ்தலத்தில் பங்குனி
மாதமாக உத்திரட்டாதி நட்சத்திரத்தில் தில் நியமங்கள ஸ்நானம்
பண்ணுவித்தான்.

அப்பால் நாள்தோறும் கிரமந்தப்பாமல் திரிகாலமும் பூசை ந
டப்பித்துக்கொண்டு வெகுகாலம் மனுநீதிவழுவாமல் ராச்சிய பரி
பாலனஞ்செய்து பிறகு ஸ்ரீமந்நாராயண மூர்த்தியினுடைய பரிபூ
ரணகடாக்ஷம்பெற்று ஸ்ரீவைகுந்தத்தில்நித்தியசூரியர்களாகியபரம
பாகவதர்களுடன் சேர்ந்திருந்தார் அதற்குமேல் அந்த வமிசத்திற்
பிறந்த ராசாக்களெல்லாரும் வைஷ்ணவ சிகாமணிகளாயிருந்து பா
ஞ்சராத்திரிக் கிரமந்தப்பாமல் நித்தியம் திரிகாலமும் பூசைசெய்து
க்கொண்டு வந்தார்கள் அப்படி நாலுயுக மாச்சுது பிறகு அந்தச்
சூரியவமிசத்தில் தசரத சக்கிரவர்த்தி யானவர் பிறந்து மனுநீ
தி தப்பாமல் அறுபதினாயிர வருஷ மட்டும் ராச்சிய பரிபாலனஞ்
செய்து வருங்காலத்தில் அந்தத தசரத சக்கிரவர்த்திக்கு வெகுநா
ள்பிள்ளையில்லாமலிருந்து அதனால அந்தராசன மனோவியாக்கூலம
டைந்து அசுவமேதயாகஞ் செயயும்படி பிரயத்தினப்பட்டார் அந்
த யாகத்திற்கு ஐம்பத்தாறு தேசத்திலுள்ள ராசாக்களும வந்திருந்
தார்கள் சோழமண்டலாதிபதியாகிய தர்மப்பிரமாவென்கிற ராஜனும்

வந்திருந்தான் அவன் அந்தவிமானத்தைக்கண்டுசேவைசெய்து அது வரலாறுமுழுதும் அவ்விடத்திலிருந்தமுநீஸ்வரர்களால்கேள்விப்பட்டான்.

அப்படிக்கேள்விப்பட்டமாத்திரத்தில் பூர்வம் வைவசுதமனுவின் புத்திரராகிய இட்சுவாகு மகாராசரானவர் பரிசுத்தராயிருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நோக்கித் தபசுபண்ணி இந்தவிமானத்தைத் தம்முடையதபோ லத்தினால் பூமியிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு தாமும் தம்முடைய வம்சத்திற்பிறந்த ராசர்களெல்லாரும்பூசைபண்ணிப் பூலோகத்தில பெருமபிதிஷ்டையும்பெற்று தீர்க்காயுசுடையவராயிருந்து முடிவில் அனுபாச்சிரவணத்தைப்பொருந்தி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடைய கடாட்சண்ணியத்தினால் பரமபதத்தை யடைந்தார்கள் நாமும் அந்தப் பிரகாரமே தபசுசெய்து கிருதார்த்தனாக வேண்டுமென்று மனதில் உறுதியாக எண்ணிக்கொண்டு தன்னுடைய சோழதேசமே போய்ச்சேர்ந்து தபசுக்கிருக்கவேண்டிய கிரமப்படி சந்திர புஷ்பகரணி தீர்த்தக் கரையில் ஓரிடம் நியமித்துக்கொண்டு அவ்விடத்தில் தானே அனேகநாள பரிசுத்தமனத்தையுடையவனாயிருந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நோக்கி அகோரமான தவஞ்செய்துக் கொண்டிருந்தான்.

அந்த வர்த்தமானந் தெரிந்து அவ்விடத்திலுள்ள ஆசிரமங்களிருக்கப்பட்ட முநீஸ்வரர்களுக் கெல்லாம் தர்மப பிரமாவென்கிற சோழராஜனிடத்திற்குவந்து அந்தராஜனிருக்குந் தவநிலையைப்பார்த்து ஐயா சோழதேசாதிபதியே தர்மந் தப்பாமலிருந்து ராச்சியபரிபாலனம் பண்ணப்பட்ட ராஜாக்கள் தபசுபண்ண வேண்டியதில்லையேநாங்கள் பஞ்சாக்கினி மத்தியி லிருந்து செய்யப்பட்ட தபோபலத்தில் ஆறிலொருபங்கு பூலோகத்து ராசாக்களைச்சேரும் ஆகையால் நாங்கள்செய்யப்பட்ட தபசுக்குமாத்திரம் ஒருவிக்கினமும் வரவொட்டாமல் நீர்காப்பாற்றும் அப்படி காப்பாற்றுவீ ராகில் உம்முடைய இஷ்டசித்திகளெல்லாம் கைகூடிவரும இந்தவார்த்தையிற் சந்தேகமில்லையென்று தெகுவாய்ச் சொன்னார்கள் அந்தவார்த்தையைக்கேட்டமாத்திரத்தில் தர்மப்பிரமாவாகிய சோழராஜனெழுந்து முநீஸ்வரர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அர்க்கிய பாத்திய ஆசனமுதலான சர்வோபசாரஞ்செய்து முடித்து அவர்களை கும்பிட்டு நின்று ஓய் முநீஸ்வரர்களே நான் உங்களெல்லாருக்கும் இதமுண்டாகும் படி நினைத்து இப்படித் தபசுபண்ணத் தொடங்கினேன் அஃதென்னவென்றால் அயோத்தியாபுரி பட்டணத்தில் இட்சுவாகு மகாராசன் தபசுசெய்து பூர்வத்தில் சத்தியலோகத்திலிருந்த விமானத்தை தன்னுடைய பட்டணத்திற் கொண்டுபோய் சேர்த்து அதைப் பூசைசெய்து அதனால்வரும அவர் வம்சத்திற் பிறந்த ராசாக்களும பரமபாகவதர்களாகி மோட்சத்தையும் பெற்றார்களே அதுபோலநானும் தபசுசெய்து அந்த விமானத்தை நம்

முடையதேசத்திற் கெழுந்தருளச் செய்யும்படி கருதினேனென்று மகா தாயந்திரியமாகச் சொன்னான்.

அதுகேட்டு அக்கமுனீஸ்வரர்களெல்லாரும் சோழராசனைப் பார்த்து ஓய்ராசாவே நீரவ்வளவும் சந்தேகப் படவேண்டாம் நீர் இந்த தத்துவவேடத்தை நீக்கிவிட்டு உம்முடைய பட்டணத்திற்குப்போய்சுகமாய்ப்பரிபாலனம்பண்ணும் அந்ததிவ்வியவிமானம்இன்னஞ்சிறிதுகாலத்துக்குள் இந்தச் சந்திரபுஷ்பகரணி தீர்த்தக்கரையில் வந்து சேரப்போகின்றது அந்தவர்த்தமானம் எங்களுக்கு நன்றாய்த்தெரியும் எப்படியென்றால் இந்தச் சந்திரபுஷ்பகரணி தீர்த்தத்திற்கு இரண்டு நாழிவழிக் கப்பாலும் உம்முடைய பாட்டன்மார் அரசாட்சி பண்ணிக்கொண்டிருந்த ஒரு பெரியபட்டணமுண்டு இப்போது மண்மேடாய்ப்போச்சுது.

ஏனென்றால் சிவபூசைபண்ணும்படி நந்தவனத்திலிருந்துபறித்துக்கொண்டுபோகிறபுஷ்பக்குடலையிலிருந்து ஒருசெவ்வந்திப்புஷ்பத்தைப் பலவத்காரமாகப்பிடுங்கி அந்த பட்டணத்திற் கந்நாளையில் ராசாவாயிருந்தவன் தரித்துக்கொண்டான் அந்தச்சோதிபரமேஸ்வரருக்குத்தெரிந்து அந்தப்பட்டணமுழுதும் மண்மாரி செய்யும்படி செய்தருளின ராதலால் மண்மேடாகி விட்டது அதற்கு நேராக உத்திரபாரிசத்தில் காவேரி தீர்த்தத்திற்குஅக்கரையில்புலஸ்திய முனிவருடைய சிஷரா விருக்கப்பட்ட காலப்பிய மகாமுனிவர் சத்தியமென்கிற புண்ணியாச் சிரமத்தில் ஏகாந்தமாய் தபசுசெய்துக் கொண்டிருந்தார் நாங்க ளெல்லோரும் ஒருகாரணநிமித்தம் அந்தமுனிவரைக்காணும்படி அவ்விடத்திற்கும் போயிருந்தோம் அப்போது அந்த ஆசிரமத்துக்கு வாய்வுமூலையில் நீலிவனமென்னும் ஒருவனமுண்டு அந்த வனத்திலேயே வாசமாயிருந்து வருகின்ற முனிவர்களையெல்லாந் துரத்தியடித்துக் கொல்லுகின்ற மகாபாதகனாகிய விபாக்கிரமாத சாதனென்னும் பெயரையுடைய ராட்சதனைச் சங்காரஞ் செய்து சகல முனீஸ்வரர்களுடைய மனோபயத்தையும் நிவர்த்திசெய்யும்பொருட்டு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் அந்தநீலிவனத்திற்கு எழுந்தருளிவந்து பிரமாதிசகலதேவர்களும்செயம் செயமென்று கொண்டாடும்படியாகி அந்தக்குரூரபாதகனாகிய ராட்சதனை ஒருநிமிஷத்தில் சங்கரித்துவிட்டு அந்த வனத்திலிருந்து தபசுபண்ணுகின்ற முனீஸ்வரர்களுக்கெல்லாம் திருச்சேவைசாதித்தருளி அப்பால்பெருமாளானவர்தாலப்பியமுனிவருடைய ஆசிரமத்திற்கு எழுந்தருளி வந்து சேவைசாய்த்தார்.

அது கண்டு தாலப்பிய மகாமுனிவரும் நாங்களும் எழுந்திருந்து மகா பயபத்தி விநயத் துடனே பெருமாளுக்கு நமஸ்காரஞ் செய்து அர்க்கியபாத்திய ஆசமன முதலான சகல வுபசாரங்களுங்கிரமமாகச் செய்துமுடித்து அந்தப்பகவானுக்குமுன்னாங்களெல்லோரும் அஞ்சலியஸ்தர்களாய் நின்றுகொண்டு சுவாமிபக்த

வச்சலா பரமபுருஷா அரீ அரீநமோநமோநமோநாராயணாவென்று ஸ்தவுத்தியம் பண்ணி தேவரீர் அடியேங்களெல்லாரும் பூசைசெய்தகளையேறத்தக்கதாய் இந்த ஆச்சிரமத்திலெ நவிக்கிரரூபமாய்ச்சேவைசாதித்து நாள்தோறும் நாங்கள் செய்யப்பட்ட ஸ்தோத்திரபாராயணங்களையும் பூசைகளையும் அங்கீகாரம்பண்ணி எங்களைக்காப்பாற்றிரட்சித்தருளவேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்தனைசெய்தோம் பெருமாளும்நாங்கள்செய்தபிரார்த்தனைக்குத்திருவுளமிரங்கிஎங்களுக்குத்தேறுதல்சொல்லி ஓய்முநீஸ்வரர்களே ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்நாம் இன்னஞ்சிறிதுகாலைக்குளயோத்தியாபுரிபட்டணத்தில்தசரதசக்கிரவர்த்தி செய்யப்பட்ட யாகத்தில்அவருக்குசிமந்தபுத்திரனாய் அவதாரஞ்செய்துமகாதுஷ்டனாகிய இராவணசம்மாரம்பண்ணிஇலங்காபுரிபட்டணத்தை அவன்தம்பியாகிய விபீஷணாழ்வானுக்கே பட்டங்கட்டுவித்தபிற்பாடு இட்சவாகு மகாராசனிமித்தம்முன்னமேகடாட்சித்தருளியவிமானத்தைப் பூசைபண்ணும்படி அவ்விபீஷணாழ்வானிடத்திற் கொடுத்தருளுவோம்.

அந்தவிபீஷணாழ்வான்கொண்டுவந்தகாவேரிமத்தியில்சந்திரபுஷ்கரணிதீர்த்தத்திலே அநந்தபீடத்தில்வைத்து சதாகாலமும்திருவாராதனைக்கிரமப்படி பூசைபண்ணப்போகிறான் அப்போதுநீங்களெல்லாரும்அந்தவிமானத்தில் விக்கிரகச்சொரூபமாய்ச் சேவைசாதித்தெழுந்தருளியிருக்கப்பட்டநம்மைசதாகாலமும்சேவைபண்ணி உங்களுக்குமனோரம்மியமானசிலசித்தி முத்திகளையடையப்போகிறீர்களென்றுஎங்களுக்குறுதிமொழியாய் திருவாக்களித்துவிட்டு இந்திராதிசகலதேவர்களும் ஸ்தவுத்தியம் பண்ணும்படியாய் மகாவைபோகத்துடனே பெருமாள் ஸ்ரீவைகுந்தத்திற்குப் போய்விட்டார் நாங்களெல்லாரும் அவருக்குப் பிறகேநின்று வேதபாராயணங்கள் செய்துக்கொண்டு சூரியபகவான் எங்களைக்கண்டு ஆதரனைபண்ணி ஓமுநீஸ்வரர்களேநீங்கள்பெருமாள் கட்டளையிட்டருளிய திருவாக்கு சந்தேகப்படவேண்டுவதில்லை தாங்கள் ஆதியில் பிர்மலோகத்திற்குப்போய் விமானத்தில் விக்கிரகச்சொரூபமாய் சர்வாடம்பரத்துடனே ஆதிசேஷசயனத்தில் திருக்கண் வளர்ந்தருளுகின்ற பகவானைப்பார்த்து வெகுவாய்ப்பிரார்த்தித்தோம அந்தப் பிரார்த்தனைக்கும் பகவான் திருவுளமகிழ்ந்து ஒருவசனங் கட்டளையிட்டருளினார்.

அதென்னவென்றால் நாம் இலநாளைக்குள் உன்னுடைய வமிசத்திற் பிறந்த இராசாக்களெல்லாம் பூசை செய்து இஷ்டசித்திகளையும் மோக்ஷத்தையும் பெறும்படி அயோத்தியாபுரிபட்டணத்தில் இந்த விமானத்துடனெழுந்தருளுவோம் அப்பால் சிறிதுநாளைக்குப் பின்பு காவேரிமத்தியில் சந்திரபுட்கரணி தீர்த்தத்தில் அனந்த பீடத்தி லிருந்து விபீஷணாழ்வானால் பூசிக்கப்பெற்று பிற

கு சோழராஜனாலும் பூலோகத்திலுள்ள மற்றுமுண்டான நம்மு
டைய பக்தசெனங்களாலும் பூசிக்கப்படுவோம் பிற்பாடுகலியுகத்தி
லும் நம்முடைய மகத்துவம்தெரிந்து நம்மைப்பூசைபண்ணுகின்றப
க்தசனங்களையும் இரக்ஷித்து மோட்சத்தைக்கொடுத்தருளுவோமெ
ன்றும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார் ஆதலால்நீங்களெல்லோ
ரும் காவேரிதீர்த்தக்கரையைவிட்டு நீங்காமல்தபசுபண்ணிக்கொண்
டிருங்களென்றுசொன்னார் ஆதலால்நாங்களெல்லோரும் அந்தவிமா
னத்தைத் தரிசிக்கும்படி நாங்களெல்லோரும் அபேட்சைகொண்டு
இவ்விடத்தில்காத்துக்கொண்டு இரவும்பகலும் அதேகிந்தனையாக
விருக்கிறோம்ஓய்சோழராசாவே இப்போது அந்தத் திருவாக்குப்பிச
காமல் அயோத்தியாபுரியில் தசரதர்மகனாகப் பெருமான்திருவவதா
ரம்பண்ணியிருக்கிறார் இனிமேல்இராவணசம்மாரம்பண்ணி விபீஷ
ணாழ்வானுக்குப் பட்டங்கட்டிவைத்துப்பிற்பாடு அயோத்தியாபுரிக்
குச் சீதாலட்சுமணர் பரதசத்துருக்கர் ஆஞ்சனேயசமேதராய் புஷ்
பவிமானத்தின்பேரிலேயெழுந்தருளிவந்து பட்டாபிஷேகஞ்செய்து
கொண்டு அஸ்வமேதயாகம்பண்ணுகின்ற காலத்தில் அந்தவிமான
த்தைப்பூசைபண்ணும்படி விபீஷணாழ்வாரிடத்தில்கொடுத்தனுப்பப்
போகிறார் நாங்கள் பொய்வார்த்தைவசனிக்கமாட்டோம்.

அந்த விபீஷணாழ்வார் விமானத்தை இவ்விடத்திற் கொண்
டு வந்தவுடன் உமக்குச் சேதி தெரிவிக்கின்றோம் நீர் இந்தவார்த்
தையைச் சத்தியமாக நினைத்து மனோதைரியமாய் உம்முடைய நிஷ்
களாபுரியென்னும் பட்டணமே போய்ச் சேர்ந்து சுகமாய் ராச்சிய
பரிபாலனம் பண்ணிக் கொண்டிருமென்று அந்த முநீஸ்வரர்களெ
ல்லாம் ஒருமுகமாய்ச் சொன்னார்கள் அந்தவார்த்தையைக்கேட்டுதர்
மபிர்மாவாகிய சோழராசனுடைய மனமகிழ்ச்சியடைந்து அந்தமுநீஸ்
வரர்களுக்கு மகாபக்தி வினயத்துடன் நமஸ்காரஞ்செய்தவர்களி
டத்தில்விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய நிஷ்களாபுரிபட்டண
மே போய்ச்சேர்ந்து ராசநீதிவழுவாமல் அரசாட்சி செய்துக் கொ
ண்டிருந்தான் அப்பால்சிறிதுநாளைக்குப்பிறகு ஸ்ரீராமபத்திரர்இரா
வணசம்மாரஞ்செய்து அயோத்தியாபுரிக்கு வந்து பட்டாபிஷேக
ஞ் சூட்டிக்கொண்டு அஸ்வமேதயாகம் பண்ணும்படி பிரயத்தன
ஞ்செய்து சகலமானராசர்களுக்குந் திருமுகங் கட்டளை யிட்டரு
ளினார் அப்போது ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் வந்து சே
ர்ந்தார்கள்.

நிஷ்களபுரியை யாளப்பட்ட தர்மப் பிரம்மா வாகிய சோ
ழராசனும் வந்திருந்தான் இவர்களை யெல்லாம் கூடவைத்துக்
கொண்டு ஸ்ரீராமமூர்த்தியும் அஸ்வமேதயாகஞ் செய்து முடித்
து ராசர்களுக்கு வெகுமதி பண்ணி அவர்கள் பட்டணத்தி
ற்குப் போகும்படி விடைகொடுத்தனுப்புகிறதற்கு முன்னமே த
ர்மப்பிரமாவாகிய சோழ ராஜனானவன் ஸ்ரீராம மூர்த்திக்கு நம

ஸ்காரம்பண்ணி சுவாமி எனக்குப்பட்டணத்தில் சிறிதுகாரியமிருக்கின்றது அதனாலே நான் இசைவாகப் போகவேண்டுமென்று விடைபெற்றுக்கொண்டு விபீஷணாழ்வாருடனும் சிநேகமாகப் பேசி அவரிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு தன்னுடைய பட்டணத்துக்குவந்து இனிமேல் அயோத்திய புரியிலெழுந்தருளியிருக்கும் திவ்யவிமானம் காவேரிமத்தியில்வந்து சேருவதற்குச் சந்தேகமில்லையென்று தனக்குத்தானே நிச்சயித்துக்கொண்டு சிற்பசாஸ்திரவிதிப்படி பாஞ்சராத்ர கிரமந்தவறாமல் காவேரிக் கரையில் கோயில் கோபுரங்கள் மண்டபங்கள் சத்திரங்கள் ரிஷியாசிரமங்கள் முதலானதுகளும் உண்டாக்கிவைத்து பூசைக்குவேண்டிய பூசாதிரவியங்களும் சேகரித்துவைத்துக்கொண்டு அநேகபிராமணகூட்டத்துடன் மனமகிழ்ச்சியாயிருந்து விமானமெப்போவருமென்று அபேட்சையுடன் வழிபார்த்துக்கொண்டிருந்தான்.

அப்படியிருக்க வசந்தகாலமானவுடன் சூரியன்மீனத்தில் பிரவேசமான பங்குனிமீ ரோகணி நட்சத்திரம் சப்தமி சனிவாரங் கூடின சுபதினத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் தங்கள் குலதெய்வமாயிருக்கப்பட்ட விமானத்தைப் பூசைபண்ணி அந்தபூசைக்குவேண்டிய உபசரணங்களுடன் விபீஷணரிடத்திற் கொடுத்து அந்தவிமான மகத்துவத்தையும் சவிஸ்தாரமாகச்சொல்லி அப்பா விபீஷணா நீயிந்த விமானத்தை யெடுத்துக்கொண்டுபோய் பத்திரமாகவைத்துப்பூசைசெய்து உன்னுடைய இலங்காபுரி பட்டணத்திலிருந்து சுகமாய் ராச்சியபரிபாலனஞ் செய்துக்கொண்டு சிரஞ்சீவியாக வாழக்கடவையென்று ஆசீர்வதித்தருளினார் அதுகேட்டு விபீஷணரும் பாக்கியம் பாக்கியமென்று ஸ்ரீராமமூர்த்திக்கு நமஸ்காரஞ்செய்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விமானத்தை யெடுத்துச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு அரிநமோநமோவென்கிற சப்தத்துடன் தன்னுடைய நாலுமந்திரிகளுடனேயும் சோழதேசத்திற்குவந்து சேர்ந்து மத்தியானவேளையில காவேரிமத்தியில் சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் அனந்தபீடத்தில் விமானத்தைக்கொண்டுவந்து வைத்தார் அதன்பிறகு விபீஷணரும் சந்திரபுஷ்கரணியில் ஸ்நானம்பண்ணி உச்சிக்கால செபதவவநுஷ்டானகர்மங்களை முடித்துக்கொண்டு விமானத்தினிடத்திற்குவந்து உச்சிகால பூசைசெய்யும்படித்தொடங்கினான் அதுதெரிந்து அவ்விடத்தில் காத்துக் கொண்டிருந்த முனீஸ்வரர்களும் சோழராசனும்வந்து மகாபக்தி விநயத்துடனே விபீஷணருக்கு நமஸ்காரம்பண்ணி பிற்பாடு ஸ்ரீரங்கவிமானத்தைக் கண்டு அநேகமாயிரமாய் ஸ்துத்தியங்கள்செய்து அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சகலவுபசாரங்களுஞ் செய்துமுடிந்து ஆனந்த

பரவசருகி விபீஷணரைப்பார்த்து ஓ இலங்காதிபதியாகிய விபீஷணாழ்வாரே உமமுடைய கிருபாகடாட்சத்தினால் நாங்களெல்லாரும் அந்ததிவ்ய விமானத்தைச் சேவைசெய்து கிருதார்த்தர்களாகினோம், எங்கள்பிதிர்க்களும் நரகத்தைவிட்டு மோட்சத்தை யடைந்தார்கள் இந்தத்தர்மப்பிரமாவாகிய சோழராசனும் இந்ததேசத்தி லுள்ளராசாக்களும் உம்முடைய தர்மத்தினால் கிருதகிருத்திய ரானார்களென்று அந்த முநீஸ்வரர்களெல்லாம் விபீஷணரைப் பலவாறாகப் புகழ்ந்துகொண்டாடினார்கள் கேட்டீரோ நாரதரேயென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினர் அதுகேட்டு நாரதரும் சந்தோஷமாய் ஆச்சர்யப்பட்டுமௌனமாய் ரங்காரங்காவென்று தியானஞ்செய்துக்கொண்டிருந்தார்

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாதாயநமா.

## ஒன்பதாம் அத்தியாயம்.

---

### துதிகவி-விருத்தம்.

ஆவணியுரோகணி நாளமரபட்சத் தஷ்டமியிலரிவைவேற் கட்டூடவகபாற்றோன் றிநந்தன் மனைவளர்த்துமா துலகினைந்தியுகஞ்சப், பாவியுயிறவிட்டிப்பார்த்தன் விடுமொருதனிதேர்ப் பாதனாகிக, காவிரிசூழரங்கத்திற் கண்வளருமணிவண்ணா கண்ணாபோற்றி.

பிற்பாடு நாரதமுநீஸ்வரர் எழுந்திருந்து ஸ்திரீகைலாசவாசியாகிய சாமபசிவமூர்த்திக்குத் தெண்டனிட்டு ஓய்சுவாமி அப்பால்விபீஷணாழ்வார் அந்தவிமானத்தைக் காவேரிக்கரையில் பூசைபண்ணினார் அவர் இலங்காபுரிபட்டணத்திற்கு எப்போபோய்ச் சேர்ந்தார் அந்தவாத்தமானங்களையும் விபரமாகச்சொல்லி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய பரமசிவன் திருவுளம்பற்றி யருளுகினார் கேளுமையா நாரதமுனிவரே அதற்குமேல் விபீஷணர் சிததரிஷிகணங்களுடனேவந்து சந்திரபுஷ்கரணிதீர்த்தத்தில ஸ்நானஞ்செய்து தேவதர்ப்பணம் ரிஷிதர்ப்பணம் பிதிர்தர்ப்பணங்கொண்டுகாவேரியிற்போய் கணுக்கால்சலத்தில் திருமஞ்சனங்கொண்டுவந்து வைத்து நந்தவனத்திற்குப்போய்ச் செங்கழுநீர் கருநெய்தல் வெண்தாமரை செந்தாமரை புன்னை திருத்துழாய் சண்பகம் அசோகு பாதிரிவகுளம் முல்லைமல்லிகை இருவாட்சியென்று சொல்லப்பட்ட நானாவிதசுகந்த பரிமளபுஷ்பங்களைப் பறித்துக்கொண்டு சாஸ்திரயுக்தமாக இயமநியமமுதலான அஷ்டாங்கயோகக் கிரமப்படி ஸ்திரீரங்க

நாயகரைப் பூசைசெய்து தூபதீபநைவேதனமுதலான சோடசவுப
சாரங்களும் செய்யத்தொடங்கின சமயத்தில் தர்மப் பிர்மாவாகிய
சோழருசனுடைய கைங்கர்யமாய்வரப்பட்ட நைவேத்தியங்களேயும்
ஸ்திரீரங்கநாயகருக்கு பூசைசெய்வித்து சர்வோபசாரங்களுஞ்செய்
து வேதசாஸ்திரபுராணங்களினல் தோத்திரப்பாருயணம் பண்ணிப்
பிரதட்சணநமஸ்காரங்களுஞ்செய்துமுடித்து அவ்விடத்தில்வந்திரு
க்கப்பட்ட தர்மப்பிர்மாவாகிய சோழருசன் முதலான சகலருசாக்
களேயும் சகலமுனீஸ்வரர்களேயும் ஸ்ரீரங்கதர்மருடைய சேவைபண்
ணும்படிசெய்வித்து மங்கள ஆலாத்திபெடுத்தார் அந்தவேளேயில்தர்
மப்பிர்மாவாகிய சோழருசன் விபீஷணரைப்பார்த்து ஐயா விபீஷ
ணுழ்வாரே தேவரீருக்கு நமஸ்காரம் நமஸ்காரமென்றுசொல்லி இர
ண்டுகைகளேயுஞ் சிரசின்மேல் அஞ்சலியாகவைத்துக் கும்பிட்டுபின்
று சுவாமி தேவரீரே பரமபாகவதோத்தமர்நீரே புண்ணிய புருஷர்
உம்முடையகடாட்சத்திருல் நாங்களெல்லாங் கிருதார்த்தர்களாயி
னேம் தேவரீர்யிவ்விடத்தில்தானே சிறிதுகாலமிருந்து எங்களே இர
ட்சிக்கவேண்டுமென்று வெகுவாய்ப்பிருர்த்திததான்.

அதுகேட்டுவிபீஷணர் தர்மப்பிர்மாவைப்பார்த்து ஒய் சோழ
ருசாவினுடைய காலமுதல் இதுவரையில்தப்பாமல் விபரமாய்நட
ந்தேறிவருகின்றது ஆதலால் அந்த உச்சவத்தைச் செய்யாமல்நிறு
த்தப்போகாது ஆனபடியினுல் அதைக்கிரமமாய் நடத்திவிட்டு நா
ம்சீக்கிரத்தில் இலங்காபுரிபட்டணத்திற்குப் போய்வரவேண்டுமெ
ன்றுசொன்னுர் அந்தவார்த்தையைக்கேட்டு சோழருசனும் மகாசந்
தோஷமாய் விபீஷணரைப்பார்த்து சுவாமி தேவரீர் கருத்தின்படி
யே ஸ்ரீரங்கநாயகருடைய பிர்மோற்சவத்தை நடப்பித்து எங்களே
யெல்லாங் கிருதார்த்தர்களாகச் செய்யுமையாவென்று சொன்னுன்
அதற்குவிபீஷணரும் அப்படியேநல்லதென்று சம்மதித்துக்கொண்
டார் அதற்குமேல் தர்மப்பிர்மாவாகிய சோழருசன பிர்மதேவர்களி
டத்தில் சிஷர்களாயிருந்து பஞ்சருத்திர சாஸ்திரங்களேக் கிரமமா
கக்கற்றறிந்தவர்கள் அஞ்சபேரையழைப்பித்து அவர்கள் அனுமதிப்
படிகாப்புகட்டி வஸ்துசுத்திபண்ணுவித்து பிற்பாடு ஆரோகணஞ்
செய்து தினம்தினம்மண்டபத்தில் சேவைசாதிக்கும்படி ஸ்ரீரங்கநா
யகரை எழுந்தருளப்பண்ணி அவ்விடத்தில் அர்க்கியபாத்தியஆசன
முதலான சர்வோபசாரங்களும் நடப்பித்து பொங்கல் சருக்கரைப்
பொங்கல் அக்காரவடிசில் ததியோதனம் புளியாரை எள்ளவரை
மிளகவரை கடிவரை திருவிசாதம் என்றுசொல்லப்பட்ட முப்பத்தி
ரண்டுவகை பொங்கலாம்.

தோசை வடை அப்பளம் எள்ளுருண்டை அதிரசம் பணுகாரங்களிதேன்குழல் கோதுமைரொட்டி ஆனையடிப்பம் முதலான கச்சாய வர்க்கங்களும் பலாப்பழம் மாம்பழம் வாழைப்பழம் செவ்வாழைப்பழம் கொய்யாப்பழம் முதலானபழவகைகளும் தேங்காய் செவ்விளநீர் கரும்பு முதலானதுகளும் நைவேத்தியம்பண்ணிவைத்து துய்யநெய் புத்துருக்குநெய் கற்கண்டு சினிச்சருக்கரைமுதலானதுகளுஞ்சொரிந்து கமகமவென்று பரிமளிக்கும்படி திருப்பாவாடையுஞ் சுருளமுஞ்செய்து இன்னம்பலவிதமான நைவேத்தியங்களும் அமிசைபண்ணிவித்து அப்பால்சாத்துப்படி யலங்காரம்பண்ணி வச்சிராங்கிரத்தினாங்கிதரிப்பித்து நவரத்தினகிரீடஞ்சூட்டி முத்தாபரணம்மாணிக்கப்பதக்கம் முத்துமாலை ரத்தினமாலை பவளமாலைகளும் அலங்காரஞ்செய்து பஞ்சாயுதங்களுடனே அநேக ஆயுதவரிசைகளும் தரித்து இந்திரவர்ணப்பட்டு அதிககாந்தியான சக்கரவர்த்தியுருமால் பீதாம்பரமுதலான திவ்வியவஸ்திர அலங்காரமுஞ்செய்வித்தார்.

அப்பால் மெத்தைதழுவணை திருப்பல்லாக்குமுதலான உபசாரங்களும்தப்பாமல் நடக்கும்படி யுண்டுபண்ணி குடையணிகள் திருவிளக்கு தூபகலசங்கள் தீபாலாத்திகள்தங்கப்படிகள் தங்கக்குடங்கள் தங்கக்கிண்ணங்கள்முதலான தட்டுமுட்டுகளும்செய்வித்து அன்னவாகனம் சிம்மவாகனம் கருடவாகனம் இந்திரவிமானம் திருத்தேர் முதலானதுகளும் உண்டுபண்ணி தீவட்டிகள் பகல்வத்திகள்சித்திரபிறமைகள் விசித்திரங்களாகச்செய்வித்து தினந்தோறும் ரங்கநாயகரை உச்சவக்கிரமப்பிரகாரம் அந்தவாகனங்களில் எழுந்தருளப்பண்ணி தேவதுந்துபிகாகசுற வீணைபுள்ளாங்குழல் குடமுழா பேரிகை திருச்சின்னம்முதலான சகலமேளவாத்தியங்களும் திசைகளெல்லாம்அலரும்படி தாம்தாமென்றுமுழங்கத்தக்கதாக அரம்பூர்வசி திலோர்த்தமை மேனகையென்றுசொல்லப்பட்ட தேவஸ்திரீகளுக்குச்சமானமான ஸ்திரீசனங்கள் நாட்டியம் பண்ணிக் கொண்டுவர தேவரிஷிகள் பிரமரிஷிகளும் இன்னமனேகமான தாசகூட்டங்களும் புடைசூழ்ந்து வேதபாராயணங்கள் செய்துக்கொண்டுவர மகாவைபவத்துடனே அனேகபிராமணர்களும் அதிதிகளுக்கும் அன்னதானம்சொர்னதானமுதலான சகலதானங்களும் நடப்பித்து பிர்மசத்திரிய வைசியசூத்திரர்களென்று நாலுவகைசாதிகளுக்கும் பெருமாளுக்கும் விநியோகமானபிரசாதங்களை அபரிமிதமாகக்கொடுத்தார்.

அப்பால் சந்திர புஷ்கரணி தீர்த்தக்கரையில் புன்னை விருட்சத் தடியில் தர்மப் பிரமாவாகிய சோழராசன் மன மகிழ்ச்சியாய்க் கட்டி வைத்த மண்டபத்தில் ஒன்பது நாளும் இவ்வகை

ப்பட்டசம்பிரமத்துடன் மெருமாளை எழுந்தருளச்செய்து பக்த சனங்களுக்கெல்லாம் சேவைசாதிக்கும்படி செய்வித்து அப்பால்ப த்தாம்நாளாகிய பவர்ணமிதிதியில ரங்கநாயகருக்கு மங்களஸ்நான ஞ்செய்தார் அந்தசமயத்தில ஸ்ரீரங்கநாயகருக்கும் விபீஷணருக்கு ம் அவ்விடத்தில் உற்சவமுடிந்தபின்னும் பதினைந்துநாள்மட்டும் ம காசந்தோஷமாயிருந்து பிற்பாடு சோழராசனிடத்திலும் மூநீஸ்வர ர்களிடத்திலும் வேதப்பிராமணர்களிடத்திலும் இலங்கைக் கரை போகவேண்டுமென்று செலவுப்பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கவிமானத் துக்கு பிரதட்சணநமஸ்காரம்பண்ணி தன்னுடையகைகளால் விமா னத்தையெடுத்தார் எடுக்கக்கூடாமற்போச்சுது அதுகண்டு விபீஷ ணர்நடுநடுங்கி மகாதுக்காக்கிராந்தனுப் வெகுகிலேசத்துடனே ஸ்ரீர ங்கநாயகருடைய உபயபாதாரவிந்தங்களையும் தன்னுடையகண்களி லொத்திக்கொண்டு விசனப்பட்டமுதமாத்திரத்தில் அந்தக்கண்ணீ ரானது பகவானுடைய திருவடிக்கமலங்களில் விழுந்தது அதைப ரிந்த ஸ்ரீரங்கநாயகர்விபீஷணரைப்பார்த்து வாருமபிள்ளாய் விபீஷ ணு எழுந்திரு நீஒன்றுக்கும்பயப்படாதே உன் கூசனத்தை விட்டு விடு காவேரிதீர்த்தமும் சந்திரபுஷ்கரணியும் விடிபிருக்கிறபடியால் இது மகாபுண்ணியஸ்தலம் அல்லாமலும் சோழராசனும் மகா புண் ணியபுருஷன்மேலும் இந்தமுநீஸ்வரர்களும் வேதப்பிராமணர்களும் மற்றுமுண்டான தாசகூட்டங்களும் மகா உத்தமபுருஷர்கள் ஆகை யால் இவர்களையு மிந்தஸ்தானத்தையும் விட்டுவா நமக்குச் சம்மதி யில்லை ஆனபடியினால் நீஎம்முடையசொல்லுக்கு மாறுத்தரஞ்சொ ல்லாமல் மகாசந்தோஷமாய்ப் பிரயாணப்பட்டு உன்னுடைய பட்ட ணமாகிய இலங்காபுரிக்குப் போய்ச்சேர்ந்து பரமபாகவதனும்மனு முறைவழுவாமல் இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிரு இது வுமல்லாமல் இந்தக்காவேரிக்கு ஒருவரங் கொடுத்திருக்கிறோம்.

அஃதென்னவென்றால் பூர்வம் ஒருகாலத்தில் இந்நதிகளெல்லா ம் ஒன்றாகக்கூடி விந்தபர்வதத்தில் வாசம்பண்ணிக்கொண்டு அதுக ள் இஷ்டலாபத்துடனே விநோதவுல்லாசமாய் விளையாடிக்கொண் டிருக்கிறவேளையில் விசுவாசமென்கிற வொருகந்தருவன் அந்தரமா ர்க்கமாய் உத்திரதிசையிலிருந்து தட்சண திசையைநோக்கி அந்தப த்மநாபசுவாமியைச் சேவிக்கும்படிப் பிரயத்தனப்பட்டுப் போகும் போது வழியில் இந்நதிகள் விளையாடிக்கொண் டிருக்கிறதைப்பார் த்து இரண்டுகைகளையும் உயரவெடுத்து நமஸ்காரம்பண்ணிவிட்டுப் போனான் அதுகண்டு இந்நதிகளெல்லாம் ஒரிடத்திற்கூடி நாம் இத் தனைபேரிருக்கிறோமே அந்தகந்தருவன் நமக்குள் யாரைநோக்கி நம

ஸ்காரஞ்செய்தானென்று ஒருவருக்கொருவர்கேட்க அப்போது என்னைக்கும்பிட்டானென்றும் உன்னைக்கும்பிட்டானென்றும் ஒன்றுக்கொன்று போராடிக்கொண்டிருந்ததுகள்.

அந்தக்கந்தருவனே வென்றால் தட்சணதிசைக்குப்போய் சமுத்திரஸ்நானம்பண்ணி அனந்தசயனத்திற்கு வந்து மகாவைபவத்துடனே திருக்கண்வளருகின்ற ஸ்ரீ அனந்தபத்மநாபருடைய நித்திரையையெழுப்பும்படி பூபாளராகத்தினால் அரிநாமகீர்த்தனங்கள்பாடி திருக்கண்விழித்தருளினபின்பு அந்தச் சுவாமியை சேவித்துக்கொண்டு புரட்டாசிமாசமுதல் உத்திராயணகாலம் வருகிறமட்டும் அந்தஸ்தலத்திலேயே வாசமாயிருந்து பிற்பாடு சுவாமியைச் சேவித்து விடைபெற்றுக்கொண்டு உத்திரதிசையைநோக்கி அந்தமார்க்கமாய்ப் புறப்பட்டுவருகிறபோது விந்தபர்வதத்திலிருந்த நதிகளெல்லாம் முன்போலக்கூடியிருந்து போராடியிருப்பதைக்கண்டுஅவன் முன்போலவே நமஸ்காரம்பண்ணினான் அப்படி நமஸ்காரம்பண்ணினமாத்திரத்தில் அந்நதிகளெல்லாம ஒன்றாகக்கூடி எங்களில் நீயாரைப்பார்த்து நமஸ்காரம்பண்ணினாயென்று கேட்க உங்களுக்குள் எந்தநதியானது மகத்துவமும் மேன்மையும் பொருந்தியிருக்கிறதோ அதைப்பார்த்து நமஸ்காரமபண்ணினேனென்று சொல்லிப்போய் விட்டான்.

அந்தவசனத்தைக்கேட்டுக் கங்கையானது நான் சிரேஷ்டமென்றுசொல்லியது அந்தச்சொல்லுக்குச் சரிதானென்று சம்மதித்து எல்லாநதிகளும் சும்மாவிருந்ததுகள் அதில் காவேரிமாத்திரம் சம்மதிக்காமல் கோபங்கொண்டு கங்கையைப்பார்த்து நீசிரேஷ்டமென்பதும் நான்சிரேஷ்டமென்பதும் சத்தியலோகத்திற்குப்போய் பிரமதேவரைக்கேட்டுத் தெரிந்துக்கொள்வோமென்று கங்காநதியை அழைத்துக்கொண்டு சத்தியலோகத்திற்குப்போய்பிர்மதேவரைக்கண்டு நமஸ்காரஞ்செய்து ஒப்சத்தியலோகவாசகா சதுர்முகப்பிர்மாவே நதிக்குள்நான் சிரேஷ்டமோவென்றுகேட்டது அதைக்கேட்டு பிர்மதேவன் புன்சிரிப்பாகச்சிரித்து கங்கையானது ஸ்ரீவிஷ்ணுபாதத்திற்பிறந்தபடியால் சிரேஷ்டமென்றுசொல்லப்படும் அப்படிசொல்லுவதில்தாழ்ச்சியென்னவென்று பிரமதேவன் ஆஞாணையாகச்சொன்னான் அந்தவார்த்தையைக்கேட்டளவில் காவேரிநதியும்லச்சையடைந்து இமோற்பர்வதத்திற்கு வடபாரிசத்தில்வந்துசேர்ந்து பிரமதேவனை நோக்கி மகாவுக்கிரமான தபசுபண்ணிக்கொண்டிருந்தது.

அப்போது அந்த காவேரிநதியினுடைய தபசுக்கு மனமிரங்கி பிர்ம்மதேவனும் பிரத்தியட்ச தரிசனங் கொடுத்து உனக்கென்னவரம் வேண்டுமென்று கேட்டார் காவேரி நதியும் பிர்ம்மதேவனுக்கு பிரத்தியட்ச நமஸ்காரஞ் செய்து நான் கங்காநதியி

னும் சிரேஷ்டமாய் விளங்கும்படி கட்டளையிட வேண்டுமென்று
கேட்டது அதற்குப் பிரமதேவன் காவேரிநதியைப் பார்த்து நீயெம்
மைநோக்கி மகத்தாகிய தபசுசெய்தபடியால் இன்றுமுதல் கங்கை
யையடைந்தேன் என்னைத் தள்ளிவிடாமல் காப்பாத்தி இரட்சித்த
ருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான் அப்படிசொன்னவார்
த்தையை ரங்கநாதர்கேட்டு புன்சிரிப்பாகச் சிரித்து அப்பா விபீஷ
ணா ஸ்ரீராமமூர்த்தியால் பட்டாபிஷேகஞ் செய்வித்து ராச்சியத்தைப்
பரிபாலனஞ்செய்யாமல்விட்டு நீ இவ்விடத்தில்தானே எப்படிசெ
ய்யாமல் சுகமாய் உன்னுடைய பட்டணமேபோய்ச்சேர்ந்து இராச்
சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிரு நாம் இந்தவிமானத்தில் விக்கி
ரகரூபமாயிருந்து சகலமான பக்தசனங்களும் இஷ்டசித்திகளையும்
மோட்சத்தையும் பிரசாதித்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் இவ்விடத்திலிருக்கிறமட்டும் உனக்கும் உன்னுடைய இ
லங்காபுரிபட்டணத்திற்கும் ஒரு தாழ்ச்சியுமில்லை சூரியசந்திரர்களு
ள்ளமட்டும் ஒருபயமுமில்லாமல் நிர்ப்பயமாய் சிரஞ்சீவியாகவிருந்
து ராச்சியபரிபாலனஞ் செய்து அதற்குமேல் பிர்ம்மகற்பாந்தரத்தி
ல் பிர்ம்மதேவனோடுகூடிப் பரமபதத்திற்குவந்து நம்மைச்சேவித்து
அவ்விடத்திலிருக்கப்பட்ட பரமபாகவதர்களாகிய நித்திய ஐசுவரி
யர்களுடன் சிறிதுகாலமிருந்து பிற்பாடு பிர்ம்மசிருஷ்டியில் திரும்ப
வும் உன்னுடைய இலங்காபுரி பட்டணத்திற்குவந்து சுகமாய் அர
சாட்சிசெய்யக்கடவாயென்று உறுதியாகச் சொல்லியருளினார் அது
கேட்டு விபீஷணர் மறுபடியும் பகவானைப்பார்த்து சுவாமி ரங்கதா
மரூமபத்திரசுவாமி கொடுத்தருளிய விமானமே எனக்குசித்தியாகா
மற்போனபோது இலங்காபுரி ராச்சியமும் சகலசம்பத்துகளுமிருந்
து எனக்கு என்னபலனைக் கொடுக்கப்போகிறது எனக்கு அதுக
ளொன்றும் வேண்டியதில்லை உம்முடைய பாதமே கட்டளையிட்ட
ருளவேண்டுமென்று நமஸ்காரம்பண்ணினான்.

அதுகேட்டுப் பெருமாளும் விபீஷணனைப்பார்த்து ஐயா விபீ
ஷணா பூலோகத்திலுள்ள யோகீஸ்வரர்களும் முநீஸ்வரர்களும் இ
ன்னும்மற்றுமுண்டான பக்தசனங்களும் நம்மைநோக்கி அநேகத
வங்கள் தானதருமங்கள் எக்கியஞ்செய்து அந்தப் புண்ணியதரும
ங்களினால் நம்முடைய கடாட்சம்பெற்று மோட்சத்தைப் பெறுவா
ர்களாதலால் நீயும் நம்முடைய வாக்குக் கெதிர்சொல்லாமற்போய்
உன்னுடையபட்டணத்தைப் பரிபாலனஞ்செய்துக்கொண்டு மூற்றி
யசத்கருமங்களைச் சதாகாலமும் நடத்திக்கொண்டிருந்தால் உனக்
கு மோட்சசம்பத்தை பிரகாசித்தருளுவோம் நீயுமுன்னுடைய பக்
தசனங்களும் இவ்விடத்திற்கு கடிக்கடி வரவேண்டாம் பூலோகத்தி

லுள்ளபுண்ணியபாவங்களில் விருப்பு வெருப்பில்லாமல் நிட்சாமிய தவஞ்செய்து நம்முடைய பாதாரவிந்தங்களே சரணாகதியென்று எவன் சரணமடைகிறானோ அவனே மோக்ஷவதிகாரி அவனே நமக்குப்பிரியமானவனென்று அந்தரங்கமாய் திருவுளம்பற்றியருளினார் நதிக்குச் சமானமாய் உன்னைச் சகலமனமெனங்கள் புகழ்ந்துகொண்டாடக் கடவர்களென்னும் வரங்கொடுத்துவிட்டு அனந்தலோகனத்தின்மேல் தன்னுடையலோகமே போய்ச்சேர்ந்தார் காவேரிநதியானது அந்தவரத்திற்குச் சம்மதிக்காமல் சோழதேசத்திற்கு வந்து சேர்ந்து சாரக்ஷேத்திரமென்கிற திருச்சேறையில் நந்து நம்மை விக்கிரஹரூபமாக பாவனைபண்ணிபூசித்துத் தபசுபண்ணிக் கொண்டிருந்தது அந்தத்தபசுக்கு நாம் சந்தோஷத்தையடைந்து பிரத்தியக்ஷ தரிசனங்கொடுத்து உனக்குவேண்டிய வரத்தைக் கேளென்று சொன்னோம் அதுகேட்டு காவேரிநதியும் நமக்கு நமஸ்காரம்பண்ணி சுவர்க்கலோகநாயகா நான் இவ்வளவுகாலம் தபசுபண்ணியும் உம்முடையபாதத்திற்பிறந்த கங்காநதிக்குச் சமானமானேனேயல்லாமல்சிரேஷ்டமாகாமற்போனேன் ஆதலால் இனியாகிலுமென்னை சர்வத்திரளும் கங்காநதியைப் பார்க்கிலும் காவேரிநதியே சிரேஷ்டமென்று சதாகாலமும் புகழ்ந்துகொண்டாடும்படி செய்விக்கவேண்டும் அதுவுமல்லாமல் க்ங்காநதியானது என்னைவந்து வணங்கும்படி செய்யவேண்டுமென்றுகேட்டது அதற்கு நாமங்கீகரியாமல் அக்கங்காநதியானது நம்முடைய பாதத்தில் பிறந்தபடியினாலே அதுவே சிரேஷ்டமென்பது நிச்சயமாயினும் நீவெகுகாலமாய் நம்மைசிந்தித்து தபசுபண்ணினபடியால் கங்காநதியிலும் உன்னைச்சிரேஷ்டமாகச்செய்விக்கிறோம் அதெப்படியென்றால் ஒருநாள் நம்முடையபாதத்திற்பிறந்தகங்கையை சிரேஷ்டமென்று சர்வத்திராளும் சாதாரணமாகச்சொல்லுவதற்குச் சமயமில்லை உன்னுடைய மகத்துவத்தை பொருவராலும் வர்ணிக்கமுடியாது நீசுகமாயிருவென்று வரப்பிரசாதங்கொடுத்திருக்கின்றபடியால் நாமினியிவ்விடத்தில்தானே வாசமாயிருக்கப்போகிறோம் ஆதலால் நாம் காவேரிநதிக்கு கொடுத்திருக்கிற வரத்துக்கும் பின்னம்வரவொட்டாமல் நீசெய்யவேண்டியதென்று திருவாய்மலர்ந்தருளி ஓவ்விபீஷணா நாம் இலங்காபுரிபட்டணத்திற்கெழுந்தருளமாட்டோம் நாம் இவ்விடத்தில்தானே சதாகாலமும் வாசமாயிருந்து உன்னுடைய இலங்காபுரிபட்டணத்தைப்பார்த்தபடியே இருப்போமென்றுசொல்ல அதுகேட்டுவிபீஷணரும்பயபக்திவிநயத்துடனே சுவாமி ஸ்ரீரங்கநாயகா தேவரீருடைய திருவுளமப்படியிருந்தால்தான் என்னசெய்யப்போகிறேன மகாசந்தோஷமாச்சுது தேவரீருடைய பாதாரவிந்தங்களையே இடைவிடாமற் பூசித்துக்

கொண்டிருப்பேன் நானிலங்காபுரிக்குப் போகிறதில்லை எனக்கு ராச்சியபரிபாலனமும் வேண்டியதில்லை உம்முடைய பாதார விந்தங்களே சரணாகதியென்று எவன் சரணமடைகிறானோ அவனேமோட்சவதிகாரி அவனேநமக்குப் பிரியமானவனென்று அந்தரங்க மாய்த் திருவுளம்பற்றியருளினார்.

அதைக்கேட்டமாத்திரத்தில் விபீஷணர் புளகாங்கிதத்தை யுடையவராய் ரங்கருக்குப் பிரதட்சண நமஸ்காரஞ்செய்து ஆயிரம் திருநாமங்களாலும் அர்ச்சனைசெய்து அந்தபகவானிடத்தில்விடைபெற்றுக்கொண்டு இலங்காபுரிபட்டணமே போய்ச்சேர்ந்து இராஜநீதிவழுவாமல் ராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார் கேட்டீரோ நாரதமுனிவரே அப்பால் தர்மப்பிர்மாவாகிய சோழராசன் மனமகிழ்ச்சியடைந்து அநேகமண்டபங்கள் கோபுரங்கள் சத்திரங்கள் ரிஷிபாசிரமங்கள் கோயில்கள் மதில்கட்டுவித்து அநேகந்திருக்குளங்கள் வெட்டுவித்து அனேகம் புட்பவனங்கள் உண்டாக்கிவைத்து வேதப்பிராமணர்கள் நித்தியம் ஐந்துகாலபூசையும் பஞ்சராத்திரக்கிரமந்தவறாமல் நடக்கும்படிசெய்வித்து பிர்மோற்சவமும் நித்தியோற்சவமுந்தப்பாமல் கடந்தேறிவரும்படி செய்வித்தானென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார் இந்தமகத்துவங்களையெல்லாம் நாரதர்கேட்டு ஆச்சரியமாய் ஒன்றுஞ்சொல்லாமல் சற்றுநேரம் சும்மாயிருந்தார்.

ஒன்பதாம் அத்தியாயம்-முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாதாயநம.

## பத்தாம் அத்தியாயம்.

(*)

துதிகவி-விருத்தம்.

தவனமாம்பரியுருவாயவனிடையலபுரித்துக்கருதுமன்பர்
பவமகற்றும்படியன்பினுளங்கொண்டு முனிவர்யல்லாண்டுகூறத்
தவமுயலும்விடணனுக்கிரங்கி யொருவிமானமேற்சர்ப்பபீட
துவமையதுசிராகத்திற்பள்ளிகொள்ளு ஸ்ரீரங்கநாதாபோற்றி.

பிற்பாடு நாரதபகவானெழுந்திருந்து ஸ்ரீகைலாசபதியாகியபரமசிவனுக்கு வலசாரி இடசாரியாகவந்து பிரதட்சணநமஸ்காரங்கள் பண்ணி ஸ்தோத்திரஞ்செய்து சங்கரா சர்வசிவதயாபரா தேவரீருடையகிருபாகடாட்சத்தினால் பூலோகத்திற்கு ஸ்ரீரங்கவிமானத்தலமகத்துவத்தையும் அதிலுண்டான தீர்த்தமகத்துவங்களையும் கிரமமாகத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய திருவுளம்பற்றியருளுகின்றார்.

கேளுமையா நாரதமுனிவரே ஸ்ரீரங்க விமானத்தைச் சூழ்ந்த இரண்டுயோசனை தூரமட்டும் ஸ்ரீரங்கக்ஷேத்திரமென்றேசொல்லப்படும் அதிற்குடியாய் வாசமாயிருக்கின்றபேர்களுக்கும் ஒருக்காலும் நரகமில்லை ஸ்ரீரங்கத்துக்குப் போகவேண்டுமென்று வாக்கினாற்சொன்னாலும் மனதினாலும் நினைத்தாலும் மோட்சத்தைப்பெறுவார்கள் அப்படியிருக்குமானால் ஸ்ரீரங்கத்திலே சதாகாலமும் போகம்பண்ணுகிறவருடைய பெருமையை ஒருவராலு மளவிட்டுச் சொல்லி முடியாது.

## முதலாவது சந்திரபுஷ்கரணி தீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே அவ்விடத்தில் உபயகாவேரியல்லாமல் நவதீர்த்தங்களுண்டு அதுகளில்முதலாவது சந்திரபுஷ்கரணிதீர்த்தத்தில் எவனாகிலும் ஏகமனதாயிருந்து ஒருதரம்ஸ்நானம்பண்ணி நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு விமானத்தைச் சேவிப்பானாகில் அவனும் அவன் வமிசத்திலுள்ள பிதுர்த்தேவதைகளும் பாவவிமோசனர்களாய் புண்ணியலோகத்தைப் பெறுவார்கள் அதெப்படியென்றால் சந்திரனானவன் கர்பகபிருடையசாபத்தினால் தன்னுடைய பதினாறுகலைகளும் நீங்கிப்போயிருந்த துக்காக்கிராந்தனாய் ஸ்ரீரங்கத்துக்குவந்து சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரையில் ஒருபுன்னைவிருட்சத்தைவைத்து பயிராக்கி அதினிழலிலிருந்து வெகுநாள்தபசெய்து பிறகு ரங்கநாயகருடைய கிருபாகடாட்சத்தினால் பழையபடியே தன்னுடைய பூரணகலைகளையடைந்து தன்னுடைய ஸ்தானத்திற்குப்போய்ச்சேர்ந்தார் அந்த புன்னைமரத்தைதெரிசித்தவர்களும் பரிசித்தவர்களும் ஸ்ரீமகாலட்சுமி கடாட்சமுண்டாகு மந்த விருக்ஷத்தைக்கண்டவுடன்சேவிக்கவேண்டும் அதின்கிழலிலிருந்து தானதருமங்கள்பண்ணவேண்டும் அந்த புன்னைமரத்தடியிலுட்கார்ந்து செபம்பண்ணினால் ஒன்றுகோடியாகப் பலிக்கும் எப்போதும் அந்த தீர்த்தக்கரையில் வேதவியாசர் வாசமாயிருப்பார் அந்ததீர்த்தத்திற்கு ரிஷிவேதவியாசர் அதற்குத்தேவதை வாசுதேவன் புட்கராசன் காலநேமிமுதல் என்றுசொல்லப்பட்ட இவர்கள் நால்வரும் ஸ்ரீரங்கநாயகருக்குத் தூதுவர்களாம் ஆதலால் சந்திர புட்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணவேண்டியவர்கள் அந்தத்தீர்த்தத்திற்குப் பிரதட்சண நமஸ்காரங்கள்செய்து அந்தத் தியானங்களைச்சொல்லவேண்டும் அந்தத்தியானங்களெப்படியென்றால் சகலலோகங்களுக்கும் சகலசீவராசிகளுக்கும் ஆதாரமாயிருக்கப்பட்ட கர்த்தாவே நான் ஸ்நானம்பண்ணும்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டும் என்னைப் பாசபந்தங்களிலின்றுநீக்கி மோட்சத்திற் சேர்க்கவேண்டுமென்றுசொல்லி ஏகமனதாயிருந்ததில் ஸ்நானம் பண்ணும்போது அஷ்டாட்சர மந்திரத்தை செபிக்கவேண்டு மதற்கு

மேல் ஸ்நானம்பேறினவுடன் வாசுதேவமூர்த்திக்கு அர்க்கியங்கொடுக்க வேண்டும் பிற்பாடு வேதவியாசருக்கும் சந்திரனுக்கும் மற்றுமுண்டான தீர்த்தரட்சகர்களுக்கும் அர்க்கியங்கொடுத்து அதற்குமேல் பிரமதேவனுக்கும் சூரியனுக்கும் இட்சுவாகுமகாராசனுக்கும் உமக்கும் தற்பணத்தைப்பண்ணி தன்க்குச்சக்தியுண்டானமட்டும் பிராமணர்களுக்கும் அதிதிகளுக்கும் தானதர்மங்கள்செய்தால் அவனுக்குபரமபதங் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை, அந்தத் தீர்த்தக்கரையிலிருந்து ஹரிநாமஸ்மரணை செய்தால் அவனதேவபோகத்தை அனுபவிப்பான் அவன்செய்யும்புண்ணியங்கள் ஒன்றுகோடியாகும் ஆதலால் அந்ததீர்த்தத்தில் மூழுகினவர்கள் விசேஷமாகத் தானதருமங்களைச் செய்யவேண்டும்.

## இரண்டாவது வில்வதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதமுனிவரே அப்பால் அந்தத்தீர்த்தத்துக்கு கீழ்த்திசையில் ஏழுபிரகாசத்துக்கு வெளிப்புறத்தில் வில்வதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு அது சுக்கிரபகவான் தபசுசெய்தஸ்தானம் எப்படியென்றால் மகாபெலிசக்கிரவர்த்தியானவன் வாசம்பண்ணினசமயத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் வாமனுவதாரமாகப்போய் மூன்றடிமண்கேட்டார் அவருக்கு மூன்றடிமண் கொடுக்கும்படிசம்மதித்து மகாபெலியானவன் வாமனமாகிய பெருமாள் கையில் தாரைவார்க்கும்போது சுக்கிரனும் அந்தகமண்டலதுவாரத்தில் புகுந்திருந்து கமண்டலசலம் பெருமான்கையில் விழவொட்டாமற் செய்தான். அதற்குமேல் தர்ப்பையினால் துவாரத்தைக்குத்தி தாரைவார்த்தான். அதனால் சுக்கிரனுக்குக் கண் தெரியாமல் குருடனாகிப்போனான் வாமனமூர்த்திக்கு தானம்பண்ணுகிறகாலத்தில்குறுக்கேவினது அடுத்தபடியினால் நமக்கு இந்த கெடுதிவாய்ச்சுது என்று துக்கப்பட்டு இந்ததோஷ நிவாரணமாகும்பொருட்டு வில்வதீர்த்தக்கரையில் ஒரு வில்வமரத்தைதனைச் சுது பயிருக்கி அதின்கீழேயிருந்து வெகுகாலம் சுக்கிரபகவான் தபசுசெய்தார், அந்தத் தீர்த்தத்துக்கு ரிஷி சுக்கிரபகவான் முகுந்தனும் கணநாதரும் அதற்குக் காவலாளிகள் ஸ்ரீவாசருகிய அச்சுதர் அதற்கு தேவதை அந்ததீர்த்தத்தில் காசிஸ்நானம்செய்த விசேஷபலனுண்டாகும அதைப்பார்க்கிலும் இரணியதானம் செய்தால் ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியையும் பரமபாகவதர்களையும் நிந்தனைசெய்வதனாலும் அவன்செய்த அபசாரங்களெல்லாம் நிவர்த்தணமாகிக் கிருதார்த்தனுவான் அந்ததீர்த்தக்கரையிற்செய்த தானதருமங்கள் ஒன்றுகோடியாய்வளரும் அந்ததீர்த்தமகுத்துவத்தில் பிர்மஹத்திதோஷமும் நீங்கும்

## மூன்றாவது சம்புதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே அப்பாலிந்த தீர்த்தத்துக்கு அக்கினிமூலையில் சம்புதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு அந்தத் தீர்த்தக்கரையில் ஈசானியனெப்போதும் வாசமாயிருப்பான் அதனாலென்றால் பிர்மதேவனுடைய ஆக்கினையினால் உலகத்திலிருக்கப்பட்ட சகலஜீவராசிகளுக்கும் மயக்கமுண்டாகும்படி பாஷாண்டமும் அந்தமதசித்தாந்தத்துக்குத்தகுந்த பலவித சாஸ்திரங்களு முண்டுபண்ணி சகலசனங்களையும் மயங்கச்செய்வித்த தோஷந்தீர வேண்டுமென்று நினைத்து அந்த தீர்த்தக்கரையில் ஒரு நாவல்மரத்தைவைத்துப்பயிருக்கி அந்தமரத்தின்கீழ் வெகுகாலமாயிருந்து தபசுசெய்து அந்த தீர்த்தத்திற்கு ரிஷி ஆச்சிரமபக்தர் அதற்கு காவலாளிகள் கந்தன் கணாதன என்னுமிரண்டுபேர் அதற்குதேவதை ஈசானியன் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி பிராமணர்களுக்கன்னதானங்கொடுத்தாலவனுக்குச் சகலபாவங்களுந் நீங்கும். அந்தத் தீர்த்தத்திற்கு அன்னதானமே விசேஷமாகும் அதனால் ரங்கநாயகர் சந்தோஷத்தையடைந்து தம்முடைய பக்தர்களுக்குச்செய்த அபசாரங்களையெல்லாம்பொறுத்து இரட்சித்தருளுவார்.

## நான்காவது அசுவதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே அப்பால்சந்திரபுட்கரணிக்கு நேர்தெற்காகவும் காவேரிக்குவடக்காகவும் அசுவதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு அந்ததீர்த்தத்தினிடத்தில் சொர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரன் அகலிகையைப்பிடித்ததோஷம் நிவாரணமாகும்படி ஒரு அரசமரத்தைவைத்துப்பயிர்செய்து அந்தமரத்தின்கீழிருந்து வெகுகாலந்தபசுசெய்து அந்தத்தோஷத்தைப் பரிகரித்துக்கொண்டான் அந்ததீர்த்தத்திற்கு ரிஷிகௌதமர் அதற்குக்காவலாளிஅனந்தர் தேவதை இந்திரன் அந்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கன்னிகாதானம் வஸ்திரதானம் பண்ணினால் சகலதோஷங்களும் பரிகாரமாகும் மேலும் பதிவிரதாசிரோமணிகளாயிருக்கப்பட்ட ஸ்திரீகளைபிச்சித்ததோஷமும்நீங்கும்படி பெருமாள்கடாட்சிப்பார்.

## ஐந்தாவது புன்னாகதீர்த்த மகத்துவம்.

கேளுமையா நாரதரே அப்பால் சந்திர புட்கரணிக்குநேர் மேற்குத் திசையில் புன்னாக தீர்த்தமுண்டு அந்தத் தீர்த்தக்கரையில் அக்கினி தேவனானவன் ஆறு நட்சத்திரங்களைக் கூடியதோஷம் பரிகாரமாகும்படி ஒரு புன்னை விருட்சத்தை வைத்துப்பயிர்செய்து அந்த மரத்தின்கீழ் வெகுநாள் தபசு செய்துக்கொண்டிருந்து அதனால் அந்த சந்தோஷத்தை நீக்கிக் கொர்ச்சித்தான் அந்தத் தீர்த்தத்தக்கு ரிஷிபுத்திரர் இந்ததீர்த்த இராண்

வித்தியாத்தா அதற்குதேவதை அக்கினிதேவன் அந்த தீர்த்தத்தில் ஸ்திரீ வப்பதிபக்கிய நாராயணனை நினைத்து ஸ்நானஞ்செய்து பசுநெய் தானஞ்செய்தால் அவன்செய் திருக்கப்பட்ட பாவங்களெல்லாம் பறந்துபோகும் மேலும் பரதாரத்தை இச்சித்த பாவமுந்தீரும்படி பெருமாள் கடாட்சித்தருளுவார்.

## ஆறாவது வகுளதீர்த்த மகத்துவம்.

கேளுமையாநாரதரே அப்பால் சந்திர புட்கரணிக்கு நேர் மூலையில் வகுளதீர்த்த மென்றொரு தீர்த்தமுண்டு அங்கே தேவேந்திரனானவன் விருத்திராசுரனைக்கொன்ற பாவநீங்கும்படி அந்தத்தீர்த்தக்கரையில் ஓர் வகுளமரத்தைப் பயிராக்கி அந்தமரத்தின் கீழிருந்து சிறிதுநாள் தபசுசெய்து அந்தப் பாவத்தைபோக்கிக்கொண்டான் அந்ததீர்த்தத்துக்கு ரிஷி பிரசாபதிஅந்ததீர்த்தராட்சதர் சடகோபாழ்வார் அதற்குதேவதைமித்திரன்அந்தத்தீர்த்தத்தில்ஸ்ரீரங்கநாதரை நினைத்து ஸ்நானம்செய்து தம்மால் இசைந்தமட்டும் தானதருமங்களைப்பண்ணினால் அவர்களுக்குச் சகல பாபங்களும்போம் நீங்கும்படிப்பெருமான கடாட்சஞ் செய்தருளுவார்.

## ஏழாவது பாலாகதீர்த்த மகத்துவம்.

கேளுமையாநாரதரே அப்பால் சந்திரபுட்கரணிக்கு நிருதிமூலையில் காவேரிநதிக்குத் தென்மேற்கில்பாலாகதீர்த்தமென்றொருதீர்த்தமுண்டு அந்ததீர்த்தக்கரையில் தபசுசெய்துகுமாரக்கடவுள்சத்தியாகிய வேலாயுதத்தைப்பெற்றார் அந்ததீர்த்தத்துக்குரிஷிஅகஸ்தியர் அந்ததீர்த்தத்தில் எவனாகிலும் சித்தசுத்தியுடையவனாகி ஸ்நானஞ்செய்து பிராமணர்களுக்கு கோதானங்கொடுத்தால் அவனுக்கு மோட்சமுண்டாகும் அதுவுமல்லாமல் காமக்குரோதர்களாலிருக்கப்பட்ட துர்ச்சாவகாசத்தினாலுண்டான சகலதோஷங்களும்பரிகாரமாகும்படி பெருபாள் பிரகாசித்தருளுவார்.

## எட்டாவது கடம்பதீர்த்தமகத்துவம்.

கேளுமையா நாரதரே அப்பால்சந்திரபுட்கரணிக்கு நேர்வடதிசையில் கொள்ளிடக்கரையில் கடம்பதீர்த்தமுண்டு அந்ததீர்த்தக்கரையில் கடம்பவிருட்சங்கள் விஸ்தாரமாகவிருக்கும் அந்தவிருட்சத்தின்கீழிருந்து ஜனகமகாராஜன் வெகுநாள் வாசஞ்செய்து இஷ்டசித்திகளையும் மோட்சத்தையும்பெற்றான் அந்ததீர்த்தத்துக்குரிஷி ஜனகர் அந்ததீர்த்தத்தில்கருடாழ்வார் அதற்குதேவதை சதுர்முகப்பிரமா அவ்விடத்தில் புருஷோத்தமரென்கிறபெருமான் பிரமதேவனை நாபியில்வைத்துக்கொண்டு பள்ளிகொண்டிருக்கிறார் ஆகலாலே,

தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பிராமணர்களுக்கு அறுசுவைபதார்த்தங்களுடனே அன்னதானம்பண்ணுவித்தால் சகலபாவங்களும் நீங்கும் மேலும் ஒருவனிடத்தில் தானம்வாங்கினதோஷமும் தீரும்படி பெருமான் கிருபைசெய்வார்.

ஒன்பதாவது அம்பாதீர்த்தமகத்துவம்.

சௌனகமகாமுனிவரரே அப்பால் சந்திரபுட்கரணிக்கு நேர்ஈசானியமூலையில் வெள்ளிடத்துக்கு வடபாரிசத்தில் அம்பாதீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு அந்தத் தீர்த்தக்கரையில் ஒரு மாமரத்தை வைத்துப் பயிர்செய்து அந்தமரத்தின்கீழ் நெடுநாளிருந்து சூரியன் தபசுசெய்தான் அந்தத்தீர்த்தத்திற்கு ரிஷிவசிஷ்டர் அதற்குத்தேவதை சூரியன் அந்ததீர்த்தராட்சதர் விஸ்வசேனர் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி பிராமணர்களுக்குப் பூதானம் பண்ணினால் அவர்களுக்கு சகலபாவமும் நீங்கிவிடும அல்லாமலும் அவர்கள் தாய்தகப்பனைசெய்தபாவங்கள் பரிகாரமாகும்படி பெருமான் கடாட்சஞ்செய்தார்.

ஆகையால் ஸ்ரீரங்கநகரத்திற்குப்போய் ஸ்ரீரங்க விமானத்தைச்சேவித்தனன்மேற்சொல்லிய சுவாத்தினங்களிலும்ஸ்நானஞ்செய்த அந்த அர்த்தானாதிகளாகிய ரிஷிகளும்தேவதைகளும் மற்றவர்களுக்கும் பிரீதியாகிய முதற்சொல்லிய தானதர்மங்களைச் செய்து பிறகு காவேரிநதிக்கரையில்வந்து தேவதர்ப்பணம் பிதிர்தர்ப்பண முதலான அனைத்தும் கிரமமாகச்செய்து காவேரி ஜலத்தை இரண்டு கையினாலு மெடுத்து நான் அறிந்துசெய்தபாவங்களையும் அறியாமற்செய்தபாவங்களையும் பரிகரித்து அபரிமிதமான இந்தஜலம் என்சரீரத்திற் பரிசனமானவுடன் சகலசம்பத்துகளு முண்டாகவேண்டுமென்று சங்கற்பம்பண்ணி அந்தசலத்தை சிரசின்மேற் புரோட்சித்துக்கொண்டு பிற்பாடு அந்தக்காவேரியில ஸ்நானம்பண்ண வேண்டும் அதுவுமல்லாமல் எட்டுத்திக்குகளில எட்டுதீர்த்தங்களும் எட்டுவிருட்சங்களுமாயிருக்கின்றது இந்தச் சந்திரபுட்கரணி தீர்த்தமாத்திரமத்தியிலிருக்கின்றது அதனிடத்தில் ஸ்ரீரங்கநாயகர் விமானரூடராய் ஆதிசேஷசயனத்தில் பள்ளிகொண்டிருக்கிறார் எவனாவது அந்ததீர்த்தத்தில் மூழ்கினாலும் அதைக்கையினாலள்ளிச் சிரசின்மேல் ஸ்ரீரங்காவென்று புரோட்சித்துக்கொண்டாலும் அந்ததீர்த்தத்தைபானஞ்செய்தாலும் அதைத்தரிசித்தாலும் கைகளாற்பரிசித்தாலும் அதன் பெயரை வாக்கினால் வசனித்தாலும் செவிகளால் கேள்விப்பட்டாலும் அவனுக்கு சகலபாவங்களும் நீங்கிப்போகும் அல்லாமலும் மேலுலோகங்களுக்குப் போயிருந்து அவ்விடத்திலிருக்கப்பட்ட எரிவனங்களில் மூழ்குகிறகாலத்திலும் ஒருவன் இந்தச்சந்திரபுஷ்கரணியின் பேரைச்சொல்லி மூழ்குவானாகில் அவனுக்கு

மேற்சொல்லிய தீர்த்தத்தின் முழுகிலபலனே சித்தியா ம் மேலும் முற்கூறிய நவதீர்த்தங்களிலும் ஒருபகல் மூப்பது நாழிகைக்குள் ஸ்நானம்செய்து பிரதட்சண நமஸ்காரங்கள் செபம்தபம்தப்பாமல் ரங்கநாயகனையுஞ் சேவைபண்ணுவானாகில் அவனும் அவன்பிறந்த வமிசத்தில் இருபத்தொரு தலைமுறைகளில் வரும் பிர்மாக்களும் அவனுக்குப்பின் முப்பதுதலைமுறைகளில் வரும் புத்திரமித்திரர்களும் ஸ்திரீரங்கநாயகருடைய கிருபாகடாட்ச வீட்சண்ணியத்தில் பரமதவசிகளாவார்கள் மேலும் அந்தஸ்தலத்தில் ஏகாதசியினன்றைக்கு உபவாசமாயிருந்து நவதீர்த்தங்களிலு முழுகிப் பிரதட்சண நமஸ்காரஞ்செய்து ஸ்திரீரங்கவிமானத்தையும் பரமபாகவதர்களையுஞ்சேவித்து அன்றுராத்திரி முழுதும் கண்ணுறங்காம லிருந்து மறுநாள் உதயகாலத்திலும் முற்சொல்லிய தீர்த்தங்களில் முழுகி ஸ்திரீரங்கருடையசேர்வைசெய்து கொண்டு பிறகு அந்தஸ்தலத்திலேயே பாரணை பண்ணினால் அவனும் அவன் வமிசத்திலுள்ளவர்களும் வைகுந்தத்தில் நித்திய அயிஸ்வரியர்களாக வாழ்ந்திருப்பார்கள் இதற்கு சந்தேகமில்லை மேலும் அந்த ஒன்பது தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து பிண்டப்பிதிர்தர்ப்பணம்செய்வானாகில் அவனுடைய பெருமை இவளவென்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாது அநுசிரார்த்தம்பண்ணினதற்குச் சரியாகும் ஒருவன் அந்தஸ்தலத்திலிருக்கப்பட்ட பசுக்களுக்கு ஒளிவாய் பிலபிடுங்கிக்கொடுப்பானாகில் அவனுடைய பிதுர்தேவதைகள் வாய்சிரார்த்தம் பண்ணின சந்தோஷத்தையடைவார்களென்று பரமசிவம் திருவுளம் பற்றியருளினர் அதுகேட்டு நாரதபகவானும் எழுந்திருந்து சுவாமி பரமேஸ்வரர் தேவரீருடைய கிருபா கடாட்சத்தினால் ஸ்திரீரங்கமத்துவமாகியபுண்ணியசரித்திரத்தை ஆதியோடந்தமாக நான் ஐயந்திரிபறக் கேட்டுக் கிருத்தியனாயினேன் இனி இன்னுமொருவரிடத்திற்போய்கேட்க வேண்டிய சந்தேகமில்லை ஸ்ரீ கயிலாச பதியாகிய பரமசிவனுக்குப் பலமுறை நமஸ்காரங்கள்செய்து அர்க்கியபாத்திய ஆசமனமுதலான சகலோபசாரங்களுஞ் செய்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தம்முடைய ஆசிரமத்திற் போய்ச்சேர்ந்தார்.

இப்படிப்பட்ட மகத்துவமாகிய சரித்திரத்தை எவனாகிலும் எழுதுவானாகில் அவனுக்கு பெருமாள் சகலசம்பத்தும் அஷ்டஐசுவரியமும்கொடுத்தருளுவார் அல்லாமலும் அமாவாசை பவர்ணமி முதலான புண்ணியதினங்களில் ஸ்நானசந்தியா வந்தனங்கள் முடித்துக்கொண்டு பரிசுத்தராயிருந்து அந்தச்சரித்திரத்தைப் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் பெருமாள் அஷ்ட ஐசுவரியமும் ஆயுராரோக்கியம் கொடுத்திரட்சித் தருளுவா ரவர்களுக்குயாகாதி கிருத்தியங்கள் பண்ணின பலனும் கிடைக்கும் மேலும் இந்தச் சரித்திரத்தை விஷ்ணுதலங்களிலாவது புண்ணிய தீர்த்தங்களிலாவது படிப்பார்க்கு அவர்களுக்குச் சகலபாக்கியங்களுமுண்டாம் இங்

தச்சரித்திரத்தைப் பக்தியில்லாதவனிடத்திலும் தெய்வநிந்தைப் ப
ண்ணுகிறவனிடத்திலும் சோம்பலாய் கேட்கிறவனிடத்திலும் ஆசா
ரஹீனனிடத்திலும் படிக்கப்போகாது ஒருவேளை பொருள் சம்
பாதிக்கிற நிமித்தம் படித்தபோதிலும் அவனுக்குபாபமே அல்லது
புண்ணியமில்லை. இந்தசரித்திரத்தைக் காமக்குரோதமில்லாத சாந்த
சீலரிடத்திலுஞ் சிரத்தை பக்தியுள்ளவரிடத்திலும் கேட்கவேண்டிய
து அப்படிப்பட்டவர்களுக்கே சொல்லவும்வேண்டியது இந்தப்பிர
காரம் படிப்பவர்களும் சித்தபுத்தி யுடையவர்களாயிருப்பார்களா
கில் அவர்களுக்குச் சகலசஞ்சிதவினைகளும்விடுபட்டுப்போய் மோ
ட்சசம்பத்துண்டாகும் அல்லாமலும் அந்தச்சரித்திரத்தைப்பிராம
ணர்கள் கேட்டால் எக்கியஞ்செய்த பலனைப்பெருவார்கள்க்ஷத்திரி
யர்கள்கேட்டால் இராஜரீகத்தைப்பெருவார்கள் வைசியர்கள்கேட்
டால் தேவபக்தியைப் பெருவார்கள் சண்டைக்குப்போகிறவன் கே
ட்டால் செயத்தைப் பொருந்துவான் கெர்ப்பவதியான பெண்கள்
கேட்டால் நல்லபுத்திரனைப்பெறுவர்கள் கன்னிகையானவள்கேட்
டால் நல்லபுத்திரனைப் பெறுவாள் இந்தச்சரித்திரத்தை வைத்திரு
க்கிறவன் சித்தசுத்தியும் பக்தியும் புத்தியும் வித்தையும் சாந்தமும்
இல்லாதவனாயிருந்தாலு இந்தமகிமையினால் அவன்வீடு அளகாபு
ரியைப்போலவும் சுவர்க்கலோகம் போலவும் பிரகாசிக்கும். அவன்
மறுபிறவியில் புண்ணியஜென்மத்தைப்பெற்று ஸ்ரீரங்கநாயகருடை
ய கிருபாகடாட்சத்தினால் சகல ஐசுவரியமும் பெற்றுப் பரமபாக
வதனாக ஸ்ரீவைகுந்தத்தைப் பெறுவார்களென்றறிக.

ஸ்ரீரங்கமகத்துவம்-முற்றிற்று.

---